Sangathamil
# சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 41 | சர்வதேச மின் செய்தித்தாள் | ஜனவரி 15 2023







தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்


































**2023**

**விளம்பரத்துக்கு**

**அழையுங்கள்**

**437.345.4203**



**தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!**
**தமிழுக்கு நிலவென்று பேர் – இன்பத்**
**தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்...!**

– கவிஞர் பாரதிதாசன் –

*உறவுகள் அனைவருக்கும்*
*இனிய புத்தாண்டு, தமிழர் திருநாள் பொங்கல் நல்வாழ்த்துகள். – உலகவணிகம்*

Sangathamil
# சங்கத்தமிழ்

சர்வதேச மின் செய்தித்தாள்

**www.sangathamil.ca**

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**மக்களின் துன்ப துயரங்களில் பங்குகொண்டு, அவர்களின் சுமைகளை நாமும் தாங்கி, அவர்களின் கஷ்டங்களைப் போக்குவதற்குத் திட்டமிட்டுச் செயலாற்றுவதுதான் உண்மையான அரசியல்வேலை. இந்தப் புரிந்துணர்வுடன்தான் நாம் மக்கள் களத்தில் இறங்கி வேலை செய்ய வேண்டும்.**






## சங்கத்தமிழ்

**தொடர்புகளுக்கு**

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# பிரபாகரனின் பெருந்தளபதி

தீருவில், கடலென மக்கள். இந்திய அரசு தமிழீழத்தின் இதயத்தில் அடித்து வரத்திய பழைய நினைவைச் சொல்லிக் கொண்டு நிற்கும் பன்னிருவரின் நினைவுக் கோயிலைச் சுற்றியும், நிரவியும் மகக்ள்.



நெஞ்சங்களில் கோபம், அழுகை, கண்ணீர், சோகத்தை ஏற்றுக்கொள்ள முடியாமல் எழுந்த சினம். அன்புக்குரியவனை இழந்துவிட்ட தவிப்பு.

இதயத்தில் விழுந்துவிட்ட இரண்டாவது அடி, அதே தீருவில்.

கிட்டண்ணையும், அவர் தோழர்களும் கப்பலில்... படமாக... நம்பமுடியாத நிஜம்.

படத்திலும் கிட்டண்ணையின் முகத்தில் கனிவான பார்வை. தன் தலைவனை வரவேற்கும் மகிழ்ச்சியான சிரிப்பு.

அம்மா தன் இளையமகனின் இழப்பைத் தாங்க முடியாமல், மூத்த மகனைக் கட்டியணைத்து அழுதாள். அவளுக்குத் தலை வரும் மகன்தான். தேசம் அழுதது.

மக்கள் கூட்டம், தங்கள் நெஞ்சத்தில் வாழ்ந்தவனுக்கு அஞ்சலி செலுத்த வந்த தலைவனைப் பார்த்துக் கை அசைத்தது. உறுதி யான அசைவு, கண்ணீர் அலை களினூடே பிறந்த நம்பிக்கை.

“தலைவன் இருக்கிறான்” – கிட்டண்ணை அடிக்கடி சொன்ன வார்த்தைகள் அவை.

ஐந்து வருடங்களுக்கு முன்பு. சுதுமலை அம்மன் கோயில் முன்றிலில் இலட்சக் கணக்கான மக்கள் திரண்டிருந் தார்கள். முகங்களில் தலைவனைக் கண்ட மகிழ்ச்சி.

தலைவன் சொல்லப் போகும் வார்த்தைகளிற்காக ஏங்கி நிற்கும் நிமிடங்கள்.

“அடுத்ததாகத் தளபதி கிட்டு அவர்கள் பேசுவார்”! மக்களின் ஆரவாரம். ஆர்ப்பரிப்பு.

அவர்களின் தலைவனின் முன்பு, அவர்களின் தளபதி, மகிழ்ச்சிப் பிரவாகம். தங்கள் தளபதியில் தாங்கள் வைத் திருக்கும் அன்பைத் தலைவனுக்குக் காட்டும் துடிப்பு, உற் சாகம். அந்த ஆர்ப்பரிப்பிற்குள் வார்த்தைகள் தெளிவாக விழ வில்லை. ஒன்றிரண்டு மனதில் விழுந்தது; அப்படியே பதிந்தது.

“தலைவர் இருக்கிறார்; அவரை நம்புங்கள்”. ஒரு தூய உள்ளத் திலிருந்து வந்த சத்தியமான வார்த்தைகள். இன்றும் கூட அந்த வார்த்தைகளுக்குத்தான் எவ்வளவு உயிர்ப்பு இருக்கிறது!

கிட்டண்ணை. மக்களின் இதயங்களில் கூடு கட்டி வாழ்ந்த பறவை அது. அது எப்படி முடிந்தது? அதொன்றும் அதிசய மானதல்ல.

கிட்டண்ணை சிறந்த தொரு போராளி. வீரன். அவரின் துணிவு, வீரம், விவேகம், வேகமான செயல்... எல்லாவற்றையுமே மக்கள் இரசித்தனர். விரும்பினர். தாய்நாடு தன் குழந்தையில் வைத்த பாசம் அது.

மக்கள் பயந்து நடுங்கி உறக்கமற்று வழித்த காலம், வீதிக்கு வீதி செத்தழிந்த காலம் எல்லாம் மாறிப்போனது, கிட்டண் ணையின் காலத்தில்தான்.

“கோட்டையில் இருந்து ஆமி வெளிக்கிடுறானாம்” மறு கணம், அவசரமாக மேற்சட்டையைக்கூட ஒழுங்காக அணியாமல், கிட்டண்ணை அங்கு நிற்பார்.

“கிட்டர் நிக்கிறார்; இனிப் பயமில்லை“. மக்களின் மனங்களில் துணிவு பிறக்கும். இராணுவத்தினர் திரும்பி ஓடியதும் ஊர் முழுதும் வெற்றிக் களிப்பு. மகிழ்ச்சிக் கொண்டாட்டம். இது அவர்களின் பிள்ளைகள் பெற்ற வெற்றி.

பலாலி, நாவற்குழி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, ஆனையிறவு என்று எங்கு இராணுவத்தினர் புறப்பட்டாலும், அங்கு கிட்டண்ணை நின்றார். இரவிலும் பகலிலும் ஒவ்வொரு நாளும் சண்டை.

அந்தக் காலங்களில்தான், கிட்டண்ணை மக்களின் மனங் களில் வாழத் தொடங்கினார். அது நிரந்தரமான – அழிவற்ற – வாழ்வு; கோபித்தாலும், சண்டையிட்டாலும் சாகாத வாழ்வு.

வீதிகளின் ஓரங்களில், வயது முதிர்ந்த கிழவர்களுக்கு அருகில், விரித்து வைத்திருக்கும் வெற்றிலைச் சரையிலிருந்து பாக்குச் சீவலை எடுத்துக் கடித்தபடி, கிட்டண்ணை நாட்டு நடப்புகளைப் பேசிக் கொண்டிருப்பார். சில மாலை நேரங்களில் இது நடக்கும். கிழவர்களுக்கோ தாராளமாக நேரமிருந்தது. கிட்டண் ணைக்கோ அப்படி இல்லை. ஆனாலும் அந்த மாலை நேரங் களை அவர் விரும்பினார்.

அந்த முதியவர்களின் நிலையோ சொல்லத் தேவை இல்லை. அவர்கள் பெரிதும் மதித்த வீரன் அவர்களுக்கு முன்னால்... உண்மையில் அந்த நேரங்களில் அவர்கள் மிகவும் பெருமைப் பட்டார்கள்.

வீட்டு முற்றங்களில், பின் கோடிகளில், வெற்றுடம்பில் இழுத்து முடியப்பட்ட காற்சட்டைகளுடன் “சிறிய கிட்டுக்கள்” நிற்பார்கள். இடுப்பில் கிட்டண்ணையின் “357 மக்னம்” கூழற் துப்பாக் கியைப் போன்று இழுபட்டபடி, வளைந்த தடி ஒன்று தொங்கும்.

கள்ளன் – பொலிஸ் விளையாட்டெல்லாம் மறைந்து, புலிகள் – இராணுவ விளையாட்டுத் தொடங்கி இருந்தது.

விளையாட்டிலும் “சின்னக் கிட்டுகள்” ஒரு நாளும் தோற்ப தில்லை. வெற்றி; என்றும் வெற்றிதான். விளையாட்டில் கூட கிட்டு மாமா தோற்பதை, அவர்கள் விரும்புவதில்லை.

இப்படித்தான் கிட்டண்ணை எல்லாரின் நெஞ்சங்களிலும் வாழ்ந்தார். அதனால்தான் அவருக்கு ஆபத்து என்ற போது மக்கள் துடித்தனர்.

அது 1987 இன் ஆரம்பம். வடமராட்சியில் இராணுவத் தினருடன் நடந்த சண்டை ஒன்றில் கிட்டண்ணையின் கையில் பட்டிருந்த காயம் குணமாகி, சில நாட்கள் சென்றிருந்தன.



அப்போதுதான், தேசவிரோதிகளால் கிட்டண்ணைக்குக் குண்டெறியப்பட்டது.

குண்டு வெடித்தது தெரியும். ஆனால் கிட்டண்ணைக்கு என்ன நடந்ததென்பது மக்களுக்குச் சரியாகத் தெரியாது.

தமிழீழம் எங்கும் அதிர்ச்சி பரவியது. மக்கள் சிரிப்பை மறந்து சோகத்தில் ஆழ்ந்து போனார்கள். தமிழ் நிலம் எங்கும்

# எங்கள் போராட்டப் படகு இப்படித்தான். தாங்க முடியாத இழப் புகள் வரும்போது ஒரு கணம் தயங்கி நிற்கும். பின் "தலைவன் இருக்கிறான்" எனத் தொடர்ந்து செல்லும்...

கவலையில் தவித்தது.

உயிருக்கு ஆபத்தில்லையாம் என்ற பொழுது, ஓரளவு ஆறுதலாக இருந்தது. ஆனாலும் கவலை முற்றாகத் தீரவில்லை.

ஏனெனில் கிட்டண்ணை ஒரு காலை இழந்திருந்தார்.

1987, மே நாள், மக்கள் பெருமளவில் திரண்டிருந்தனர்.

"கிட்டண்ணை பேசுவதற்கு வருகிறாராம்". மக்கள் முகங்களில் மகிழ்ச்சி; கிட்டண்ணையைப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல்.

கிட்டண்ணை பேசினார். தரமானதொரு பேச்சாளனுக்குரிய பேச்சு. அது மக்களின் பங்களிப்புக்குரிய பாராட்டு. ஒன்றிணைந்த மக்களை வாழ்த்திய பேச்சு.

அன்று மக்களிடையே உற்சாகமும், மகிழ்ச்சியும், கண்ணீரும் கரைபுரண்டு ஓடியது.

----



கிட்டண்ணையின் வீரத்தைப் போலத்தான் கோபமும் பிரசித் தமானது. ஒரு தாயின் கோபத்தைப் போல இரசித்து ஏற்றுக் கொள்ளும் கோபம். மறு கணம் எங்கென்று தெரியாது மறைந்து விடும் கோபம்.

தோழர்களுக்கு அடியும் விழும். ஆனாலும் ஒருவரும் கோவிப் பதில்லை. கிட்டண்ணையில் உயிரையே வைத்திருக்கும் தன்மையைக் குறைப்பதும் இல்லை. ஏனெனில் அவரின் கோபத்தினுள்ளிருக்கும் கனிவான இதயத்தை அவர்கள் அறிவார்கள்.

சண்டைகளின்பொழுது யாராவது ஒரு தோழன் காயமடைய நேரிட்டால் அந்த மனிதர் துடிக்கும் துடிப்பையும், யாராவதொரு தோழனை இழந்துவிட்டால் முகம் கறுத்துத் தவித்து அழும் அழுகையையும், அவர்கள் கண்டவர்கள்; சேர்ந்து அனுபவித் தவர்கள்; அதனால் தான் கிட்டண்ணையில் யாரும் கோபிப் பதில்லை. அவரின் கோபம் தேவையானது. இயக்கத்தின் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் பேணுவதற்கு அவசிய மானது.

கோபத்தைவிட அவரின் உள்ளே இருந்த கனிவும், திறமையும் மனிதர்களை வென்றன.

குறிபார்த்துச் சுடுவதில் கிட்டண்ணை வல்லவர். இலக்கு பொது வாகத் தவறுவதில்லை. அது அவருடைய எதிரிகளுக்குக் கூடத் தெரிந்த விடயம். எங்களூர்ப் பெரியவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்ளும் பெருமை.

ஆபத்தான வேளைகளில் கூட பதற்றமற்று, நிதானமாகத் துப்பாக்கியைக் கையாள்வர். சண்டைகளின்போது தேவையற்ற துப்பாக்கி இயக்கத்தை அவர் ஒருபோதும் செய்ததில்லை.

இதெல்லாவற்றிற்கும் அவருடைய முதலாவது தாக்குதலே சான்றாக நிற்கிறது.

உமையாள்புரம். நிலக் கண்ணிகளைப்பொருத்திவிட்டு, இராணுவத்தினரின் வருகைக்காக அவர்கள் பத்துப்பேர் காத்திருந்தார்கள். எல்லாம் சரி, இராணுவ வண்டிகள் வருவது தெரிந்தது.

கண்ணிவெடிகளைக் கையாளும் தொழில்நுட்ப அறிவைப் பெறாதகாலம். இராணுவ வண்டிகளைப் பார்த்து மிரண்டு ஓடி வந்த ஆட்டுக்குட்டியின் பாய்ச்சலுக்குக் கண்ணிகள் வெடித்தன.

புலிகள் வெவ்வேறு திசைகளால் பின்வாங்கினார்கள்; அல்லது தப்பி ஓடினார்கள்.

வீதிக்கு அருகாக தண்டவாளம் இருந்தது. அதன் இருபக்கமும் வெட்டை.

கவசவாகனங்கள் இரண்டு, துப்பாக்கி ரவைகளை அள்ளி வீசிக்கொண்டு நெருங்கி வந்தன.

ஒரு சிலர் விழலாம் என்ற நிலை கிட்டண்ணை தண்டவாளத்தில் நின்று திரும்பி, தனது ஜி.3 துப்பாக்கியால் கவச வாகனத்தை நோக்கிச் சுட்டார்.

தவறாத குறி. கவசவாகனத்தின் சாரதி காயப்பட்டான். அவ் வாகனம் துரத்தி வந்த வேகத்திற்கு சரிந்து புரண்டது.

அவரது முதலாவது களமும் சாதனைதான்.

அதன் பின்பு, கிட்டண்ணை கண்ட ஒவ்வொரு களமும் அவரது வீரத்தை வெளிப்படுத்தி நின்றது; பகைவர்களைக் கலங்கடித்தது.

கிட்டண்ணை சிறந்ததொரு வீரன். அதைப் போன்றுதான், கமராவைத் தூக்கினால் சிறந்த தொரு படப்பிடிப்பாளன். அது தொலைக்காட்சிக் கமராவாக இருந்தாலும் சரி...

சிறந்ததொரு இலக்கியவாதி. எழுத்தாளன். போராளிகள் தொடர்பாக - போர்முனையில் அவர்களின் வாழ்க்கை தொடர்பாக - உள்ளத்தைத் தொட்டு விடும் உணர்வோடு அவரின் எழுத்துக்கள் வெளிப்படும்.

போராட்ட வாழ்வின் தத்துவமும், நிதர்சன தரிசனமும் அவர் எழுத்துக்களில் பரவிவிழும். எல்லாவற்றுக்கும் மேலாக அவரின் உயிர்போன்ற மக்கள் மீதான நேசம், அவர் எழுத்துக்களில் பரிணமிக்கும்.

----

சரி, இதெல்லாம் போக கிட்டண்ணையை நாங்கள் இழந்துதான் போனோமா...? உண்மைதான். ஏற்றுக்கொள்ள முடியாத தெளிவான உண்மை.

"நாம், ஏராளமான மரணத்தைக் கண்டுவிட்டோம். தோழர்களின் சாவு எம்மைப் பாதிக்காது. வீரமரணம் எமக்குப் பரிச்சயமானது. சாவைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்றுதான் நாம் இறுமாந்திருந்தோம். ஆனால் உன் மரணத்தைச் சந்தித்தபோது எம் இதயம் உருக்குலைந்து, தளர்ந்து... எம் உள்ளம் சூனியமாகியதை நாம் எப்படி வெளிப்படுத்த முடியும்"? மேஜர் அல்பேட்டின் இழப்பை அடுத்து அவரைப்பற்றிய நினைவுக் குறிப்பில் கிட்டண்ணை இதை எழுதினார்.

நாங்கள் கூட, ஒவ்வொரு போராளியின் இழப்பின் பின்பும் அழுது முடிய இதைத்தான் சொன்னோம். கிட்டண்ணை இதை எழுதுகையில், எம்மில் சில நூறு பேரைத்தான் நாம் இழந்திருந்தோம். இன்று, ஆயிரக் கணக்கான தோழர்களை நாம் இழந்து விட்டோம். எங்கள் இதயங்கள் பலமுறை வெந்து தணிந்து விட்டன. ஆனாலும் இன்றுகூட எம்மால் இழப்புகளைத் தாங்க முடிவதில்லையே! அதிலும் கிட்டண்ணையை...

"கிட்டண்ணையும் அவர் தோழர்களும் வந்த கப்பலை இந்தியர்கள் வழிமறித்துவிட்டார்களாம்" - நெஞ்சில் அடித்தது போன்ற செய்தி.



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# வீரவணக்கம்

## கேணல் கிட்டு
## லெப்.கேணல் குட்டிசிறி
## மேஜர் மலரவன்
## கப்டன் ஜீவா
## கப்டன் குணசீலன்
## கப்டன் நாயகன்
## கப்டன் றொசான்
## லெப். அமுதன்
## லெப். நல்லவன்
## லெப். தூயவன்





“இந்தியர்கள் விடமாட்டார்கள். அதுவும் கிட்டண்ணையை நிச்சயமாக விடமாட்டார்கள்”.

“அணு அணுவாகத் திலீபன் சாகும்வரை பார்த்துக்கொண்டிருந்த இந்தியா; தமிழர்கள் துடிக்கையிலும் புலேந்தி அம்மானையும் குமரப்பாவையும் சாகடித்த இந்தியா! தன் மரண வலைக்குள் சிக்கிவிட்ட கிட்டண்ணையை நிச்சயமாக விடாது”! தெரிந்த செய்திதான். ஒவ்வொருவரின் மனமும் சொன்ன செய்தி.

அவர்களுக்கு தேவையெல்லாம் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் அமுக்கப்பட்டவேண்டும்; அழிக்கப்பட வேண்டும். அதற்காக அவர்கள் எதுவும் செய்வார்கள்.

சர்வதேசச் சட்டங்களும் நடைமுறைகளும் இந்திய அரசுக்குத் தேவையற்றன. அதை மாற்றவும், திரிக்கவும் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். நேர்மையும், மனச்சான்றும் அந்தத் தேசத்தின் ஆளும் வார்க்கத்திற்கு இயல்பாகவே இல்லை.

சரணடைவதா! அது புலிகளின் மரபு இல்லை. அதுவும் கிட்டண்ணை! தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றின் ஒரு பகுதி - தமிழர்களின் மானச் சின்னம் - அவர்களின் மாபெரும் தளபதிகளில் ஒருவன் - தலைகுனிவது... சித்திரவதைப்பட்டு, அவமானப்பட்டுச் சாவது...

“கிட்டண்ணை காப்பாற்றப் பட வேண்டும்”. தேசத்தின் இதயம் துடித்தது. தமிழீழக் கரையெங்கும் ஆயிரமாயிரம் தோழர்கள் நின்று தவித்தார்கள்.

“எமது சிறிய படகு, அலைகளால் தூக்கி மேலே மேலே வீசப்பட வேகம் தடைப்படுகிறது. ஆனால், பாரிய நேவிப் படகுகள் கடல் அலைகளை வெட்டிக் கிழித்துக்கொண்டு பாய்ந்து வருகின்றன.

அவற்றிலிருந்து சிவப்பு நிறமாகச் சீறிக்கொண்டு குண்டுகள் வரத் தொடங்கின.

ஓட்டம், ஓட்டம், ஜீவ மரண ஓட்டம்.

நேவிப் படகிலிருந்து பாய்ந்து வந்த “ரேசர்” ரவுண்ஸ் ஒன்று எமது படகின் எரிபொருள் தாங்கியைத் துளைக்க... படகு தீப்பற்றி, பின்பு வெடித்துச் சிதறுகிறது.

பருத்தித்துறையிலே இன்பருட்டிக்கு நேரே எம்படகு துரத்தப்படுவதை அறிந்து, எம் வீரர்கள் படகு தப்பி வரும் என்று பார்த்துக்கொண்டிருக்க, எம்படகு எம் கண்முன்பே வெடித்துத் தீப்பற்றி எரிவதைக் கண்டோம்.

ஆனால், செல்லமுடியாது. ஏன்! அது தரையில்லை; ‘கடல்’.

பல வருடங்களுக்கு முன்பு சிறீலங்கா கடற்படையால் எமது தோழர்கள் வந்த படகு மூழ்கடிக்கப்பட்ட பொழுது, “திரை கடல் ஓடினோம் - திரவியம் தேடி அல்ல” என்ற தலைப்பில், கிட்டண்ணை இப்படித்தான் எழுதினார்.

ஆனால் இன்று... நீண்ட தொலைவில், இந்திய வல்லாதிக்கப் பிடிக்குள் கிட்டண்ணை... நாங்கள் செல்ல முடியாது. ஏன்?

கடலில், புலிகளின் கப்பலைச் சுற்றி இந்தியப் போர்க்கப்பல்கள். சரணடைய வேண்டும்; அல்லது அந்தப் பாரிய போர்க்கப்பல்கள், சமாதான நோக்கத்தோடு ஆயுதங்களற்று வந்த புலிகளின் கப்பலை மூழ்கடிக்கும். பின்பு, தங்கள் கடல் எல்லைக்குள் நுழைந்து தமது போர்க்கப்பலைத் தாக்கவந்த புலிகளின் கப்பலை மூழ்கடித்ததாகக் கதையினை உருவாக்கும்.

இந்திய அதிகாரிகளும் செய்தி நிறுவனங்களும் பொய் சொல்வதில் வல்லவர்கள். புலிகளின்மீது இலகுவாகப் பழி சுமத்தப்படும்.

“சரணடையப் போவதில்லை” சாவு நிச்சயமாகிப் போனது. ஆனால் அந்தச் சாவு எதிரிகள் தலைகுனியும் சாவாக இருக்க வேண்டும்; சரித்திரம் படைக்க வேண்டும்; தாய் நிலத்தைத் தலை நிமிரச்செய்ய வேண்டும்.

சண்டைக் களங்களில் எல்லாம் கிட்டண்ணையைக் காப்பற்ற, நூற்றுக்கணக்கான தோழர்கள் நின்றார்கள். ஆனால், இன்று...

குட்டிசிறி அருகில் இருக்கிறான். அவன் சின்ன வயதில் இயக்கத்தினுள் வந்தவன். அதனால்தான் அவனுக்கு அந்தப் பெயர். அவன் பெரிய ஆளாக வளர்ந்த பின்பும் அந்தப் பெயர் மாறவே இல்லை.

இவன் அழுதிருப்பான்; தனக்காக அல்ல கிட்டண்ணைக்காக. அவரில் அவன் உயிரையே வைத்திருந்தான். தன் சாவுக்காக அந்த உறுதிமிக்கவன் ஒருபோதும் கலங்கியவனில்லை.

இப்போது கலங்கி இருப்பான். மற்றத் தோழர்களும் கிட்டண்ணையைக் காப்பாற்ற முடியாமல் போகிறதே எனத் தவித்திருப்பார்கள். ஆனால் பிரச்சினை எல்லாரின் கைகளுக்கும் மேலே சென்றிருந்தது.

இந்திய வல்லாதிக்கப் பேய்கள் இறங்கி வரப்போவதில்லை.

எங்கள் தொலைத் தொடர்புக் கருவி கப்பலிலிருந்து வரும் செய்திக்காகக் காத்திருந்தது. தேசம் துடித்தது. தலைவர் தவித்துக்கொண்டிருந்தார். அவர் வளர்த்தெடுத்த தளபதி - கடினமான காலங்கள் எல்லாம் தோளோடு தோள் கொடுத்துழைத்த தோழன் .

சாவின் விளிம்பில்...

முடிவு உறுதியாகியது. ஒரு கணத்தில் கப்பல் சிதறும்; காணாமற் போகும்.

கப்பற் சிப்பந்திகள் வெளியேறினார்கள்.

தேசம், அம்மா, அண்ணன், அன்பான மனைவி, தன்னில் உயிரையே வைத்திருக்கும் தலைவன் எல்லாருமே கிட்டண்ணையின் நெஞ்சில் ஒரு கணம் வந்துவிட்டுச் சென்றிருக்கலாம்; ஆனால் வெளித் தெரியாது.

விடைபெற்றிருப்பார்கள் - தேசத்திடமிருந்து, தோழர்களிடமிருந்து, தலைவனிடமிருந்து...

கடற்கரைக் கிராமத்து வீடொன்றில் கப்பலுடன் தொடர்பில் இருந்த தொலைத் தொடர்புக் கருவி, நீண்ட நேரம் காத்திருந்தது. ஏதாவது செய்தி வராதா... வருகிறதா...

“கிட்டண்ணையை இழந்து விட்டோம்”.

கடல் ஆர்ப்பரித்தது. அலைகள் எழுந்து இதயத்தில் அடித்தன. தேசத்தின் நெஞ்சு துடித்தது; தவித்தது; கதறி அழுதது; ஒரு கணம் தயங்கி நின்றது.

தாங்க முடியாத இழப்பு.

எங்கள் போராட்டப் படகு இப்படித்தான். தாங்க முடியாத இழப்புகள் வரும்போது ஒரு கணம் தயங்கி நிற்கும். பின் “தலைவன் இருக்கிறான்” எனத் தொடர்ந்து செல்லும்.

அது கிட்டண்ணை சொல்லித் தந்த பாடம்!

நன்றி: விடுதலைப்புலிகள் - தை, மாசி 1993

# தமிழீழ செய்திகள்




## எம்.கே. சிவாஜிலிங்கத்தை சிறீலங்கா நீதிமன்றம் அழைப்பு!

ஜனவரி 01, 2023

தீலிபனின் நினைவு தினத்தை அனுஸ்டித்தமை தொடர்பாக எம்.கே சிவாஜிலிங்கத்தை 2023 ஜனவரி மாதம் 11ம் திகதி காலை 8 மணிக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு சமூகம் அளிக்குமாறு நீதிமன்ற கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையில் உள்ள அவரது வீட்டுக்கு நேற்றைய தினம் சென்ற பொலிஸார் நீதிமன்ற கட்டளையை வழங்கியுள்ளனர்.

தியாகி திலீபனின் நினைவுதினத்தை முன்னிட்டு நீதிமன்ற தடையை மீறி தீலிபனின் நினைவு தினத்தை அனுஸ்டித்த குற்றச்சாட்டின் கீழ் எம்.கே.சிவாஜிலிங்கம் கோண்டாவில் அன்னங்கை ஒழுங்கையில் வைத்து கடந்த 2020 செப்டம்பர் 15ம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

நீதிமன்ற தடையுத்தரவை மீறியமை மற்றும் தடை செய்யப்பட்ட அமைப்பு ஒன்றின் உறுப்பினரை நினைவு கூர்ந்தமை உள்ளிட்ட குற்றசாட்டின் கீழ் யாழ். நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட எம்.கே. சிவாஜிலிங்கத்தை மன்று எச்சரித்து 2 இலட்ச ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் விடுவித்திருந்தது.

இது தொடர்பில் எம்.கே சிவாஜிலிங்கத்தை தொடர்பு கொண்டு கேட்ட போது,

தீலிபனின் நினைவு தினத்தை அனுஸ்டித்தமை தொடர்பாக கைது செய்து 24 மணி நேரம் தடுத்துவைக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தை வழக்கில் புகுத்த கூடிய வகையிலே பொலிசார் முயற்சிகள் எடுத்ததை நான் அறிந்தேன்.

பின்னர் சாதாரண சட்டத்தின் கீழ் முன்னிலைப்படுத்தப்பட்டேன் எது எப்படி இருந்தாலும் கடந்த ஆண்டு நடைபெற்ற விசாரணையின் போது பயங்கரவாத சட்டத்தின் கீழ் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்ய யோசித்து இருக்கின்றோம். சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு இதன் கோவை அனுப்பப்பட்டு இருக்கின்றது என யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் பொலிசார் தெரிவித்தனர்.

அந்த அடிப்படையில் நேற்றைய தினம் எனது வீட்டிற்கு வந்த பொலிசார் எனக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தின் நீதிமன்ற கட்டளையை வழங்கிச் சென்றனர்.



யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற செயலுக்காக யாழ்ப்பாணத்தில் உயர்நீதிமன்றம் இருக்கத்தக்கதாக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நோக்கம் என்ன?

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்தார்களா அல்லது பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒத்ததாக புலிகளின் மீளுருவாக்கம் போன்ற குற்றச்சாட்டுகளை சுமத்தப் பட்டிருக்கிறதா என்பது குற்றப்பத்திரிகை வழங்கிய பின்னரே தெரியும்.

பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் என கூறப்படும் போது இவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளன என தெரிவித்தார்.

வல்வெட்டித்துறையில் உள்ள அவரது வீட்டுக்கு நேற்றைய தினம் சென்ற பொலிஸார் நீதிமன்ற கட்டளையை வழங்கியுள்ளனர்.

## சிங்கள இராணுவத்தினர் வசம் உள்ள இந்து ஆலயங்கள் விடுவிக்கப்படவேண்டும்!

ஜனவரி 01, 2023

மக்கள் பிரச்சினையை தீர்ப்பதற்காக ஒன்று கூடிய தமிழ் கட்சிகள் அடுத்த தேர்தலை பற்றி சிந்திப்பது வேடிக்கையாகவுள்ளது என தெரிவித்த கலாநிதி ஆறுதிருமுருகன் அரசாங்கம் அறிவித்துள்ள நல்லெண்ண முயற்சிகளுக்காக மக்களின் பிரச்சினைக்காக ஒன்றுகூடுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடாத்திய ஊடக சந்திப்பிலே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் பிரச்சினையை தீர்ப்போம் என ஒன்று கூடி உள்ள பிரதிநிதிகள் அதனைக் கதைக்காது அடுத்த தேர்தலுக்கு யார் யாருடன் கூட்டு சேர்வது எந்த கட்சியுடன் சேர்வது என்பதை கதைக்கிறீர்கள் நீங்கள் பலகட்சியாக இருப்பதை பற்றி மக்களுக்கு அக்கறை இல்லை ஒற்றுமையாக மக்கள் பிரச்சினையை தீர்க்கவேண்டும். மக்கள் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒரே குரலாக ஒலிக்க வேண்டும். உங்கள் பிரச்சினைகளை ஊடகங்களுக்கு வெளிப்படுத்துவது வேடிக்கையாக உள்ளது.

மக்கள் பிரச்சினையை தீர்ப்பதாக இருந்தால் உங்கள் கோபதாபங்களை ஒதுக்கி வைத்து விட்டு மக்களின் அனைத்து பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு முன்வர வேண்டும். காணிப்பிரச்சினையை விடுவிப்பதற்கு ஒன்



றாக குரல் கொடுங்கள்.

கடந்த 25 வருங்களுக்கு மேலாக மக்களின் நிலங்கள் இராணுவத்தினரின் பயன்பாடுகளில் இருக்கின்றன. இந்த காணிகளில் பல இந்து ஆலயங்களும் காணப்படுகின்றன. இந்த ஆலயங்களில் வழிபாடுகளை மேற்கொள்ளுமாறு பல ஆளுநர்களிடம் அதிகாரிகளிடம் அரச தலைவர்களிடம் கோரிக்கை விடுத்தும் பயனலிக்கவில்லை இதற்காக குரல் கொடுத்தும் பலனில்லை.

பல இந்து ஆலயங்களுக்கு அருகாமையில் புதிதாக பௌத்த பகவானை கொண்டுவந்து இருத்தியுள்ளதை நாங்கள் கண்டுள்ளோம்.

ஆனால் மக்கள் வழிபடவிடுமாறு பல கோரிக்கைகள் முன்வைத்த போதும் அதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையே காணப்பட்டது .

இத்தகைய நிலையில் தற்போதைய ஆட்சியாளர்களிடமிருந்து நல்லெண்ண முயற்சியாக பல விடயங்கள் இடம்பெறவுள்ளதாக கருத்துக்ககள் வெளிவந்துள்ளது. குறிப்பாக காணிகளை விடிவிற்கவுள்ளதாக ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் கூறியுள்ளார்கள் .

இதுமட்டுமன்றி இராணுவத்தினர் அதிகமாக இருப்பதால் அவர்களை குறைக்க வேண்டும். என்று பகிரங்கமாக தென்னிலங்கையிலே குரல் கொடுத்துவருகிறார்கள்.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இந்து ஆலயங்கள், சித்தர்களின் சமாதிகளை சேதப்படுத்தி ,சின்னாபின்னமாக்கி இராணுவத்திற்கான கட்டடங்களையும், பல மாளிகைகளையும் கட்டிவைத்துள்ளார்கள்.

இவற்றின் சாபம்தான் இன்று இலங்கையில் பொருளாதார தடைகளும், நோய்களும் அதிகரித்துள்ளது. இது தெய்வ சாபமாகும். எனவே அனைத்து ஆலயங்களையும் விரைவாகவிடுவிக்க வேண்டும்.

இத்தகைய நிலையில் இராணுவ பிடியில் உள்ள மக்களின் காணிகள் இந்து ஆலயங்களை விடுவிற்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன். இந்த நிலையில் தமிழ் கட்சிகள் ஒற்றுமையாக குரல்கொடுக்க முன்வருமாறு வேண்டுகின்றேன் என்றார்.

## ஒரு கோடி தாவரங்கள் நடுகைத் திட்டம் யாழ். கைதடியில் ஆரம்பம்!

ஜனவரி 01, 2023

தற்போது புலம்பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்து வரும் யாழ்.பண்டத்தரிப்பைச் சேர்ந்த சமூகச் செயற்பாட்டாளர் அமிர்தலிங்கம் விஜயனின் நிதிப் பங்களிப்பில் இலங்கை முதல் உதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் ஒரு கோடி தாவரங்கள் நடுகைத் திட்டம் புத்தாண்டு நன்னாளான ஞாயிற்றுக்கிழமை (01.01.2023) யாழ்.கைதடியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்று முற்பகல்-11 மணியளவில் யாழ்.கைதடிப்



பிள்ளையார் ஆலய முன்றலில் இலங்கை முதல் உதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையின் தேசிய ஆணையாளர் வை.மோகனதாஸ் தலைமையில் மேற்படி திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து ஆலயச் சூழலில் பயன்தரு மரக் கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன.

இதேவேளை, மேற்படி நடுகைத் திட்டம் வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் படுகொலை செய்யப்பட்ட 5 மாணவர்களின் 17ம் ஆண்டு நினைவேந்தல்!

ஜனவரி 02, 2023

திருகோணமலையில் ஐந்து தமிழ் மாணவர்கள் மீதான இலங்கை அரச படைகளின் படுகொலையின் 17ம் ஆண்டு நினைவேந்தல் இன்றையதினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

வல்வெட்டித்துறையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் நினைவேந்தல் இடம்பெற்றது.

இதன்போது ஐந்து மாணவர்களின் உருவப்படத்திற்கு சுடரேற்றி அஞ்சலிக்கப்பட்டது.

2006ம் ஆண்டு ஜனவரி மாதம் 2ம் திகதி மாலை திருகோணமலை கடற்கரை பகுதியில் பொழுது போக்குக்காக கூடியிருந்த ஐந்து மாணவர்களை விசேட அதிரடிப் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டு காந்தி சிலை சுற்று வட்டத்திற்கு அருகாமையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர்.



தமிழ் இனப் படுகொலை உட்பட்ட சர்வதேசக் குற்றங்களுக்கான குற்றவாளிகளைச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி நீதியைப் பெறத் தொடர்ந்து போராடுவோம் என தெரிவித்த எம்.கே.சிவாஜிலிங்கம் இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தமிழ்த் தேசிய இனம் தனக்கே உரித்தான சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமா? சுயாட்சியா? என்ற பொதுசன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்த முன் வருமாறு சர்வதேச சமூகத்துக்கு அழைப்பு விடுத்தார்.




# "ஆக்கிரமிப்பு இராணுவமே மாவீரர் துயிலும் இல்லங்களை சிதைக்காதே"

ஜனவரி 04, 2023

'ஆக்கிரமிப்பு இராணுவமே மாவீரர் துயிலும் இல்லங்களை சிதைக்காதே சிறீலங்கா இராணுவமே எமது மண்ணில் இருந்து வெளியேறு' என்ற கோஷங்களை எழுப்பியவாறு குறித்த வாசகம் எழுதிய பதாதையை கையில் ஏந்தியவாறு மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் கவனயீர்ப்பு போராட்டம் புதன்கிழமை (04) மேற்கொள்ளப்பட்டது.

கிரான் தரவை மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழுவினரால் ஒழுங்கமைக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான ப.அரியநேத்திரன் ஞா.சிறிநேசன், மாநகர மேயர் தி.சரவணபவன் செங்கலடி பிரதேச சபை தவிசாளர் சி.சர்வானந்தன் செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் சி.வவானந்தன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் மாவட்ட பொறுப்பாளர் த.சுரேஸ் ஏற்பாட்டு குழுவின் உறுப்பினர்களான கு.வி.லவக்குமார் எஸ்.நிதர்சன் மாவீரர்களின் உறவுகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

துயிலும் இல்லத்துக்கு முன்பாக ஒன்று கூடியவர்கள் "இராணுவமே வெளியேறு", "துயிலும் இல்லங்களை அபகரிக்காதே", "வன இலகா என்ற போர்வையில் நில ஆக்கிரமிப்பு செய்யாதே", "மாவீரர்களை அவமதிக்காதே", "எங்கள் நிலம் எமக்கு வேண்டும்", "ரணில் அரசே பிள்ளையும் கிள்ளி தொட்டிலும் ஆட்டாதே" போன்ற கோஷங்களை எழுப்பி தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு வன பாதுகாப்பு திணைக்களம், "தொப்பிகல ஒதுக்கு காடு" என பெயர் பொறித்து துயிலும் இல்லத்தில் திடீரென நடப்பட்டதாக கூறப்படும் பெயர் பலகையையும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் கற்கலால் எறிந்து சேதப்படுத்தி அப்பகுதியில் இருந்து பிடுங்கி அகற்றினர். அங்கு நடப்பட்டிருந்த மரக்கன்றுகளும் பிடுங்கப்பட்டன.

கிரான் தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் கடந்த நவம்பர் மாதம் 2022 ஆம் ஆண்டு 25 ஆம் 26 ஆம் திகதிகளில் மாவீரர் தினம் தொடர்பான பதாதை காட்சிப்படுத்தப்பட்ட போது அவை கிழித்தெறியப்பட்டிருந்தன.

பின்னர் குறித்த பிரதேசத்தில் மரக்கன்றுகள் நடுவதற்கான ஏற்பாடுகளை அரச இராணுவ புலனாய்வாளர்கள் மேற்கொண்டாக தெரிவித்து தரவை ஏற்பாட்டுக் குழுவினருக்கும் புலனாய்வு பிரிவினருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

மரக்கன்றுகள் நடும் விடயத்திற்கும் தமக்கும் தொடர்பில்லையென வாழைச்சேனையில் அமைந்துள்ள வன இலகா திணைக்கள அதிகாரி தெரிவித்திருந்தார்.

தற்போது அதே இடத்தில் குறித்த திணைக்கள அமைச்சின் பெயர் தாங்கிய பெயர் பலகை இடப்பட்டு மரக்கன்றுகளும் நடப்பட்டுள்ளன.




இவ்விடயம் தொடர்பாக இரு சாராருக்கும் இடையில் மாறி மாறி சச்சரவுகள் இடம்பெறுவது தொடர் கதையாகவுள்ளது. மேற்படி விடயத்தினை கண்டித்தும் குறித்த செயற்பாட்டினை நிறுத்தி தருமாறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

எனவே மாவீரர் துயிலுமில்லங்களை ஆக்கிரமிப்பு செய்யும் செயற்பாடுகளை அரசாங்கம் கைவிடும் வரையில் அரசாங்கத்துடனனான பேச்சுவார்த்தைக்கு செல்வதில்லை என்ற தீர்மானத்தை தமிழ்க் கட்சிகள் எடுக்க வேண்டுமென ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் வலியுறுத்தினர்.

# சிறீலங்கா ஜனாதிபதி சைவ ஆலயங்களை விடுவிக்க வேண்டும்!

ஜனவரி 14, 2023

பொங்கல் வழிபாட்டிற்கு வரும் ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சைவ மக்கள் வழிபாடு செய்ய முடியாமல் இருக்கும் ஆலயங்களை இந்நாளிலேயே விடுவிக்க உத்தரவு இடவேண்டும் என செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சைவத் தமிழர்களின் முக்கிய வழிபாட்டு நாளாகிய பொங்கல் திருநாளை மதித்து யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சைவ மக்களின் வழிபாட்டுத் தலங்கள் வழிபட முடியாமல் பாதுகாப்பு வலயம் என்ற பேரில் மக்கள் வழிபாடு செய்யும் உரிமை மறுக்கப்பட்டமையை கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்நாட்டில் உண்மையான தர்மத்தைப் பேண வேண்டுமானால் எமது தொன்மை வாய்ந்த ஆலயங்களில் பூசை வழிபாடுகள் நடைபெறவேண்டும், கீரிமலை ஆதிச் சிவன் ஆலயம். கீரிமலை கிருஷ்ணன் கோவில், கீரிமலை சடையம்மா மடம், காங்கேசன் துறை சிவபூமி சுக்கிரவார திருவோணச் சத்திரம், வயாவிளான் மாம்பிராய் பிள்ளையார் கோவில். பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோவில் போன்ற முக்கிய தலங்களும் வேறு சில ஆலயங்களும் விளக்கின்றி உள்ளது.

வடக்கில் பொங்கல் வழிபாட்டிற்கு வரும் தாங்கள் இவ் வாலயங்களை மக்களிடம் கையளித்து உதவ வேண்டும், காங்கேசன்துறையில் தல்செவன ஹோட்டலை நடத்தும் படையினர் பாரம்பரியமான சத்திரத்தை இடித்துவிட்டு தமது ஹோட்டல் வளவோடு சேர்த்து வைத்துள்ளனர். இவை சைவ மக்களின் மனதில் மிகுந்த வேதனையைத் தருகிறது.

எனவே இவற்றை உடனடியாக உரியவர்களிடம் கையளிப்பதற்கு தாங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள் என சைவமக்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள். இவ்விடயம் தொடர்பாக கடந்த முப்பது ஆண்டுகளாக நாம் பதவியில் இருந்த பலரிடமும் முறையிட்டு எவ்வித பயனும் இல்லை.



இந்த தருணத்திலாவது இப்பிரச்சினையைத் தீர்த்துவைக்குமாறு சைவமக்கள் சார்பில் நன்றியுடன் வேண்டுகிறோம் என்றுள்ளார்.

# தமிழ் கட்சிகளை ஒன்றிணைய கோரி யாழில் மக்கள் போராட்டம்!

ஜனவரி 05, 2023

இலங்கை வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நாவற்குழியில் போராட்டமொன்று இடம்பெற்றது.

நாவற்குழி சந்தியில் இன்றைய தினம் வியாழக்கிழமை ஒன்றுகூடிய போராட்டகாரர்கள் கவனயீர்ப்பில் ஈடுபடடனர்.

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெறமுடியாத சம்ஷ்டியை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணியில் திரளச்செய்ய ஒன்றிணைவோம் என வலியுறுத்தி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.






# தேசியத் தலைவர் அவர்களின் தந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்களின் 13ம் ஆண்டு நினைவு

ஜனவரி 06, 2023

2009ம் ஆண்டு வைகாசி மாதம் முல்லைத்தீவு மாவட்டம் வட்டுவாகல் பகுதியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் சிறைப்படுத்தப்பட்டு பல மாத காலங்கள் சொல்லொணா துயர்களுக்கு மத்தியிலும் முகாமை விட்டு செல்ல அனுமதிக்காமலும், உரிய சிகிச்சைகள் அளிக்க மறுத்து 06.01.2010 அன்று சாவினைத் தழுவிக்கொண்ட தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களின் தந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்களின் 13ம் ஆண்டு நினைவு வணக்க நாள் இன்றாகும்.

மாதந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்கள் தனது 86 வது வயதில் பனாகொடவில் இருக்கும் இராணுவ முகாமில் தனது இறுதி மூச்சை எம் மண்ணுக்காக விட்டுச்சென்றார் .

ஈழத்தமிழர்களின் ஒரே தேசியத்தலைவர் மேதகு பிரபாகரன் வேலுப்பிள்ளை அவர்களை எம் தேசத்தின் விடிவுக்காய் தந்த எங்கள் மாதந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்களின் பிரிவு எம்மை மிக ஆழ்ந்த சோகத்தில் இட்டுசென்றது.

யுத்தம் முடிவுற்று பல மாதங்கள் ஆகியும் கடும் நோயின் காரணமாக தவித்த போது கூட அவருக்கு சிகிச்சை அளிக்க மறுத்த சிங்கள கொடூர அரசு அவரை அவ் முகாமை விட்டு செல்ல அனுமதிக்காமல் தனது கோர முகத்தை காட்டி நின்றது வார்த்தைக்கு வார்த்தை மனித உரிமையை உச்சரிக்கும் வல்லரசு நாடுகளும் சர்வதேச நாடுகள் அதை கண்டும் காணாமல் மௌனம் சாதித்தது .

உண்மையிலே உலக நாடுகள் சுயநலம் அற்று நேர்த்தியாக செயல்பட்டிருந்தால் மாதந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்கள் மட்டும் அல்ல எத்தனையோ உயிர்கள் காப்பாற்றப்பட்டு இருந்திருக்கலாம்.





# போதைப் பொருளற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் கவனயீர்ப்பு பேரணி!

ஜனவரி 08, 2023

போதைப் பொருளற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் கவனயீர்ப்பு பேரணி இன்று இடம்பெற்றது. கிளிநொச்சி பாரதி மகா வித்தியாலய பழைய மாணவர்களால் குறித்த கவனயீர்ப்பு முன்னெடுத்தப்பட்டது.

பிற்பகல் 3.30 மணியளவில் சூசைப்பிள்ளை சந்தியில் ஆரம்பிக்கப்பட்ட பேரணி, பாரதிபுரம் மத்திய வீதி ஊடக பாடசாலை முன்றலை அடைந்ததும் நிறைவடைந்தது.

குறித்த பேரணியில் அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் என பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர்.



பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை இடம்பெறுவதை கண்டித்தும், அவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கக் கோரியும், அதிலிருந்து சமூகம் விடுபட வேண்டும் என் பதற்காகவும் இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது, விழிப்புணர்வு பதாதைகளை ஏந்தி பேரணி முன்னெடுக்கப்பட்டதுடன், கவனயீர்ப்பும் முன்னெடுக்கப்பட்டது. குறித்த விழிப்புணர்வு பேரணியில் அனைத்து வயதினரும் ஒருமித்து கலந்துகொண்டமை பாரதிபுரம் பகுதியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீனவ சமூகங்களுக்கிடையில் முரண்பாடு!

ஜனவரி 08, 2023

இலங்கை அரசிற்கான கோரிக்கைகளை யாழ்.ஊடக அமைய சந்திப்பில் பகிரங்கமாக மீனவ அமைப்புக்கள் உள்ளிட்ட பொது தரப்புக்கள் முன்வைத்துள்ளன.

அரசுக்கு முன் வைக்கின்ற கோரிக்கைகள்

கிளிநொச்சி மாவட்டத்தின் கிராஞ்சி கிராமத்தில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத அட்டைப் பண்ணைகளுக்கு எதிராக அப்பகுதி சிறு மீனவர்கள் மற்றும் பெண்கள் தொடர்ச்சியாக 100 நாட்களாக போராட்டம் நடாத்தி வருகின்ற நிலையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவாநந்தா நேற்று அதே இடத்திற்குச் சென்று ஒரு விழாவை ஏற்பாடுச் செய்து அட்டைப் பண்ணைகளுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கியிருப்பதானது மீனவ சமூகங்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்துவதோடு, மத்திய அமைச்சர் ஒருவர் பக்கச்சார்பாக நடந்துக்கொள்கின்றார் என்பதை உறுதிப்படுத்துகின்றது. எனவே இதை நாம் வண்மையாகக் கண்டிக்கின்றோம். அமைச்சர் ஒருவர் எப்போதும் நடு நிலையாக செயற்பட வேண்டுமென வலிறுத்துகின்றோம்.

அந்த வகையில்…

- முறையற்ற வகையில் வட பகுதியில் மேற்கொள்ளப்படும் கடல் அட்டை பண்ணைகளை முற்றாகத் தடுத்து தங்கள் கைகளைக் கொண்டு அட்டைத் தொழிலில் ஈடுபடுகிறவர்கள் தங்கள் தொழிலை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

- சிறு மீனவர்களின் தொழில் பாதிக்காத இடங்களில் அட்டைப் பண்ணைகளை உருவாக்க வேண்டுமென்றால் மீனவர்களுடன் கலந்துரையாடியே இறுதித் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்.

- வட பகுதியில் மேற்கொள்ளப்படும் அனைத்து விதமான சட்டவிரோத மீன்பிடி முறைகளையும் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை கடற்றொழில் அமைச்சர் பொறுப்புடன் மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

- தான் அமைச்சராகிய உடனேயே இந்திய இழுவை மடிகள் மற்றும் உள்ளூர் இழுவைமடிகளை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுவதாக பல முறை மீனவ மக்களுக்கு உறுதியளித்த அமைச்சர் உட்பட அரசாங்கம் இப் பிரச்சினையை தீர்ப்பதற்கு இதுவரை நிரந்தமான முயற்சிகள் எதையும் மேற்கொள்ளவில்லை. எனவே இது தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

- யாழ் மாவட்டத்திலே 1990ம் ஆண்டு இடம்பெயர்ந்த மக்கள் இன்றும் கூட 10க்கும் மேற்பட்ட நலன்புரி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். எனவே அவர்களை




உடனடியாக மீள் குடியேற்றவதோடு காணி மற்றும் வீட்டு வசதிகள் இன்றி வாழுகின்ற உப குடும்பங்களுக்கான வீடு மற்றும் காணி வசதிகளைப் பெற்றுக் கொடுக்குமாறு வலியுறுத்துகின்றோம்.

– தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், மாவட்ட மீனவ ஒத்துழைப்பு, யாழ்ப்பாணம், "அரும்பு" மாவட்ட பெண்கள் அமைப்பு - கிளிநொச்சி, வட மாகாண கடற்றொழிலாளர் இணையம், "பூந்தளிர்" மாவட்ட பெண்கள் அமைப்பு - யாழ்ப்பாணம்

# டக்ளஸ் தூங்குவது போல நடிக்கிறார்!

ஜனவரி 08, 2023

கிராஞ்சியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட பண்ணை விவகாரம் நீதிமன்ற படியேறியுள்ள நிலையில் கடலட்டை பண்ணைகளிற்கு அமைச்சர் டக்ளஸ் அனுமதி வழங்கியமை சர்ச்சைகளை தோற்றுவித்துள்ளது.

கிராஞ்சியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட பண்ணைகளை அகற்றுங்கள் என 100 நாட்கள் போராட்டம் நடத்தியும் அமைச்சர் எங்களைப் புறம் தள்ளிவிட்டார் என தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அரும்பு பெண்கள் அமைப்பின் கிளிநொச்சி மாவட்ட தலைவி நிறஞ்சன் பரிமளா தெரிவித்தார்.

இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ் ஊடகாமையில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கிராஞ்சி இலவன்குடா பகுதியில் பல காலமாக பெண்கள் இறால் மட நண்டு மற்றும் அட்டைகளை இயற்கையாகவே பிடித்து விற்பனை செய்து வந்தார்கள்.

ஆனால் தற்போது அப்பகுதிகளில் சிறு மீனவர்களின்




வாழ்வாதாரத்தை பாதிக்கும் முகமாக அட்டைப் பண்ணைகளை அமைத்துள்ளனர்.

அண்மையில் ஆளுநர் செயலகம் முன் முறையற்ற அட்டப்பனைகளை அகற்றுமாறு கோரி போராட்டம் நடத்திய பின் அமைச்சர் டக்ளாஸ் தேவானந்தாவின் அலுவலகத்திற்கு சென்று மகஜரை வழங்கினோம் .

கடிதம் வழங்கியும் அமைச்சர் எமது கோரிக்கை தொடர்பில் எங்களுடன் பேசவில்லை மாறாக இன்னொரு கடிதத்தை தாருங்கள் பார்க்கிறேன் என கூறிச் சென்றார்.

நாங்கள் அமைச்சரை நம்பி இருந்தோம் எமது பிரச்சினைகளைத் தீர்ப்பார் என ஆனால் அது நடைபெறவில்லை.

அமைச்சர் கூறியிருந்தார் நித்திரை கொள்பவனை எழுப்பலாம் நித்திரை கொள்பவர் மாதிரி நடிப்பவனை எழுப்ப முடியாது சுடுதண்ணி ஊத்தி தான் எழுப்ப வேண்டும் என தெரிவித்தார்.

நாங்கள் நடிக்கவில்லை கிராஞ்சிகள் பத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் அட்டைப் பண்ணையால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம்.

ஆகவே வாழ்வாதாரம் பறிபோன நிலையில் போராட்டம் நடத்தி வரும் எங்களுக்கு இனியாவது அமைச்சர் எமக்கு சரியான தீர்வை பெற்று தர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் லசந்தவின் நினைவு வணக்கம்!

ஜனவரி 08, 2023

சிரேஸ்ட ஊடகவியலாளர் அமரர் லசந்த விக்கிரமதுங்கவின் 14 ஆவது நினைவு தினம் மட்டக்களப்பில் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு ஊடக அமையம் ஆகியவற்றின் தலைவர் வா.கிருஷ்ணகுமார் தலைமையில் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக அமைந்துள்ள மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத்தூபியில் இந்நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

உயிரிழந்த ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு ஈகைச்



சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் ஊடகவியலாளர்கள், பல்சமய ஒன்றிய பிரதிநிதிகள், மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு ஊடக அமைய உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

சிரேஸ்ட ஊடகவியலாளரான லசந்த விக்கிரமதுங்க சண்டே லீடர் பத்திரிகையின் தலைமை ஆசிரியராக இருந்த போது இனந்தெரியாத குழுவினால் 2009 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார்.

குற்றவாளி சமூகத்தில் எந்தவொரு நிலையில் இருந்தாலும் பின்வாங்காமல் தனது பத்திரிகையூடாக லசந்த விக்கிரமதுங்க தைரியமாக வெளிப்படுத்தினார்.

இவரின் ஊடக சேவையை கொளரவிக்கும் வகையில் ஊடக இவரின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் பலர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்ட போதிலும் இன்னும் இந்தக் கொலைக் குற்றத்திற்கு நீதி கிடைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கப்டன் பண்டிதரின் 38ம் ஆண்டு நினைவேந்தல்!

ஜனவரி 09, 2023

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறைப் பகுதியில், தமிழீழ விடுதலை புலிகளின் மூத்த உறுப்பினரான கப்டன் பண்டிதரின் 38ஆம் ஆண்டு நினைவு தினம் அவரது இல்லத்தில் இன்றைய தினம் திங்கட்கிழமை அனுஷ்டிக கப்பட்டது.

பண்டிதரின் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து தீபம் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.





இந்த நிகழ்வில் யாழ் மாநகர முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் உள்ளிட்ட சிலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியதுடன் வல்வெட்டித் துறை நகர சபை உறுப்பினர்கள், மற்றும் குடும்பத்தாரும் இணைந்து அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி அச்சு வேலியில் உள்ள விடுதலைப்புலிகளின் முகாமை படையினர் முற்றுகையிட்டதால் ஏற்பட்ட சமரில் கப்டன் பண்டிதர் உட்பட பல போராளிகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# முள்ளியவளை மாவீரர் துயிலுமில்ல பணிக்குழு உறுப்பினர்கள் ஆறு பேரிடம் சிறீலங்கா பொலிஸ் விசாரணை!

ஜனவரி 09, 2023

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழு உறுப்பினர்கள் 6 பேரை முள்ளியவளை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த பொலிஸார் அந்த உறுப்பினர்களிடம் இன்று (9) வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழு உறுப்பினர்களான கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் கமலநாதன் விஜிந்தன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களான சின்னராசா லோகேஸ்வரன், திருச்செல்வம் இரவீந்திரன், தவராசா அமலன், சமூக செயற்பாட்டாளர்களான ஞானதாஸ் யூட் பிரசாந், பாஸ்கரன் வனஜன் ஆகியோரிடமே வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

குறித்த பணிக்குழு உறுப்பினர்கள் ஆறு பேரையும் இன்று பொலிஸ் நிலையம் வருமாறு பொலிஸார் வீடுகளுக்கு சென்று நேற்று அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்நிலையில் தற்போது குறித்த ஆறு பேரும் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில், கடந்த நவம்பர் 27ஆம் திகதி நடைபெற்ற மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் தொடர்பாக வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

குறிப்பாக, மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுக்காக முதல் நாள் 26ஆம் திகதி மாங்குளம், முல்லைத்தீவு வீதியில் மாவீரர் துயிலும் இல்ல வாசலில் அமைக்கப்பட்ட வளைவில், தமிழீழ வரைபடம், துப்பாக்கி, மாவீரர்கள் சிலரது புகைப்படங்கள் காணப்பட்டமை தொடர்பிலேயே குறித்த வாக்குமூலத்தை பதிவுசெய்துள்ளதாக தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் பணிக்குழு உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்கையில்,

ஏற்கனவே 2019ஆம் ஆண்டு நாம் நினைவேந்தல் நிகழ்வினை நடத்தியபோது இதே வளைவே இருந்தது. அது தொடர்பில் எந்த விடயமும் எங்களுக்கு தெரியப்படுத்தவில்லை.

ஆகவே, அதே வளைவையே நாம் இம்முறையும் அமைத்தோம்.

குறிப்பாக, மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுக்காக 26ஆம் திகதி மாங்குளம், முல்லைத்தீவு வீதியில் துயிலும் இல்ல வாசலில் அமைக்கப்பட்ட வளைவில் தமிழீழ வரைபடம், துப்பாக்கி, மாவீரர்கள் சிலரது புகைப்படங்கள் முதலான சின்னங்களை காலை 8.30 மணிக்கு முன்னரே நாங்கள் அகற்றுவதற்கு இணக்கம் தெரிவித்து, இரவே அந்த சின்னங்களை தீந்தை பூசி மறைத்திருந்தோம்.



எனினும், அதனை மாற்றம் செய்து மறைக்கும் முன்னர் பொலிஸார், அந்த சின்னங்களை அகற்றி, அவற்றை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றுவிட்டனர். அதுதான் நடந்தது என கூறினர்.

குறித்த விடயம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்கு பதிவுசெய்துள்ள நிலையிலேயே குறித்த நபர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்வதாகவும், மேலதிக நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் 49வது ஆண்டு நினைவேந்தல்!

ஜனவரி 10, 2023

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 49வது நினைவேந்தல் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணம் முற்றவெளில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை நினைவாலயத்தில் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலக ஆராய்ச்சி மாநாட்டில் இறுதி நாள் அன்று பொலிஸாருடன் ஏற்பட்ட கலவரத்தில் ஒன்பது பேர் படுகொலை செய்யப்பட்டனர்.







# யாழ் பல்கலைக்கழகத்தில் "மலையக தியாகிகள்" நாள் நினைவேந்தல்!!

ஜனவரி 12, 2023

மலையகத் தமிழர்களுக்கான தொழிற்சார் மற்றும் இதர உரிமைகளை வென்றெடுப்பதற்கான உரிமை போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளின் நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றன.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் மற்றும் மலையக மாணவர் ஒன்றியம் ஆகியவை இணைந்து இன்றைய தினம் வியாழக்கிழமை நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுத்தனர்.

அதன் போது, மலையக வாழ் மக்களின் அறப்போராட்டங்களில் உயிர் நீத்த தியாகிகளின் நினைவுருவ படத்திற்கு ஈகை சுடரேற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தி, அக வணக்கமும் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர், மலையக மாணவர் ஒன்றியத்தின், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.



1930க்கு பிற்பட்ட காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க அரசியல் உரிமைப் போராட்டங்களில் பங்கு பற்றி உயிர் நீத்த அனைத்து தோட்டத் தொழிலாளர்களையும் "மலையக தியாகிகள்" என அடையாளப்படுகிறது.



# தமிழ் தேசிய பரப்பில் இயங்கும் அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைவை வலியுறுத்தி சாகும் வரை உண்ணாநேன்பு போராட்டம் நிறைவு!

ஜனவரி 12, 2023

தமிழ் தேசிய பரப்பில் இயங்கும் அனைத்து கட்சிகளையும், அமைப்புகளையும், தனிநபர்களையும் ஓரணியில் திரள வலியுறுத்தி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் முன்னாள் போராளியொருவரால் கடந்த நான்கு நாட்களாக முன்னெடுக்கப்பட்ட வந்த சாகும் வரை உண்ணாவிரத போராட்டம் அரசியல் கட்சி தலைவர்களின் எழுத்துமூல உறுதிமொழியை அடுத்து இன்று கைவிடப்பட்டது.

கடந்த ஒன்பதாம் திகதி காலை முதல் இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்றுவந்த நிலையில் இன்றைய தினம் நூற்றுக்கணக்கான மக்கள் போராட்டம் இடம் பெறும் இடத்தில ஒன்றுகூடியிருந்ததோடு தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் சிலரும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர்.

புதுக்குடியிருப்பு சந்தியில், இலங்கை வங்கி கட்டிடத்திற்கு அண்மையில் வேலுப்பிள்ளை மாதவமேஜர் நீராகாரம் எதுவுமின்றி சாகும்வரையான உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்து முன்னெடுத்து வந்தார்.



தமிழ் தேசிய பரப்பில் இயங்கும் அனைத்து கட்சிகளும் தமக்கிடையிலான ஆசன பங்கீட்டு பிரச்சினைகளை கைவிட்டு, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையை வென்றெடுப்பதற்காக ஓரணியில் திரள வேண்டும் என வலியுறுத்தி இந்த போராட்டத்தை முன்னெடுத்துவந்தார்.

இந்த நிலையில் இன்றையதினம் உண்ணாவிரத போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு வருகைதந்த தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் சி வி விக்னேஸ்வரன், மற்றும் டெலோ கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன் மற்றும் புளொட் அமைப்பின் உறுப்பினரும் முன்னாள் மாகாணசபை அமைச்சருமான கந்தையா சிவநேசன் மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சியை சேர்ந்த அங்கத்தவர் ஒருவர் ஆகியோர் எழுத்துமூல ஆவணத்தில் தாம் அனைவரும் ஒன்று சேர்ந்து கூட்டாக செற்படுவோம் மேற்படி உண்ணாவிரதம் இருக்கும் நபரின் கோரிக்கையை வலுப்படுத்த ஒன்றிணைவோம் என்ற உறுதிமொழியை வழங்கி கையொப்பமிட்ட பின்னர் உண்ணாவிரதம் மேற்கொண்ட நபருக்கு நீராகாரம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தனர்.

இந்த உண்ணாவிரத போராட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆதரவு தெரிவித்து கலந்துகொண்டிருந்த போதிலும் மேற்படி ஆவணத்தில் அவர் கையொப்பமிடவில்லை அத்தோடு நேற்றையதினம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமனற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும் இந்த போராட்டத்துக்கு ஆதரவை வெளிப்படுத்தி கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

# யாழில் சிங்கள ஜனாதிபதி கலந்து கொள்ளும் பொங்கலுக்கு எதிர்ப்பு போராட்டத்திற்கு அழைப்பு!

ஜனவரி 13, 2023

தைப்பொங்கல் விழாவிற்கு யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவித்து அமைதி போராட்டத்தினை முன்னெடுக்க அனைவரும் ஒன்றிணையுமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் அவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த ஊடக சந்திப்பில், யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் அழகராசா விஜயகுமார் கருத்து தெரிவிக்கையில்,

எங்களுடைய தமிழ் மக்கள் வடகிழக்கு எங்கிலும் பல்வேறு பிரச்சனைகளுக்குள் சிக்குண்டு தொடர்ச்சியாக எதுவித அரசியல் தீர்வுகளும் இன்றி தங்களுடைய நாள் ஒவ்வொன்றையும் கழித்து வருகின்ற நிலையில் காணாமலாக்கப்பட்டோர் , அரசியல்கைதிகள், காணி




விடுவிப்பு, இராணுவ ஆக்கிரமிப்பு, பௌத்தமயமாக்கல் என அரசின் திட்டமிடப்பட்ட இனபிரச்சனைகளுக்குள் இருந்து மக்கள் இதுவரை வெளிவராத நிலையிலும், தேசிய பொங்கல் விழா ஒன்றினை இந்த ஜனாதிபதி எவ்வாறான மனநிலையில் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்த முடியும்?

ஜனாதிபதி பொங்கல் விழாவை மேற்கொள்வதில் எங்களுக்கு எதுவித ஆட்சேபனையும் கிடையாது. தமிழர்களுக்குரிய பிரச்சினைகளுக்குரிய தீர்வு ஒன்றினை வழங்கிய பின்னர் அவர் குறித்த பொங்கல் நிகழ்வினை முன்னெடுப்பதற்கு தமிழ் மக்களாக நாங்களும் இணைந்து கொள்வோம்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 3 மணியளவில் ஜனாதிபதி கலந்து கொள்ளும் பொங்கல் நிகழ்வு நல்லூர் சிவன் ஆலயத்தில் இடம் பெற இருக்கின்ற தருணத்தில் 1 மணியளவில் யாழ் பல்கலைக்கழக முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பமாகி தொடர்ச்சியாக பொங்கல் நிகழ்வு இடம்பெறும் இடத்திற்கு சென்று நிறைவவடையும்.

அதேவேளை மக்கள் பிரதிநிதிகள், கட்சித் தலைமைகள் அரசியல் பேதமின்றி குறித்த பொங்கல் நிகழ்வை முற்றாக நிராகரிப்பதோடு, எங்களுடைய இந்த சாத்தவீக போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும் என அழைப்பு விடுப்பதோடு, அனைத்து சிவில் அமைப்புக்கள் பொதுமக்கள் என அனைத்து தரப்பினருக்கும் இந்த போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம் என மேலும் தெரிவித்தார்.

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக வீதியில் நாடகம்!

ஜனவரி 13, 2023

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினருடன் இணைந்து குரலற்றவர்களின் குரல் அமைப்பினர் இணைந்து வீதி நாடகமொன்றினை யாழ் பல்கலைக் கழகத்தினுள் முன்னெடுத்தனர்.



யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூடக வளாகத்திற்கு முன்பாக இன்றைய தினம் வெள்ளிக் கிழமை குறித்த வீதி விழிப்புணர்வு நாடகம் முன் னெடுக்கப்பட்டது.

இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் முருகையா கோமகன்,

இந்த முறை தைப்பொங்கலிற்கு எமது அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என நம்பிய பொழுதும் நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம்.

இதனை மையப்படுத்தியே இவ்வாறு சிறைக்கூண்டு அமைக்கப்பட்டு சிறையிலுள்ள கைதிகளை போல உரு வகித்து பொங்கல் பொருட்கள் வீடுகளில் தயார் நிலையில் உள்ள போதும் இம்முறையும் எமது உறவுகள் இன்றி பொங்கலை பொங்கமுடியாத சூழலை வெளிப்படுத்து முகமாக இதனை நாம் நாடகமாக நிகழ்த்தி காட்டியிருந்தோம்.

மேலும் அரசியல் கைதிகள் விடுதலையின்றி வாழும்



சூழலில் இங்கு நடைபெற இருக்கின்ற தேசிய பொங்கல் விழாவிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகை தரும் பொழுது எமது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் பிரிதிநிதிகள் குறித்த நிகழ்வை முற்றாக நிராகரிக் கவேண்டும்.

இதே நேரம் எங்களுடை எஞ்சிய சிறைகைதிகளும் விடுதலை செய்யபடவேண்டும் என வலியுறுத்தினார்.

# தமிழர் தாயகத்தில் ரணில் காலடி வைப்பதை அங்கீகரிக்க முடியாது! அருட்தந்தை மா. சத்திவேல்

ஜனவரி 14, 2023

தேசிய பொங்கல் நிகழ்வெனக் கூறி ஜனாதிபதி தமிழர் தாயகத்தில் காலடி வைப்பதை அங்கீகரிக்க முடியாது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

இன்று சனிக்கிழமை (ஜன. 14) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவித்திருக்கும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தைப்பொங்கல் என்பது பானையும் அரிசியும் அடுப்பும் சம்பந்தப்பட்ட விடயம் மட்டுமல்ல, உழைப்பாளர்களின் வியர்வை, அதனால் விளைந்த விளைச்சல், உழைப்பு, உழைப்புக்கு அடிப்படை காரணமான மண், அதனுடைய உரிமை கலந்த விடயமாகும். இதற்குள்ளே தான் வாழ் வும் வளமும் தங்கியிருக்கிறது. கலாசார சிறப்போடு தேச உணர்வும் அதன் பாதுகாப்பும் அதற்கான உறுதியும் மேலோங்கி இருக்கின்றது.

இவற்றையெல்லாம் சிதைத்தழித்து தொடர் அழிவு களுக்கும் திட்டமிட்டுக்கொண்டு, தேசிய பொங்கல் என்று ஜனாதிபதி தமிழர் தாயகத்தில் காலடி வைப்பதையோ, அவரின் வருகையை வரவேற்பதையோ நாம் எந்த வகையிலும் அங்கீகரிக்க முடியாது.

வியர்வை விதைத்த நிலம், உழுது விளைந்த நிலம், பொங்கலிட்டு மகிழ்ச்சியோடு உறவுகளோடு கூடி பகிர்ந்து உண்ட நிலம் இன்று இராணுவத்திடம் சிக்கியுள்ளது.

அரச திணைக்களங்கள் பேரினவாத சிந்தனையோடு தமிழர்களின் நிலத்தையும் வாழ்வையும் தொடர்ந்து சூறையாடிவரும் காலமிது. இவற்றுக்கு மத்தியில் தேசிய தைப்பொங்கல் என்ற அரசியல் நாடகம். இதனை ஏற்க தமிழர்கள் ஏமாளிகள் அல்லர் என்பதை போலி தேசிய வாதிகள் உணர வேண்டும்.

தமிழர்களின் கலாசாரத்தை முற்றாக அழிப்பதற்கு போதைப்பொருட்களின் பாவனையும் எங்கும் வியாபித் துள்ளது. இதற்குப் பின்னணியில் அரச படைகள் இருப் பதாகவும் மக்கள் சந்தேகிக்கின்றனர்.

நாட்டில் வேறெந்த பிரதேசத்திலும் இல்லாத அளவுக்கு முப்படையினரும், பொலிஸாரும், அவர்களுக்கு உதவி யாக இரகசிய பொலிஸாரும், அவர்களின் புலனாய் வாளர்களும், அவர்களோடு சேர்ந்து இயங்கும் ஒட்டுக் குழுக்களும் பலமாக இருக்கும்போது போதைப்பொருட்கள் வட கிழக்கில் அதிகரித்துள்ளதென்றால், அதற்கு பொறுப் பேற்க வேண்டியது, பாதுகாப்பு அமைச்சும் பாதுகாப்புக்கு பொறுப்பான ஜனாதிபதியுமே.

இத்தகைய கலாசார அழிவை தமிழர் தாயகத்தில் விதைத்து, அதன் அறுவடையில் மகிழ்ந்துதானா ஜனாதிபதி தேசிய தைப்பொங்கல் என தமிழர் தாயகத்தில் காலடி வைக்கிறார் என்றே கேட்கிறோம்.

தமிழர்களின் தேசிய பாதுகாப்புக்காக போராடி உயிர்த் தியாகம் செய்தோரை சொந்த மண்ணிலே நினைவுகூர முடியாது.

இறுதி யுத்தத்தில் வான் தாக்குதலாலும், நச்சு குண்டுக ளாலும் படுகொலை செய்யப்பட்டோரை கூட்டாக நினைவு கூருவதற்கு முடியாதுள்ளது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி இல்லை. தமிழர் தேசியத்தின் உயிர்த்துடிப்போடு இயங்கியவர்கள் அரசியல் கைதிகளாகி விடுதலையின்றி வாடுகின்றனர். இவற்றுக்கெல்லாம் அடிப்படை காரணகர்த்தாவான தற்போதைய ஜனாதிபதி, தேசிய தைப்பொங்கல் என தமிழர்கள் மத்தியில் வந்து, உழைப்பின் விழாவை, பாரம்பரிய தேசிய நிகழ்வை அசிங்கப்படுத்துவதற்கு இடமளிக்கக் கூடாது.

அத்தோடு தேசிய தைப்பொங்கல் என தமிழர்களை கூட்டிச் சேர்க்கும் செயற்பாட்டிலும் பல அரசியல் கைக்கூலிகள் நம் மத்தியில் தோன்றி இயங்கத் தொடங்கியுள்ளனர். இது இவர்களின் அரசியலாகும்.

இவர்கள் காலகாலமாக எமக்கு எதிராகவே செயற்பட்டு வந்துள்ளனர். இத்தகைய புல்லுருவிகளை அகற்றி, தமிழர் தாயக அரசியலை காப்பதற்கு உறுதிகொண்டு, நிலம் காக்கும் பொங்கல் எம் மண்ணிலே பொங்க சக்திகொள்வோம் என தெரிவித்துள்ளார்.

# ரணிலின் யாழ் விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம்!

ஜனவரி 15, 2023

யாழ்ப்பாணத்தில் தேசிய பொங்கல் விழாவினை கொண டாடுவதற்காக வடக்கிற்கு விஜயம் செய்துள்ள ஜனாதி பதியின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று ஞாயிற்றுக் கிழமை மதியம் யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்றலில் போராட்டம் ஆரம்பமாகி சேர்.பொன்.இராமநாதன் வீதி யூடாக பலாலி வீதியூடாக பேரணியாக நகர்ந்து வருகிறது.

இதன் போது பல்கலைக்கழக மாணவர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல் கைதிகளின் உறவுகள்,அரசியல் பிரமுகர்கள் என பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

பேரணி காரணமாக பொலிஸார், இராணுவத்தினர் உட் பட பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கை பலப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய தைப்பொங்கல் விழா இடம்பெறவுள்ள நல்லூர் பகுதியை சுற்றிலும் வீதிதடைகள் ஏற்படுத்தப்படுவதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜனாதிபதி வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத் திற்கு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.















# போராட்டக்காரர்கள் மீது சிறீலங்கா பொலிசார் தண்ணீர் தாரை பிரயோகம்!

ஜனவரி 15, 2023

யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவித்து இடம்பெற்ற போராட்டத்தின் போது சிறீலங்கா பொலிஸார் தண் ணீர் தாரை பிரயோகம் மேற் கொண்டனர்.

தேசிய பொங்கல் விழாவிற்கு இன்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் முன்னெடுக் கப்பட்டது

ஜனாதிபதி கலந்து கொள்ளும் பொங்கல் நிகழ்வு நல்லூர் சிவன் ஆலயத்தில் இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் இடம்பெற்ற வேளை, யாழ் பல்கலைக்கழக முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் ஆரம பமாகி தொடர்ச்சியாக பொங்கல் நிகழ்வு இடம்பெற்ற இடத் தினை நோக்கி சென்றது.

அதன் போது , நல்லூர் அரசடி வீதி - வைமன் வீதி சந்திக்கு அருகில் போராட்டக்காரர்களை பொலிஸார் தடுப்புக்களை ஏற்படுத்தி தடுத்து நிறுத்தினர்.

பொலிசாரின் தடுப்புக்களை உடைத்துக்கொண்டு போராட்ட பேரணி செல்ல முற்பட்ட வேளை பொலிஸார் தண்ணீர் தாரை பிரயோகம் மேற்கொண்டு போராட்ட காரர்களை துரத்த முற்பட்டனர்.

இருந்த போதிலும் போராட்டக்காரர்கள் அவ்விடத்தில் நின்று, காணிகளை விடுவிக்க கோரி, காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறிய கோரி, அரசியல் கைதிகளின் விடுதலை கோரி கோஷங்களை எழுப்பினர்.













# கனடிய செய்திகள்

## இந்த ஆண்டில் பல பொருட்களின் விலைகள் உயர்வடையும்!

ஜனவரி 02, 2023

கனடாவில் இந்த ஆண்டில் சிலவற்றுக்கான விலைகள் உயர்வடையும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் எரிபொருளுக்கான விலைகள் ஏற்ற இறக்கங்களை பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது எரிபொருளின் விலை குறைவாக காணப்பட்டாலும், எதிர்வரும் காலங்களில் மீண்டும் எரிபொருள் விலை உயர்வடையும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

குறிப்பாக பெற்றோலின் விலை 2 டொலர்களாக உயர்வடையும் சாத்தியங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வட்டி வீதம் உயர்வு, சீன கோவிட் நிலைமை போன்ற காரணிகளினால் இவ்வாறு எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குளிருடனான காலநிலையினாலும் அதிகளவு எரிபொருள் தேவை ஏற்படும் எனவும் இதனால் விலை அதிகரிப்பு பதிவாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் உணவுப் பொருட்களின் விலைகள் 7 வீத்த்தினால் உயர்வடையும் என தெரிவிக்கப்படுகின்றது.








டால்ஹோசீ பல்கலைக்கழகத்தினால் இந்த எதிர்வுகூறல் வெளியிடப்பட்டுள்ளது.

நான்கு பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றின் வருடாந்த உணவுச் செலவு 16288.41 டொலர்களாக காணப்படும் எனவும் கடந்த 2022ம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இது 1065.60 டொலர்களாக உயர்வடையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் போர் பொருட்களின் விலை ஏற்றத்தில் பாரியளவு உயர்வடையும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

## கனடாவில் காலாண்டு பகுதியில் வீடுகளின் விலைகள் 20 முதல் 25 வீதம் வரை குறைவடையும்!

ஜனவரி 02, 2023

கனடாவில் இந்த ஆண்டில் வீட்டு விலைகளில் மாற்றம் ஏற்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2022ம் ஆண்டு பெப்ரவரி முதல் இந்த ஆண்டு டிசம்பர் வரையிலான காலப் பகுதியில் தேசிய அளவில் வீடுகளின் விலைகள் 23 வீத வீழ்ச்சியை பதிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த ஆண்டில் வீடுகளின் விலைகளில் பாரிய அளவில் அதிகரித்திருந்த நிலையில், வீடுகளின் விலைகளில் வீழ்ச்சி பதிவாகவுள்ளது.

பெருந்தொற்று ஏற்படுவதற்கு முன்னதாக காணப்பட்ட காலப் பகுதியைப் போன்று மாகாணங்களில் வீடுகளின் விலைகள் இந்த ஆண்டில் காணப்படும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

முதல் காலாண்டு பகுதியில் கனடாவில் வீடுகளின் விலைகள் 20 முதல் 25 வீதம் வரையில் குறைவடையும் என ரீ.டி வங்கி அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கனடாவில் வெளிநாட்டவர்கள் சொத்துக்கள் வாங்க தடை!

ஜனவரி 02, 2023

கனடா நாட்டில் வெளி நாட்டு முதலீட்டாளர்கள் ஏராளமான சொத்துக்கள் வாங்கி குவித்தனர். மேலும் பல்வேறு நாட்டை சேர்ந்த அரசியல் வாதிகள் முக்கிய பிரமுகர்கள், தொழில் அதிபர்கள் என பலர் சொத்துக்கள் வாங்கியுள்ளனர்.

இதன் காரணமாக கனடாவில் வீடுகள் மற்றும் சொத்துக்களின் விலை கடுமையாக உயர்ந்தது. கடந்த ஆண்டு மட்டும் வீட்டு விலைகள் 20 சதவீதம் உயர்ந்தது. அதேபோல் வீட்டு வாடகையும் கணிசமான அளவு அதிகரித்தது. இதனால் கனடா நாட்டினர் தங்கள் சொந்த நாட்டில் சொத்துக்கள் வாங்க கடும் சிரமத்தை சந்தித்தனர். இதையடுத்து சொத்துக்கள் விலை உயர்வால் ஏற்பட்டு உள்ள பிரச்சினைகளை குறைக்கும் வகையிலும் சொந்த நாட்டினருக்கு உதவும் நோக்கத்திலும் கனடா அரசு வெளிநாட்டினர் சொத்துக்கள் வாங்க தடை விதிக்க முடிவு செய்தது.

இதற்கான சட்டம் இயற்றப்பட்டு அது அமுலுக்கு வந்துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. இதனால் கனடாவில் இனி வெளிநாட்டினர் சொத்து வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கனடாவில் குடியேறியவர்கள் மற்றும் நிரந்தரமாக வசித்து வரும் வெளிநாட்டினருக்கும் இந்த தடை பொருந்தாது என அறிவிக்கப்பட்டு உள்ளது.




www.sangathamil.ca

# கனடாவின் ரொரன்ரோவில் குடியிருப்புகளை காலியாக வைத்திருந்தால் வரி!

ஜனவரி 08, 2023

கனடாவின் ரொறன்ரோவில் குடியிருப்புகளை ஆண்டின் ஆறு மாதங்களுக்கு மேல் காலியாக வைத்திருந்தால் வரி செலுத்த வேண்டும் என்ற விதி இந்த ஆண்டு முதல் அமுலுக்கு வருகிறது.

இதனால், பிப்ரவரி 2ம் திகதி வரையில், உரிமையாளர்கள் தங்கள் குடியிருப்புகளை காலியாக வைத்திருக்கலாமா என்பது தொடர்பில் முடிவெடுக்க கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

குடியிருப்புகளை காலியாக வைத்திருக்க முடிவு செய்துள்ள உரிமையாளர்கள் அந்த குடியிருப்பின் மதிப்பிடப்பட்ட தொகையில் இருந்து 1% வரியாக செலுத்த நேரிடும்.

புதிதாக வரி விதிக்கப்படுவதால் சில உரிமையாளர்கள் தங்கள் குடியிருப்புகளை விற்பனைக்கு அல்லது வாடகைக்கு விடுவது என பட்டியலிட தூண்டும் எனவும் ஆதரவாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.



இதனால் குடியிருப்புகளை வாங்க திட்டமிட்டிருக்கும் மக்களுக்கு சாதகமாக இருக்கும் எனவும் கூறுகின்றனர். குடியிருப்பு உரிமையாளர்கள் பிப்ரவரி 2ம் திகதிக்குள், தங்கள் குடியிருப்புகளின் நிலை தொடர்பில் நிர்வாகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

இதனையடுத்து நகர நிர்வாகம் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்தில் வரி விதிப்பது தொடர்பில் தகவல் தெரிவிக்கும். பிப்ரவரி 2ம் திகதிக்கு பின்னர் தகவல் தெரிவிக்கும் உரிமையாளர்கள், குறைந்தபட்சம் 250 டொலர் அபராதம் செலுத்த நேரிடும்.

ரொறன்ரோவில் மொத்தம் எத்தனை குடியிருப்புகள் காலியாக உள்ளது என்ற தகவல் உறுதிப்படுத்தப்படவில்லை. 2017ல் வெளியான அறிக்கை ஒன்றில், 15,000 முதல் 28,000 குடியிருப்புகள் காலியாக இருக்கலாம் என கூறப்பட்டது.

# கனடாவிற்குள் நுழைய முன்னாள் பிரதமரான மஹிந்த இராஜபக்சா முன்னாள் ஜனாதிபதியான கோட்டாபய இராஜபக்சா ஆகியோருக்கு எதிராக தடை!

ஜனவரி 10, 2023

இலங்கையின் முன்னாள் பிரதமரான மஹிந்த இராஜபக்சாவுக்கு முன்னாள் ஜனாதிபதியான கோட்டாபய இராஜபக்சா ஆகி யோருக்கு எதிராக கனடா அரசாங்கம் தடைகளை விதித்துள்ளதாக இன்று வெளிவிவகார அமைச்சர் மெலனி



ஜோலி அறிவித்துள்ளார்.

இலங்கையில் நீடித்த கடும் பொருளாதார நெருக்கடியால் மக்கள் புரட்சி வெடித்ததை தொடர்ந்து, அங்கு ஆட்சியில் இருந்த ராஜபக்ச சகோதரர்கள் கடந்த சில மாதங்களுக்கு முன் பதவி விலகினர்.

ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய இராஜபக்சா ஜூலையிலும், பிரதமராக இருந்த மஹிந்த இராஜபக்சா மே மாதமும் இராஜினாமா செய்தனர்.




இதையடுத்து ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றார்.



இந்தநிலையில், இலங்கை முன்னாள் அதிபர்களான கோட்டாபய, மஹிந்த இராஜபக்சா உள்பட 4 பேர் கனடாவிற்குள் நுழைய அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

மேலும் கனடாவில் உள்ள 4 பேரின் சொத்துக்கள் மற்றும் நிதி செயல்பாடுகள் முடக்கப்படும் என அறிவித்துள்ளது.

விடுதலை புலிகளுக்கு எதிரான போரின்போது மனித உரிமை மீறலில் ஈடுபட்டதாக 4 பேர் மீதும் கனடா நாடு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இதேவேளை, போர்க் குற்றவாளிகளான மகிந்த இராஜபக்சா மற்றும் கோட்டாபய இராஜபக்சா ஆகியோருக்கு எதிரான கனேடிய தடைகள் குறித்து கனடா நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

https://www.canada.ca/en/global-affairs/news/2023/01/canada-imposes-sanctions-on-sri-lankan-state-officials-for-human-rights-violations.html




# கனடாவில் மிக மோசமான கட்டத்தில் குடியிருப்புகளின் விற்பனை!

ஜனவரி 11, 2023




கனடாவில் குடியிருப்புகளின் விற்பனையானது 2001 ஆம் ஆண்டிற்கு பின்னர் மிக மோசமான கட்டத்தில் இருப்பதாக நிபுணர்கள் தரப்பு சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதாவது 80 களின் பிற்பகுதி மற்றும் 90 களின் முற்பகுதியில் இருந்து இந்த ஆண்டு மிக மோசமான நிலை காணப்படுவதாக குறிப்பிடுகின்றனர். குடியிருப்புகளின் விற்பனையில் சுமார் 20% அளவுக்கு சரிவடைந்துள்ள நிலையில் 2023 தொடக்கத்தில், அதன் மோசமான நிலையை எட்டும் என கணிக்கின்றனர்.

2023ல் பெரும்பாலான அட்லாண்டிக் மாகாணங்கள், ஒன்ராறியோ மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியா ஆகிய பகுதிகளில் மிக மோசமான வருடாந்திர சராசரி விலை சரிவு எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், நவம்பர் மாதத்தில் தேசிய சராசரி வீட்டு விலை $632,802 என இருந்தது, இது கடந்த ஆண்டு இதே மாதத்தில் பதிவான விலையில் இருந்து 12% சரிவடைந்துள்ளது.

நவம்பர் மாதத்தில் மட்டும் கனடாவில் மொத்தமாக 30,135 குடியிருப்புகளே விற்பனையாகியுள்ளது. இது கடந்த ஆண்டு இதே மாதத்துடன் ஒப்பிடுகையில் 39% சரிவு என ஆய்வாளர்கள் தரப்பு சுட்டிக்காட்டுகின்றனர்.

# ”நடமாடும் மருத்துவ சேவை” யினை தொடரவும் மற்றும் பிற நிவாரண பணிகளுக்கும் உதவும் முகமாகவும் எதிர்வரும் ஜனவரி 27 “MGR 106” இன்னிசை நிகழ்வு

ஜனவரி 13, 2023

தாயகத்தில் சத்திர சிகிச்சைக்கு பணமின்றி உயிருக்கு போராடும் ஏழை நோயாளிகளின் உயிர்களை காக்கும் பொருட்டும், கிளிநொச்சியில் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டு படுக்கையில் இருக்கும் உறவுகளுக்கு கடந்த 7 வருடங்களாக நாங்கள் வழங்கி வரும் ”நடமாடும் மருத்துவ சேவை” யினை தொடரவும் - பிற நிவாரண பணிகளுக்கும், எதிர்வரும் ஜனவரி 27 வெள்ளிக்கிழமை எங்கள் இசை கலைஞர்கள் - பாடகர்கள் கலக்க போகும் "MGR 106" இன்னிசை நிகழ்வு நடைபெற உள்ளது. சென்ற முறை போல் பெரும் ஆதரவினை மக்கள் தந்து ஊக்கமளிக்குமாறு உரிமையுடன் கேட்டு கொள்கின்றோம். நிகழ்ச்சியில் பொன்மனச்செம்மலின் மனதிற்கினிய பாடல்களினால் உங்களை பரவசப்படுத்தப் போகின்றோம். தங்கள் நேரத்தினை தந்துதவும் ஷிபோதன், மாஸ்டர் கார்த்திக், இசை கலைஞர்கள், பாடகர்கள், இந்த விளம்பரத்தினை வடிவமைத்த மயூரன் மற்றும் தொண்டர்கள் அனைவர்க்கும் நெஞ்சார்ந்த நன்றிகள். வழமை போல் நிகழ்ச்சியின் செலவு முழுதும் எனது .......பெறப்படும் நன்கொடை முழுவதும் நிவாரண செயல் திட்டங்களுக்கு நேரிடையாக வழங்கப்படும். நாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைப்போம்.



# தமிழக செய்திகள்



## தமிழ்நாடு பெயரை மாற்ற வேண்டும் என்று கூறிய கருத்தை ஆளுநர் திரும்பப் பெற வேண்டும்! வைகோ கண்டனம்

ஜனவரி 06, 2023

ஆளுநர் மாளிகையில் காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தவர்களைச் சிறப்பிக்கும் வகையில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றிய தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்திருக்கும் கருத்துகள் விஷமத்தன மானவை.

“தமிழகத்தில் ஒரு வித்தியாசமான அரசியல் சூழல் உள்ளது. எல்லாவற்றுக்கும் நாங்கள் திராவிடர்கள் என்று சொல்கிறார்கள். இந்தியா முழுவதும் ஒரு செயல் திட்டம் இருந்தால், அதனை வேண்டாம் என்கிறது தமிழ்நாடு. முதலில் தமிழ்நாடு என்று சொல்வதைவிட, தமிழகம் என்று சொல்வதுதான் சரியாக இருக்கும்.”

என்று ஆளுநர் ஆர்.என்.ரவி பேசியிருப்பது கடும் கண்டனத்திற்கு உரியது.

தமிழ்நாடு என்ற பெயரை மாற்றி அழைக்க வேண்டும் என்று சொல்வதற்கு ஆர்.என்.ரவிக்கு எந்த அருகதையும் இல்லை. அதிகார ஆணவம் தலைக்கேறிய நிலையில், என்ன பேசுகிறோம் என்பதே தெரியாமல் பேசிக்கொண்டிருக்கிறார் என்று தமிழ்நாடு மக்கள் நினைக்கவில்லை. மாறாக, எல்லாவற்றையும் திட்டமிட்டு, ஆர்.எஸ்.எஸ். இந்துத்துவா சனாதனக் கும்பல் போட்டுத் தந்த தடத்தில் நின்றுதான் ஆர்.என்.ரவி பேசிக் கொண்டு இருக்கிறார்.




தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதற்கு நடைபெற்ற போராட்ட வரலாறு ஆர்.எஸ்.எஸ் பிரச்சாரகர் ஆர்.என்.ரவிக்கு தெரிவதற்கு வாய்ப்பு இல்லை.

தமிழ்நாடு என பெயர் சூட்டக் கோரி விடுதலைப் போராட்டத் தியாகி சங்கரலிங்கனார் 76 நாட்கள் உண்ணா நோன்பு இருந்து உயிர்த் தியாகம் செய்த வரலாறு இவர் அறிந்திருப்பாரா?

1967 இல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வர் ஆனவுடன், 1967 ஜூலை 18 ஆம் தேதி, சென்னை மாநிலத்திற்கு ‘தமிழ் நாடு’ என்று பெயர் சூட்டக் கோரி சட்டமன்றத்தில் தீர்மானம் முன்மொழிந்து நிறைவேற்றினார். இச்சட்ட முன்வடிவு குடியரசுத் தலைவர் இசைவினைப் பெற்று, 1969 ஜனவரி 14 பொங்கல் திருநாளில் ‘தமிழ்நாடு’ எனும் பெயர் சூட்டப்பெற்று, நடைமுறைக்கு வந்தது.

‘தமிழ்நாடு’என்று தொலைநோக்கோடு பேரறிஞர் அண்ணா அவர்கள் சூட்டியப் பெயர் தமிழ் இலக்கியங்களிலே இடம் பெற்றுள்ளது. தமிழ்நாடு என்றால், தமிழ் மொழியை நாடு தமிழரை நாடு தமிழ்ப்பண்பாட்டை நாடு என்று பொருள்படும்.

இது வெறும் பெயர் மட்டும் அல்ல, கோடானு கோடி தமிழ் மக்களின் இரத்த நாளங்களில் கலந்திருக்கின்ற தமிழ் உணர்வுதான் ‘தமிழ்நாடு’ என்று மலர்ந்தது.

ஆளுநர் ஆர்.என்.ரவி எல்லை மீறி பேசுவது அவர் வகிக்கும் பொறுப்புக்கு அழகல்ல. திராவிட இயக்கம் பற்றிய அவரது விமர்சனங்கள், அவர் பா.ஜ.க.வின் நிழல் தலைவர் என்பதை படம் பிடித்துக் காட்டுகிறது.

ஆர்.என்.ரவி ‘தமிழ்நாடு’ பெயரை மாற்றி அழைக்க வேண்டும் என்று கூறிய கருத்தை உடனடியாக திரும்பப்பெற வேண்டும். இல்லையேல் நாகலாந்து மக்கள் வழியில் தமிழ்நாட்டு மக்களும் பாடம் புகட்டுவார்கள்.

## கர்நாடகாவில் உண்ணாவிரப் போராட்த்தில் 38 ஈழ அகதிகள்!

ஜனவரி 06, 2023

கர்நாடகாவில் இலங்கை அகதிகள் 38 பேர் உண்ணா விரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

கனடா செல்வதற்காக முகவர்களால் இந்தியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர்களாலேயே காட்டிக்கொடுக்கப்பட்டு கைது செய்யப்பட்ட ஈழ அகதிகள் 38 பேர் இன்று தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு 2021 - 06 - 10 ஆம் திகதி கர்நாடகாவின் மங்களுாரில் கைது செய்யப்பட்ட சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர்களை விடுதலை செய்த நீதிமன்றம் அவர்களை நாட்டிற்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு




உத்தரவிட்டிருந்தது.

அதற்கான ஏற்பாட்டினைச் செய்வதற்காக 15 நாள்கள் அவகாசம் நீதிமன்றினால் வழங்கப்பட்ட போதிலும் தம்மை அனுப்பிவைப்பதற்கான ஏற்பாட்டினை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்தே அகதிகள் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யாரிடம் தொடர்புகொள்வது என்பது தெரியாது என்று பரிதவிப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். ஒரு விடுதியில் தாம் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் உணவு, மருத்துவ வசதிகள் இல்லாம் இருப்பதாகவும் சிலர் கடும் நோய்த்தாக்கத்துக்கு உட்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்கள் தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## சேதுசமுத்திரத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின்

ஜனவரி 12, 2023

தமிழக சட்டசபையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சேது சமுத்திர திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு முன் வர வேண்டும் என இன்றைய தினம் வியாழக்கிழமை தனித் தீர்மானத்தை கொண்டு வந்தார்.

சட்டசபையில் உரையாற்றும் போதே முதல்வர் இந்த திட்டத்தை முன்மொழிந்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றிய போது,

“தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும், இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் வலுப்பெற செய்வதற்கு மிக இன்றியமையாத திட்டமாக சேது சமுத்திரத் திட்டம் விளங்கி வருகின்றது.

1860ம் ஆண்டு 50 லட்சம் ரூபாயில் கமாண்டர் டெய்லர் என்பவரால் உருவாக்கப்பட்ட மகத்தான திட்டம் இது.

அதன்பிறகு 1955-ல் தமிழ்நாட்டின் சிறந்த நிபுணர் டாக்டர் ஏ. ராமசாமி முதலியார் குழு, 1963-ல் நடைபெற்ற ஒன்றிய அமைச்சரவைக் கூட்டம், 1964-ல் அமைக்கப்பட்ட டாக்டர் நாகேந்திர சிங் ஐ.சி.எஸ் தலைமையிலான உயர்நிலைக் குழு ஆகிய பொறியியல் வல்லுநர்களால் பல்வேறு ஆண்டு




காலம் ஆராய்ந்து வடிவமைக்கப்பட்டதுதான் சேது சமுத்திரத் திட்டம் ஆகும்.

இதன் வழித்தடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, சுற்றுச்சூழல் பாதிக்கப்படாத வகையில் பணிகளை மேற்கொள்ள திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியின்போது பிரதமராக இருந்த வாஜ்பாய் இதன் செயலாக்க ஆய்வுக்கு அனுமதி அளித்தார்கள்.

அப்போதுதான் சேதுசமுத்திரத் திட்டத்தின் வழித்தடம் எது என்பதும் இறுதி செய்யப்பட்டது. பின்னர் ஒன்றியத்தில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு பொறுப்பேற்றது. தி.மு.க. பங்கேற்றிருந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் பிரதமரான டாக்டர் மன்மோகன் சிங் மூலம் 2004-ம் ஆண்டு 2,427 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் அனுமதிக்கப்பட்டது.

முத்தமிழ் அறிஞர் கலைஞரும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி தலைவராக இருந்த சோனியா காந்தியும் முன்னிலை வகிக்க இத்திட்டத்தை முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் 2.7.2005 அன்று தொடங்கி வைத்தார்.



# ஈழத்தமிழர் பிரச்சனைக்கு தமிழீழம் மட்டுமே தீர்வு!

"வாழ்வாங்கு வாழாமல் சாவதில்லை-இந்த வையத்தை மாற்றாமல் வீழ்வதில்லை"

## தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு
## STUDENT'S FEDERATION OF TAMILNADU

சென்னை
08.01.2023

தமிழீழ விடுதலைப் போராட்டம் முளைவிட்ட காலம் தொட்டே தமிழ்நாடு எந்த வித சமரசத்திற்கும் ஆட்படாமல் ஆதரவு சக்தியாக விளங்கி இருக்கிறது. நேரடியாக யுத்தத்தில் பங்கேற்று வீரச்சாவடைந்த மாவீர்களுள் தமிழ்நாட்டு இளைஞர்களும் உண்டு. சிறை சென்ற தலைவர்களும் சாமானியர்களும் உண்டு. இன்றுவரையில் தமிழீழ கனவில் தன் வாழ்நாள் முழுதும் களமாடும் மூத்த தலைவர்களும் உண்டு. 2013 மார்ச் மாதம் எட்டாம் நாள் சென்னையில் கிளந்தெழுந்த மாணவர் போராட்டத்தின் தாக்கம் தமிழகம் முழுதும் கொழுந்துவிட்டு எரிந்த போது மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் ஐயா. வைகோ அவர்கள் போராட்டம் வீரியமடைந்து இருக்கிறது ஆனால் இலக்கை நோக்கி துல்லியமாக நகர்ந்தால் வெற்றி நிச்சயம் என சொல்லி,

1, ஈழத்தமிழர் பிரச்சினைக்கு தமிழீழம் மட்டுமே தீர்வு.
2, இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணை வேண்டும்.
3, தனிநாடு கோரிக்கை குறித்து ஈழத் தமிழர்களிடையே பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும். அதில் நாடுகடந்த தமிழீழ மக்களும் வாக்களிக்கும் படி வழிவகை செய்ய வேண்டும்.
என்பன போன்ற வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானங்களை வரையறுத்துத் தந்தார்கள்.

அவற்றை 2013 மார்ச் 25ஆம் நாள் தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு சார்பில் சென்னை, பத்திரிக்கையாளர் மன்றத்தில் நடைபெற்ற பத்திரிக்கையாளர் சந்திப்பில் முன் மொழிந்தேன்.

அந்த தீர்மானங்களைத்தான் 2013 மார்ச் 27ஆம் நாள் அன்றைய தமிழக முதல்வர் செல்வி. ஜெயலலிதா அவர்கள் சட்டமன்றத்தில் நிறைவேற்றி மாணவர்கள் தங்கள் போராட்டங்களை கைவிட வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

பன்னெடுங்காலமாக "தனி ஈழம்" என்பதே தமிழ்நாட்டில் முழக்கமாக இருந்தாலும் அன்று முதல் ஒட்டு மொத்த தமிழக மக்களின் அதிகாரப்பூர்வ அறைகூவலாக விளங்குகிறது. இந்த கருத்தியலை அடுத்த தலைமுறைக்கு கடத்தும் செயலில் மாணவர் கூட்டமைப்பு சமரசமின்றி செயல்படுகிறது.

இந்தச் சூழலில் செல்லும் நாடுகளிலெல்லாம் உலகத் தமிழர்களால் துரத்தி அடிக்கப்படும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பதிமூன்றாம் சட்டத்திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என சென்னை, பெரியார் திடலில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாடு ஏற்பாடு செய்திருப்பதாய் வீரகேசரி இதழில் செய்தி கொடுத்திருந்தார். ஆனால் தமிழக அரசியல் தலைவர்கள் யாரும் தங்களுக்கு அப்படி ஒரு அழைப்பு இல்லை என்றார்கள். பொய்யான தகவலை பத்திரிக்கை செய்தியாக கொடுத்துவிட்டு அதே நாளில் சென்னையில் பத்திரிக்கையாளர் சந்திப்பை நடத்தி உள்ளார்.

சுமந்திரன் உட்பட ஏனைய இலங்கை அரசியல் சக்திகளுக்கு நாங்கள் சொல்ல விரும்பும் கருத்து ஒன்று தான். தனி ஈழம் என்ற கோரிக்கையைநீர்த்துப் போகச் செய்யும் சமஸ்டி உரிமை, மாகாண உரிமை, மாவட்ட உரிமை என்று எந்த கருத்தை வேண்டுமானாலும் இலங்கையிலோ அல்லது வேறு ஏதேனும் நாடுகளுக்கோ சென்று பேசுங்கள் அது உங்கள் உரிமை. ஆனால், சிங்கள பேரினவாத அரசுக்கு சாமரம் வீசும் கையோடு தமிழ்நாட்டிற்கு வந்து இங்கு இருப்பவர்களை குழப்பும் வேலையை செய்ய வேண்டாம். முத்துக்குமார் மூட்டிய நெருப்பு இன்னும் இங்கு அணையவில்லை என்பதையும் இன உணர்வு மங்கிப் போய் விடவில்லை என்பதையும் மனதில் கொள்ளுங்கள்.

பாரி மைந்தன்,
தலைவர்,
தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு.

# நெருப்போடு விளையாடாதீர்கள்!

காசி ஆனந்தன்

ஜனவரி 10, 2023

தமிழீழத்தில் இயங்கும் முதன்மை வாய்ந்த சமய நிறுவனங்களும் தமிழ்மாணவர் அமைப்புகளும், போரினால் பாதிக்கப்பட்டோர் இயக்கங்களும் ஈழத் தமிழர் சிக்கலுக்கான தீர்வு குறித்து அண்மையில் வெளியிட்ட ஓர் அறிக்கையை அமெரிக்காவில் இயங்கும் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர் அமைப்புகள் ஆதரித்திருக்கின்றன.

இக்கோரிக்கையை ஈழத்தமிழர் நட்புறவு மையமும் ஆதரிக்கிறது என்பதை இவ்வறிக்கை மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்பு தமிழீழத்தில் நிலைகொண்டிருக்கும் சிறீலங்காப் படையில் 25 சதவிகிதம் படைஞர்களை மீளப் பெற வேண்டும் என்பதும், "தீர்வை எட்டும்போது" 1983க்குப் பின்பு தமிழீழத்தில் குவிக்கப்பட்ட படையினர் அனைவரையும் தமிழீழத்தை விட்டு வெளியேற்ற வேண்டும் என்பதும் முதல் கோரிக்கை.

எந்த நிரந்தரத் தீர்வும் உலகநாடுகளின் மேற்பார்வையின்கீழ் தாயகத்திலும் தாயகத்துக்கு வெளியிலும் வாழும் ஈழத் தமிழர்கள் இடையே நடத்தப்படும் ஒரு கருத்துக்கணிப்பு மூலமே முடிவு செய்யப்பட வேண்டும் என்பது இரண்டாவது கோரிக்கை.

விடுதலை உணர்வு கொண்ட தமிழீழ அமைப்புகள் தமிழீழத்தின் நாடாளுமன்றத் தலைமைகளுக்கு – அவர்கள் தீர்வுகுறித்த பேச்சுவார்த்தைக்கு முன்நிபந்தனைகளை விதித்திருக்கிறார்கள்.

தமிழீழத்தில் இருந்து இக்கோரிக்கை அறிக்கையை வெளியிட்டு இருக்கிறவர்கள் தகுதியற்றவர்களா – தள்ளிவைக்கப்பட வேண்டியவர்களா என்றால் இல்லை.

தேர்தலை நினைக்காதவர்களாக இருக்கலாம் ஆனால் தேசத்தை மறக்காதவர்கள் இவர்கள்.

நல்லை ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தமிழீழத்தில் சைவப் பெருமக்களின் நம்பிக்கைக் குரியவராக இருக்கிறார். நானூறு இந்துக் கோயில்களில் குண்டுகளை வீசிய சிங்கள – புத்த இனவெறி அரசோடு பேச்சுவார்த்தைக்குத் தமிழீழத் தலைவர்கள் என்போர் போகும்போது அவர் விழிப்பாய் இருப்பது வியப்பில்லை. திருக்கோணமலை தென்கயிலை ஆதினத்தின் தலைவர் தவத்திரு அகத்தியர் அடிகளார் இக்கோரிக்கை அறிக்கையில் கையெழுத்திட்டு இருக்கிறார்.

அறப்போராட்ட காலமான தந்தை செல்வா காலம் தொடக்கம் தமிழீழ விடுதலைப் போர்க்களத்தில் 60 ஆண்டுகள் காலூன்றி நிற்பவர். மட்டக்களப்பு வணபிதா யோசப்மேரி அவர்கள். அவர் என் நீண்டகால நண்பர். அவருடன் கூடப்பிறந்த இரட்டையர்களில் ஒருவரான அல்போன்ஸ் மேரி வெலிக்கடைச் சிறையில் என்னோடு தளையுண்டு அடைபட்டவர். இவ்வறிக்கையில் அடிகளார் கையெழுத்தைப் பார்த்தேன்.

உறங்கிக் கிடந்த தமிழீழ மக்களை உலுக்கி எடுத்துப் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை உரிமைப் போர் உலா நடத்திய என் உள்ளத்தில் எப்போதும் நிறைந்திருக்கும் தவத்திரு வேலன் சுவாமிகளின் கையெழுத்தையும் இவ்வறிக்கை உள்ளடக்கியுள்ளது.

மட்டக்களப்பு வண பிதா. கந்தையா ஜெகநாதன், யாழ்ப்பாணம் வண. பிதா றொபேர்ட் சசீகரன், மட்டக்களப்பு வண பிதா. செபமாலை பிரின்சன் ஆகிய கிருத்துவத் துறவியர்கள் மக்கள் கோரிக்கையான இம் முன்நிபந்தனைகளை ஏற்றிருக்கிறார்கள்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத் தலைவர் திருமதி. யோ. கனகரஞ்சனி இவ்வறிக்கையில் தன் கையெழுத்தை வழங்கி இருக்கிறார்.

"குரலற்றவர்களின் குரல்" அமைப்பாளர் திரு. மா. கோமகன் அவர்கள் தன்னையும் இவ்வறிக்கையாளர்களில் ஒருவராகக் குறிப்பிட்டு இருக்கிறார்.

இவ்வறிக்கை வெளியிட்டவர்களின் பட்டியலில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் திரு. ஆ. விஜயகுமார் அவர்களின் பெயரும், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் திரு. நி.தர்சன் அவர்களின் பெயரும் இடம் பெற்றுள்ளன.

அமெரிக்காவில் உள்ள ஐந்து ஈழத்தமிழர் அமைப்புகள் இவ்வறிக்கையை ஏற்று அறிக்கையிட்டதைப்போல் உலகின் பல நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களின் அமைப்புகள் அனைத்தும் இவ்வறிக்கையை ஏற்று உடன் அறிக்கைகள் வெளியிட வேண்டும்.

முண்டியடித்துக் கொண்டு சிங்கள இன வெறி ஆட்சியாளர்களோடு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளச் செல்லும் தமிழீழத்தின் "நாடாளுமன்றத் தலைமை"கள் "நாங்கள் பேசப் போவது ஓர் "இடைக்காலத் தீர்வு" குறித்தே தவிர "நிரந்தரத் தீர்வு குறித்து அல்ல" என்பதை முதலில் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.



நான் ஆட்சியாளர்களிடம் பேசப் போகிறவர்களுக்கு கூறிக்கொள்ள விரும்புவது இது தான்:

நெருப்போடு விளையாடாதீர்கள்!

இனவெறிச் சிங்கள ஆட்சியர்களிடம் தமிழீழத்தை ஏலம் போடுவதாக உங்கள் சந்திப்பு இருந்து விடக் கூடாது.

சங்கிலியனும், பண்டார வன்னியனும், குளக்கோட்டனும், உலக நாச்சியாரும் ஆண்ட தமிழீழ மண்ணை விற்பனைக்கோ, குத்தகைக்கோ சிங்கள இனவெறி அரசோடு ஒப்பந்தம் செய்து தமிழனின் சரித்திரத்தில் மண் போடாதீர்கள்.

இறையாண்மை கொண்ட தமிழீழ விடுதலை ஒன்றே தமிழீழ மண்ணில் இன அழிப்பை மேற்கொண்டு வரும் சிங்கள-புத்த இன-மத வெறி அரசின் ஒடுக்குமுறையிலிருந்து தமிழீழ மக்களைக் காப்பாற்ற வல்ல நியாயமான தீர்வாகும் என்பதே எங்கள் ஈழத்தமிழர் நட்புறவுமையத்தின் கொள்கையாகும். இதில் நாங்கள் என்றும் உறுதியாக இருப்போம்.

இடையில் நீங்கள் நடத்த இருக்கும் உங்கள் பேச்சுவார்த்தையில்கூட எங்கள் தாயகம் கொஞ்சம்கூடக் காயப்படக்கூடாது என்பதே எங்கள் கவலையாகும்.

இந்தியாவின் பாதுகாப்பும் தமிழீழத்தின் விடுதலையும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை என்பதை இந்திய அரசுக்கு ஓயாமல் நாங்கள் நினைவூட்டி வருகிறோம்.

ஈழம் தனிநாடு என்பதையும் தனி அரசு என்பதையும் காலம் உறுதி செய்யும்.

கவிஞர். காசி ஆனந்தன்
தலைவர்
ஈழத்தமிழர் நட்புறவு மையம்



ஈழத்தமிழர் நட்புறவு மையம்
Centre for Eelam Tamils Friendship
CETF

09.01.2023

நெருப்போடு விளையாடாதீர்கள்!
காசி ஆனந்தன் எச்சரிக்கை !

நான் ஆட்சியாளர்களிடம் பேசப் போகிறவர் களுக்கு கூறிக்கொள்ள விரும்புவது இது தான்:

நெருப்போடு விளையாடாதீர்கள்!

இந்தியாவின் பாதுகாப்பும் தமிழீழத்தின் விடுதலையும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை என்பதை இந்திய அரசுக்கு ஓயாமல் நாங்கள் நினைவூட்டி வருகிறோம்.

ஈழம் தனிநாடு என்பதையும் தனி அரசு என்பதையும் காலம் உறுதி செய்யும்.

கவிஞர் காசி ஆனந்தன்
தலைவர்,
ஈழத்தமிழர் நட்புறவு மையம்.

Plot No.14, Near Sanpada Railway Station, Sector-30, Vashi, Navi Mumbai - 400 705.
Mobile : 91 – 9444615410 Email: cetfeelam@gmail.com

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.

தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.

எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# உலக செய்திகள்

# இறந்தவர்களின் உடலை இயற்கை உரமாக மாற்ற வழிவகை செய்யும் அமெரிக்கா!

ஜனவரி 02, 2023

உயிரிழந்தவர்களின் உடலை இயற்கை உரமாக மாற்ற வழிவகை செய்யப்படும் புதிய நடைமுறை ஒன்று அமெரிக்கா போன்ற நாடுகளில் செயற்பாட்டிற்கு வந்துள்ளது.



இயற்கை அடக்கம் (Green Funeral) இது கேட்பதற்கு சற்று விசித்திரமானதாக தோன்றலாம். ஆனால் இந்த வார்த்தை தற்போது அமெரிக்கா போன்ற நாடுகளில் பொதுவான வார்த்தையாகவே மாறிவிட்டது.

இனி நமது வீட்டு தோட்டங்களில் நம்மை விட்டு பிரிந்தவர்களை உரமாக வைத்து நம்முடனே வளர்க்கலாம். இது எப்படி சாத்தியமாகி இருக்கிறது இந்த தொகுப்பில் பார்ப்போம்.

பொதுவாக ஒரு மனிதன் உயிரிழக்கும்போது அந்த உடலை தகனம் செய்வது என்பது வழக்கமான நடைமுறை. அதற்காக எரியூட்டுதல் அல்லது புதைத்தல் போன்ற நடைமுறை காலம் காலமாக செய்யப்பட்டு வருகிறது.

ஆனால், இந்த வழக்கமான நடைமுறையின் போது கார்பன் வெளிப்பாடு என்பது சற்று அதிகமாகவே இருக்கிறது. அது சுற்று சூழலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியதாகவும் இருக்கிறது.

எடுத்துக்காட்டாக ஒரு இறந்த மனித உடலை எரிக்கும் போது அதிலிருந்து 573 பவுண்ட் கார்பன் டையாக்சைடு வெளியேறுகிறது.

இது போன்ற கார்பன் வெளியேற்றத்தை கட்டுப்படுத்தும் வகையில் அமெரிக்கா போன்ற நாடுகளில் புதிய நடைமுறை ஒன்று செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

எளிமையாக சொல்ல வேண்டுமென்றால் இறந்த உடலை இயற்கை உரமாக மாற்ற வழிவகை செய்யப்படுகிறது. இந்த பசுமை இறுதி சடங்கு முறை மக்களிடையே வரவேற்பையும் பெற்று வருகிறது.

இந்த மனித உரமாக்கள் என்பது இறந்த உடலை ஒரு எக்கு பாத்திரத்தில் வைத்து பின்னர் வைக்கோல், மரச் சில்லுகள் மற்றும் குதிரை மசால் போன்ற பொருட்களால் அதை மூட வேண்டும்.

தொடர்ந்து நுண்ணுயிரிகள் இறந்த சடலத்தையும் தாவர பொருட்களையும் 30 நாட்களுக்குள் சத்துமிக்க மண்ணாக மாற்றி விடுகிறது.

பின்னர் மனித உரம் தயாரிக்கும் பணியாளர்கள் 30 நாட்களுக்குப் பிறகு எக்கு பாத்திரத்தில் இருந்து உரத்தை அகற்றி இரண்டு முதல் ஆறு வாரங்கள் வரை அதனை பராமரிக்கின்றனர். தொடர்ந்து அந்த மண் இறந்த நபரின் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்படுகிறது.

இந்த, உரத்தை நாம் பொதுவாக பூச்செடிகள் மரங்களுக்காக பயன்படுத்தப்படும் உரம் போலவே நாம் உபயோகிக்கலாம் இல்லையென்றால் யாருக்காவது அன்பளிப்பாகவும் கொடுக்கலாம்.

சியாட்டிலை தலைமை இடமாகக் கொண்ட மனித உரம் தயாரிக்கும் ரிகம்போஸ் (Recompose) என்ற நிறுவனம் இணையத்தில் அளித்திருக்கும் தகவலின் படி, ஒவ்வொரு இறந்த மனித உடலும் ஒரு க்யூபிக் கெஜம் உரத்தை உற்பத்தி செய்கிறது.



மேலும், இந்த வகை மனித உரம் நம் உடலில் உள்ள ஊட்டச்சத்துக்களை இயற்கை உலகிற்கு திருப்பி அனுப்புகிறது மற்றும் "காடுகளை மீட்டெடுக்கிறது, கார்பனைப் பிரித்து புதிய வாழ்க்கையை வளர்க்கிறது" என்று Recompose நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது இந்த நடைமுறையானது அமெரிக்காவில் 2019 ஆம் ஆண்டு முதன்முதலாக வாஷிங்டன் நகரில் சட்டபூர்வமாக்கப்பட்டது.

பின்னர் 2021ல் கொலராடோ மற்றும் ஒரிகன் மாகாணத்திலும், 2022 வெர்மான்ட் மற்றும் கலிபோர்னியா மாகாணத்திலும், தற்போது கடந்த சனிக்கிழமை நியூயார்க் மாகாணத்திலும் இது சட்டபூர்வமாக நடைமுறைப் படுத்தப்பட்டு உள்ளது.

ஆரம்பத்தில், சில மத அமைப்புகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தாலும் தற்போது ஒருமனதாக இந்த சட்டம் அமலுக்கு வந்திருக்கிறது.

இறந்த உடல்கள் தோட்டம் செடி கொடிகள் வளரக்கூடிய மண்ணாக மாறுவது சமூகத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

Teraamation எனப்படும் கிரீன் குரநெசயட முறையை ஆதரிப்பவர்கள் இந்த செயல்முறை சிக்கனமானது மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்றது என்றும் கூறுகிறார்கள்.

# 20 வருடங்களில் 1,668 ஊடகவியலாளர்கள் படுகொலை!

ஜனவரி 03, 2023

கடந்த 20 ஆண்டுகளில் உலகம் முழுவதும் 1,668 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

2003 முதல் 2022 வரையான காலத்தில் 1,668 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளர். இக்காலப்பகுதியில் வருடாந்தம் சராசரியாக 80இற்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என பாரிஸ் நகரை தளமாகக் கொண்ட என எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு (RSF) கடந்த வார இறுதியில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

2000 ஆம் ஆண்டிலிருந்து நோக்கினால் இந்த எண்ணிக்கை 1,878 ஆக உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2003 முதல் 2022 வரையான 20 வருட காலத்தில் ஈராக் மற்றும் சிரியா ஆகியன ஊடகவியலாளர்களுக்கு மிக ஆபத்தான நாடுகளாகியுள்ளன. இவ்விரு நாடுகளிலும் கடந்த 20 வருடங்களில் மொத்தமாக 578 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அவற்றுக்கு அடுத்ததாக, மெக்ஸிகோ (125), பிலிப்பைன்ஸ் (107), பாகிஸ்தான் (93), ஆப்கானிஸ்தான் (81), சோமாலியா (78) ஆகிவற்றில் அதிக எண்ணிக்கையான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

சிரிய யுத்தம் காரணமாக 2012 மற்றும் 2103 ஆகியன மிக இருண்ட வருடங்களாக இருந்துள்ளன என ஆர்எஸ்எவ் தெரிவித்துள்ளது. 2012 ஆம் அண்டு 144 ஊடகவியலாளர்களும் 2013 ஆம் ஆண்டில் 142 ஊடகவியலாளர்களும் உயிரிழந்துள்ளனர்.

தென் பின் இந்த எண்ணிக்கை குறைவடைந்து வந்து, 2019 ஆம் ஆண்டின் பின் வரலாற்று ரீதியாக மிகக் குறைவாக இருந்தது. எனினும், 2022 ஆம் ஆண்டு எந்த எண்ணிக்கை மீண்டும் அதிகரித்தது. யுக்ரைன் யுத்தம் இதற்கு பகுதியளவு காரணமாகும்.

2022 இல் 58 ஊடகவியலாளர்கள் அவர்களின் பணிகளை செய்தமைக்காக கொல்லப்பட்டனர். 2021ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கை 51 ஆக இருந்தது' என ஆர்எஸ்எவ். நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரியில் ரஷ்ய படையெடுப்பு ஆரம்பமான பின்னர் யுக்ரைனில் 8 ஊடகவியாளர்கள் கொல்லப்பட்டனர். முந்தைய 19 வருடங்களில் அங்கு 12 ஊடகவியலாளர்களே கொல்லப்பட்டனர். ரஷ்யாவில் கடந்த 20 வருடங்களில் 25 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆசியாவில் பிலிப்பைன்ஸ்க்கு அடுத்ததாக பாகிஸ்தான் (93), இந்தியா (58) ஆகியவற்றில் அதிக எண்ணிக்கையான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.




கடந்த 20 வருடங்களில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களில் 4.86 சதவீதமானோர் பெண்கள். இக்காலப்பகுதியில் 81 பெண் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 2012 ஆம் ஆண்டிலிருந்து 52 பெண் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 2017 ஆம் ஆண்டில் 10 பெண் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர் எனவும் எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

# உலகப் பொருளாதாரத்திற்கு 2023 மிகக் கடினமான ஆண்டாக அருக்கும்!

ஜனவரி 02, 2023



கடந்த ஆண்டை விட 2023 ஆம் ஆண்டு முழு உலகிற்கும் மிகவும் கடினமான ஆண்டாக இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் பிரதானி கிறிஸ்டலினா ஜியோஜிவா கூறுகிறார்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சீனாவின் மெதுவான வளர்ச்சியே இதற்கு காரணம் என்று அவர் செய்தியாளர் சந்திப்பொன்றில் கூறியுள்ளார்.

யுக்ரைன் போர் மற்றும் அதிக வட்டி வீதங்கள் காரணமாக உலகப் பொருளாதார வளர்ச்சி 2.7 சதவீதம் என்று கடந்த ஒக்டோபர் மாதம் சர்வதேச நாணய நிதியம் அறிவித்தது.

மேலும், உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரத்தை கொண்டுள்ள சீனா, தனது கொரோனா சுகாதாரக் கொள்கைகளைத் தளர்த்தியதையடுத்து, பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதனால் 40 ஆண்டுகளுக்குப் பிறகு முதல்முறையாக பொருளாதார வளர்ச்சி வீதம் குறைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

யுக்ரைன் போரினால் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கடுமையான பொருளாதார மந்தநிலைக்கான அறிகுறிகள் தென்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மெக்சிகோ சிறைச்சாலையில் துப்பாக்கிச் சூடு 14 பேர் பலி!

ஜனவரி 02, 2023

வடக்கு மெக்சிகோவில் உள்ள சிறைச்சாலையில் போதைப்பொருள் கடத்தல் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் ஆயுததாரிகள், மேற்கொண்ட, துப்பாக்கித் தாக்குதலில் 14 பேர் உயிரிழந்துள்ளனர.

அத்துடன், கைதிகள் பலர் தப்பிச் சென்றுள்ளனர். கவச வாகனங்களில் சிஹுவாவா மாநில சிறைப் பகுதிக்கு வந்தவர்கள், முதலில் காவலர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலின்போது 14 பேர் கொல்லப்பட்டதுடன், சுமார் 24 கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர். வெவ்வேறு குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் இந்த சிறையில் கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் நடத்தியவர்கள் கறுப்பு உடையில் இருந்ததாகவும், ஆயுதம் ஏந்தியிருந்ததாகவும், அந்த வழியாக சென்ற வாகனங்கள் மீதும் அவர்கள், துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதைத் தொடர்ந்து உள்ளூர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு உதவிக்காக, இராணுவமும் தேசிய காவல் துறையினரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே கடந்த ஆகஸ்ட்டிலும் இந்த சிறையின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு, 11 கைதிகள் தப்பிச்சென்றனர்.

மெக்சிக்கோவில் போதைப்பொருள் போரில் இதுவரை 60,000 க்கும் மேற்பட்ட மெக்சிகோ மக்கள் காணாமல்



போயுள்ள அதேவேளை ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

# பாகிஸ்தானில் உணவு பஞ்சம் மூன்று வாரங்களில் திவாலாகும் என எச்சரிக்கை!

ஜனவரி 13, 2023

கடுமையான உணவு பஞ்சம் ஏற்பட்டுள்ள நிலையில், அடுத்த 3 வாரங்களில் பாகிஸ்தான் திவாலாகும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022ல் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளத்தால், பாகிஸ்தானின் பயிர் சாகுபடி சுமார் 80 சதவீதம் வரை பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக கடந்த அக்டோபரில் கோதுமை உள்ளிட்ட உணவு தானியங்களுக்கு பற்றாக் குறை ஏற்பட்டது.

வெளிநாடுகளில் இருந்து உணவு தானியங்களை இறக்குமதி செய்து பற்றாக்குறை ஈடு செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில், பாகிஸ்தானின் தற்போதைய அந்நிய செலா



வணி கையிருப்பின் மூலம் 3 வாரங்கள் மட்டுமே சமாளிக்க முடியும் என்ற நிலை உருவாகி உள்ளது.

இதனால் வெளிநாடுகளில் இருந்து உணவு தானியங்கள், கச்சா எண்ணெய் உள்ளிட்டவற்றை இறக்குமதி செய்வது கேள்விக்குறியாகி இருக்கிறது. மட்டுமின்றி, நாடு முழுவதும் கோதுமை மாவுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சலுகை விலையில் அரசு வழங்கும் கோதுமை மாவுக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர். மட்டுமின்றி, கோதுமை வாங்க திரண்ட மக்களால் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி இதுவரை 5 பேர் மரணமடைந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

அந்நிய செலாவணி கையிருப்பு குறைந்திருப்பதால் அடுத்த 3 வாரங்களில் பாகிஸ்தான் திவாலாகும். இலங்கையை போன்று அந்த நாடு பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கும் எனவும் பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

# அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும்

ஜனவரி 14, 2023

அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என வேண்டுகோள் விடுக்கும் சர்வதேச பிரச்சார நடவடிக்கையொன்றை அமெரிக்கா ஆரம்பித்துள்ளது.

சர்வதேச அளவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் மற்றும் நியாயமற்ற முறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்யவேண்டும் என வேண்டுகோள் விடுக்கும் என்ற பிரச்சார இயக்கத்தை அமெரிக்கா ஆரம்பித்துள்ளது.

மனித உரிமைகளிற்காக சர்வதேச பிரகடனம் தெரிவிப்பது போல சர்வதேச அளவில் ஒவ்வொரு பிரஜையும் கருத்து சுதந்திரம் வெளிப்பாட்டு சுதந்திரம் அமைதியான விதத்தில் ஒன்கூடும் சுதந்திரத்திற்கான அடிப்படை உரிமைகளிற்கு உரித்தானவர்கள் என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

அனைத்து பகுதிகளிலும் உள்ள சாதாரண மக்களும் இந்த பிரச்சார முயற்சிக்கு ஆதரவளிக்கவேண்டும் எனவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என அமெரிக்கா வேண்டுகோள் விடுக்கின்றது மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களின் உலகளாவிய தன்மையில் நம்பிக்கை கொண்ட அனைவரையும் இந்த முயற்சிக்கு ஆதரவளிக்க அமெரிக்கா அழைப்புவிடுக்கின்றது என அமெரிக்க இராஜாங்க




திணைக்களம் தெரிவித்துள்ளது.

உங்கள் செயல்களிலும் உங்கள் குரல்களிலும் சக்தி இருக்கின்றது இந்த கைதிகளை விடுவிக்கவும் மனித உரிமை மீறல்களை குறைக்கவும் நீங்கள் உதவலாம்எனவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER=RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4






சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை

உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# முதுபெரும் தளபதி கேணல் கிட்டு அவர்களின் நினைவாக தலைவர் அவர்கள் விடுத்த இரங்கற் செய்தி



மனதின் ஆழ்த்து உள்ளுணர்வுகளை வார்த்தைகளில் சித்தரிப்பு கடினம்; அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஓர் உணர்வுப் பூகம்பத்தை மனித மொழியில் விபரிக்க முடியாது. எனது அருமைத்தம்பி கிட்டுவின் இழப்பும் அப்படித்தான். அவனது மறைவு எனது ஆன்மாவைப் பிழிந்த ஒரு சோக நிகழ்வு; அதனைச் சொற்களால் வார்த்துவிட முடியாது.

நான் கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக, எனது சுமைகளைத் தாங்கும் இலட்சியத் தோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரே இலட்சியப் பற்றுணர்வில், ஒன்றித்த போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்து கொண்ட அனுபவத்தில், ஒருவரை ஒருவர் ஆழமாக இனம் கண்ட புரிந்துணர்வில் வேரூன்றி வளர்ந்த நேயம் அது.

அனனுள் ஒரு அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்திலிருந்தே கண்டுகொண்டேன். அது அவனது அழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளும் அவனிடம் இருந்தன. அதனால் அவன் ஒரு அற்புதமான இலட்சியவாதியாக வாழ்ந்தான்; போராடினான்; அனைத்து மக்களது இதயங்களையும் கவர்ந்தான். போர்க்களத்தில் வீரனாகவும், பொதுமக்களின் தோழனாகவும், எங்கும் எல்லாவற்றிலும், எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது.

கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட, ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு.

வங்கக் கடலில் பூகம்பமாக அவனது ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையால் எமது தேசமே விழித்துக்கொண்டது.

**கிட்டு, நீ சாகவில்லை; ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கிறாய்!**

# நினைவழியா நாட்களும் நெஞ்சில் மூண்ட நெருப்பும்

**கேணல் கிட்டு**
**லெப். கேணல் குட்டிசிறி**
**மேஜர் மலரவன்**
**கப்டன் ஜீவா**
**கப்டன் குணசீலன்**
**கப்டன் நாயகன்**
**கப்டன் றொசான்**
**லெப். அமுதன்**
**லெப். நல்லவன்**
**லெப். தூயவன்**



அன்று;
எங்கும் இடிமுழங்கும்;
எறிகணைகள் கூவிவரும்;
எதிரி எம்மண்ணில் வர எத்தனிப்பான்;
என்றாலும் இங்கே பதட்டம் இருக்காது;
கடைகள் திறந்திருக்கும்;
கோயில் கொடியேற்றம் இனிதே நடந்தேறும்;
சின்னத்தங்கை பள்ளிக்குப் போவாள்;

இறக்கையில் பெரிய குண்டுகள் சுமந்து,
"இரும்புப்பறவை" வட்டங்கள் போடும்;
கீழேவந்து "எச்சங்கள்" போட்டு,
கிளம்பிக்கொண்டு மீண்டும் போகும்.
என்றாலும் எம்மண் பயந்து நடுங்காது.
எங்கும் இன்னிசை நிகழ்ச்சி நடக்கும்;
"நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்"
காற்றில் இந்தக் கானம் கலக்கும்;
காத்தவராயன் கூத்துத் தொடங்கும்.

எல்லோருக்கும் ஒரே ஒரு நம்பிக்கை.
"அவர்கள் விழித்திருப்பார்கள்."
நம்பிக்கை என்றும்
பொய்யாகிப் போகாது.
வாகனத்திலேறி புலிகள் விரைவர்;
"கிட்டு" தன்காரில்   தெருவைக்கிழத்து,
களத்துக்குப் போவதைக் கண்டு மகிழ்வர்.
சற்றுநேரத்தில் சத்தங்கள் ஓயும்;

மரக்கிளைகட்டி உருவம் மறைந்த,
"50 கலிபர்" பூட்டிய "பிக்கப்",
அங்கும், இங்கும் ஓடித்திரியும்.
"கிட்டு" அந்த "வானில்" நின்று,
தோள்கள் உதறச் சுடுவதைப் பார்க்கலாம்;
குண்டுசுமந்து வந்துமிரட்டிய,
இயந்திரக் கழுகு எங்கோ மறையும்.

இன்று
"50 கலிபர்" அழுகிறது.
"கிட்டு எங்கே? கிட்டு எங்கே?
"இரு, இரு திரும்பி வருவேன்" என்று!
என்னிடம் சொல்லிப் போனவன் எங்கே?
தளபதிதிரும்பித் தாயகம் வருகையில்,
கடலில்மறித்த கைகளைக் காட்டு.

கப்பலில் மேல் தளத்தில
நெடிய பனைபோல நிமிர்ந்து நின்று,
கடைசிமணித்துளி என்னடா நினைத்தாய்?
கப்பல் தகர்ந்து கனல் மூண்ட போது,
என்தோழனே! என்னடா நினைத்தாய்?
தாயை நினைத்தாயா? தாரத்தை நினைத்தாயா?
தலைவன் முகத்தோடு,
தாயகத்தை நினைத்தாயா?

இதயமற்ற இரும்புச் சுடுகலன்,
எனக்கே விழிநீர் சொரியும் போது
நெஞ்சில் உன்னைச் சுமந்த தாயகம்;
நெருப்பாய் நிற்கும் உனது தோழர்;
உலகத்திசைகளில் வாழும் நண்பர்;
உன்னை வளர்த்த உயர்ந்த தலைவன்,
எப்படிப் பொறுத்து இருந்திடக் கூடும்?
உனது நினைவே நெஞ்சில் சுமந்து,
எமது பயணம் இனியும் தொடரும்.

– புதுவை இரத்தினதுரை



மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்மி
பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6




சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com




HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000




PEEL TAE KWON-DO
PEEL TAE KWON DO
Family Martial Arts
Trusted Local Taekwon - Do
Training School
* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
2016 READERS' CHOICE AWARDS
* Top Quality Training for Kids, Teens and Adults
Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571
Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268

# கிட்டுவின் இழப்பு இலையின் உதிர்வல்ல மலையின் சரிவு!

ஆரம்ப காலத்தில் இருந்தே இன்னொரு வரலாற்று நாயகன் என்றால் அதவர்தான், என்றுமே கலகலப்பாக உற்சாகம் மிகுந்து காணப்படும் கிட்டு. நாம் இந்தியாவிற்கு 1981இலே சென்றபோது அவரை விடுதலைப்புலிகளின் மதுரைமுகாமில் முதற்தடவையாக சந்தித்தோம். இளமைப்பருவத்தில் குறும்புக்காரராக விளங்கிய கிட்டு, தமிழ் நாட்டு உள்ளூர் வாசி களின் பழைமைக்கொள்கைகளைக் கிண்டல்செய்து சவால் விட்டு மகிழ்வார். ஒரு தடவை வேதியர்க்கு உரிய புனிதப் பூணூல் தரித்து உணவு விடுதி ஒன்றுக்குள் நுழைந்து ஆட் டிறைச்சிக்கறியும், கோழிப்பெரியலும் தருவித்து, அங்கிருந்த சைவ உணவினர் வியப்போடும் வெறுப்போடும் பார்த்துக் கொண்டிருக்க கிட்டு தனது அசைவ உணவை நன்கு சுவைத்து உண்டார். தலைமைப் பண்புகள் அபரிதமாக நிறைந்த ஒரு இளைஞரே கிட்டு என்பதில் சந்தேகமே இல்லை.



1983ற்கும், 1987ற்கும் இடைப்பட்ட காலத்தில், யாழ்ப்பாணத்தில் அவர் விடுதலைப்புலிகளின் ஆயுத எதிர்ப்பு இயக்கத்திற்கு தலைமைதாங்கி பல இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுத்தார். இதனால் ஒரு துணிகரமான கெரில்லாப் போராளியாகவும், போர்த்தந்திரோபாயத்தில் ஒரு விற்பன்னராகவும் மக்களிடையே அவர் புகழீட்டினார். கட்டிறுக்கமான ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் கலகலப்பான அவரது சுபாவமும் ஒத்திசைந்து அவருக்கு ஒரு கவர்ச்சிகரமான ஆளுமையைக் கொடுத்தது எனலாம்.

ஆனால் கிட்டுவைப் பற்றி எண்ணும்பொழுதெல்லாம் போராளிகள் மீதும், மக்கள் மீதும், தமிழரின் தாயகம் மீதும் உணர்ச்சி பூர்வமாக அவர் கொண்டிருந்த அளவு கடந்த நேசம் தான் நினைவுக்கு வருகிறது. 1985 இலே எம்மைச் சந்திக்க கிட்டு சென்னைக்கு வந்த போது பாலாவையும் என்னையும் தம்மோடு கூட்டிக்கொண்டு யாழப்பாணம் திரும்ப அவர் திட்ட மிட்டு வந்ததர். அங்கே எம்மைப் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும் என்பதுடன் தாம் நேசித்த யாழ்ப்பாணத்தை எனக்குச் சுற்றிக்காட்டவும் கருதியிருந்தார்.



----

முல்லைத்தீவு அளம்பில் காடுகளில் அமைந்திருந்த 1:4 பாசறையில் கிட்டுவைக் கண்டதும் எமக்கு மகிழ்ச்சியைத் தந்தது. 1988ல் தமிழ் நாட்டில் இருந்து நாம் தப்பிச்சென்ற சில நாட்களில் தமிழ் நாட்டில் இடம் பெற்ற ஒரு சுற்றிவளைப்பில் அப்போது, சென்னையில் இருந்த கிட்டுவும் அகப்பட்டு, பாதுகாப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். பின்னர் இவர் யாழ்ப்பாணத் தடுப்புக்காவலுக்கு இடமாற்றம் பெற்றார். ஆயினும் அவருடைய உடல் ஊனத்திற்கு வழங்கப்படும் ஒரு சலுகையாக இந்திய அமைதிப்படைத்தலைமைப் பீடம் தடுப்புக்காவலில் இருந்து அவரை விடுவித்தது. அவர், உடனடியாக முல்லைத்தீவுக் காடுகளில் ஈரந்த பிரபாகரன் அவர்களிடமும், புலிப் போராளிகளிடமும் சென்றார். பிரபாகரன் அவர்களுடன் இந்தத் தருணத்தில் உளவியல் ரீதியாக, போராளிகளுக்கு உற்சாகம் ஊட்டுவதில் கிட்டு தமது தீரத்தைக் காட்டினார். புதிதாகக் கற்க வேண்டும் என்பதிலும் ஒருவர் தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதிலும் கிட்டு எப்பொழுதுமே பேரார்வம் கொண்டவர். போராளிகளுக்கு அவர் வகுப்புகள் நடத்தினார். அவர்களுடைய நடவடிக்கைகளிலும் ஈடுபாடு காட்டினார். நிழற்படம் பிடிப்பதில் கிட்டு சூரர். நாம் அங்கு தரித்திருந்த போது பிரபாரகன் அவர்களையும் எம்மையும் பல கோணங்களில் படம் பிடித்தார்.

----

ஒக்ரோபர் முற்றபகுதியில், பிரபாகரன் அவர்களை நேரில் சந்தித்து ஆலோசனை புரிவதற்காக, முல்லைத்தீவுக் காடுகளுக்கான இரண்டாவது பயணத்தை மேற்கொண்டோம். கிட்டுவின் துண்டிக்கப்பட்ட காலுக்குச் சிகிச்சை பெறுவதற்காக அவரை இலண்டனுக்கு அனுப்பத் தாம் விரும்புவதாக இந்தப் பயணத்தின்போதே பிரபாகரன் அவர்கள் பாலாவிடம் கூறினார். தம்மை வெளிநாடு அனுப்பத் தீர்மானிக்கப் பட்டிருப்பதை அறிந்ததும் கிட்டுவின் மனம் ஊசலாடியது. சரியான உறுப்புப் பொருத்தல் கிடைத்தால், இலகுவாக நடக்கவும், தடையின்றி நடமாடவும் முடியும் என்பது அவருக்கு மகிழ்ச்சியே. ஆனால் தாம் வெகுவாக நேசிக்கும் தமது போராளிகளையும் தாய் நாட்டையும் விட்டுப் பிரிவது அவருக்குச்சஞ்சலத்தைக் கொடுத்ததால், பிரிவை அவரால் நினைத்துக் கூடப்பார்க்க முடியவில்லை. தமது போராளிகளுக்கு பயிற்சி வழங்கும் பணியில் கிட்டு ஒளிர்ந்தார்: அவர்களுடைய ஈடுபாடுகளில் அவர்களை ஊக்குவித்தார். அவர்களை உற்சாகமாக ஈடுபடுத்த புதிய திட்டங்களையும் அறிமுகப்படுத்தினார். எனவே, பிரிய வேண்டிய நாள் நெருங்க,





கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் கிட்டு - சிந்தியா பதிவுத் திருமணத்தை அடேல் பாலசிங்கமும், அன்ரன் பாலசிங்கமும் நடத்தி வைத்தனர்.

அவரும்சரி, அவருடைய போராளிகளும் சரி, கலகலப்பின்றிச் சோர்வாகக் காணப்பட்டார்கள். நான் பார்த்த பரிதாபத்துக்கு உரிய காட்சிகளில் ஒன்று. அளம்பில் காட்டில் இருந்து கிட்டுவை வெளியே கூட்டிச்சென்ற நாளன்று, அந்த வரலாற்று நாயகன், பிரபாகரன் அவர்களுடைய தோளில் முகத்தைப் புதைத்து தேம்பியழுதது தான். அவரை ஒரு கதிரைப் பல்லக்கில் இருந்திய அவருடைய போராளிகள் அவரை உலங்கு வானூர்தி வரை தோளிலே சுமந்து சென்றார்கள். இந்த வடிவிலே தான் பாலாவை அவர்கள் முன்னர் தோளில் சுமந்தமையை நினைவு கூர்ந்தேன். காட்டுக்குள் இருந்து வெளியே கொண்டு வரப்படும் போது, தமக்கே உரிய நேர்த்தியில், கிட்டு தமது போராளிகள் முன், கலக்கத்தை முகத்தில் காட்டாது கலகலப்பாக வேடிக்கையாகப்பேசி தமது பாசத்தை அவர்கள் மீது கொட்டினார். கிட்டு கொழும்பை அடைந்ததும் அவரைப் பிரித்தானிய தூதரகத்திற்குக் கூட்டிச் சென்றோம். பிரித்தானியத் தூதருடன் கலந்துரையாடிய பின், பிரித்தானியாவுக்கான கிட்டுவின் வீசா அனுமதி அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், லண்டன் புறப்படும் முன், கிட்டு ஒரு முக்கிய விடயத்தை கவனிக்க வேண்டியிருந்தது. இந்திய அமைதிப்படைப் பாதுகாப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட பின் முல்லைத்தீவுக் காடுகளுக்கு சென்றதிலிருந்து, மருத்துவ மாணவியான அவருடைய காதலி சிந்தியாவிடம் இருந்து அவர் பிரிந்து வாழவேண்டிதாயிற்று. சிந்தியாவோடு மீண்டும் இணைய வேண்டும் என்று அவர் தவித்தார். அவரைச் சந்திக்க சிந்தியா யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குப் பயணம் புரிந்தார். அங்கே திருமணம் செய்ய அவர்கள்





தீர்மானித்தார்கள். சடங்கிலே கலந்து கொள்ள கிட்டுவின் தாயார் வல்வெட்டித்துறையில் இருந்து கொழும்பிற்கு அவசரமாக வந்தார். சிந்தியாவின் பெற்றோர் ஏற்கெனவே கொழும்பில் இருந்தார்கள். பேச்சு வார்த்தையின் போது புலிப்பிரதி நிதிகள் தரித்திருந்த விடுதியின் அறை ஒன்றிலே ஒக்ரோபார் மாதம் 25ம் திகதி, கிட்டுவுக்கும், சிந்தியாவுக்கும் பதிவுத்திருமணம் நடைபெற்றது. சில நாள் கழித்து கிட்டு லண்டனுக்கு விமானம் மூலம் பயணமானார்.

----

இந்தியக்கடற்படையினரின் கரங்களில் சிக்கி 1993இலே, துயர்தரும் வகையில் அவர் மரணம் அடைந்தார். அதையடுத்து அவருடைய சொந்த ஊரான வல்வெட்டித்துறையில் பிரமாண்டமான அளவில் துயராஞ்சலி ஒன்று நடைபெற்றது. ஒரு இலட்சத்துக்கு மேலான மக்கள் அந்த வைபவத்தில் திரண்டிருந்தார்கள். வெறுமே அஞ்சலி செலுத்த அல்ல. அந்த மண்ணின் மைந்தன் மீது இருந்த ஆழமான அன்பையும் மதிப்பையும் வெளிக்காட்டவே பெரும் திரளாக மக்கள் அங்கு அணி திரண்டனர்.

நன்றி: திருமதி அடேல் பாலசிங்கம்
திருமதி அடேல் பாலசிங்கம் அவர்கள் “சுதந்திர வேட்கை: நூலில் கேணல் கிட்டுவைப் பற்றி எழுதிய சில கருத்துக்களை அவரது 30ஆம் ஆண்டு நினைவாக இங்கு பிரசுரிக்கப் படுகின்றது.

# நினைவுடனும் கனவுடனும் காலத்தின் ஒவ்வொரு அசைவுடனும் இருக்கும் அவர்கள்



பட்டத்து யானையையும்
வீர வாள்களையும் இழந்து
பல பத்து ஆண்டுகள் முற்றிற்று.
கொற்ளவையின் குங்குமத்தை
கடலிற் கரைத்து பல தசாப்தமாயிற்று.
கரையெங்கும் பூபரவி
நம்பிக்கை விதைத்து
அலைமீதேறி வருவாரெம் குமாரர்களென
காத்திருந்தோம்.
திசையெங்கும் அளந்து வந்த காற்றை
சிறைபிடிக்க நின்றது இமயம்.
காற்றா கைவிலங்கிட ஒப்பும்?
ஆழிநடுவே தீயாயிற்று.
கரையிருந்த எம் காதுகளில்
கூர்வேல் சொருகியது
வங்கக் கடலலை.
சோகத்தைத் தாங்குதல் எளிது
துரோகத்தைத் தாங்குதல் எங்கனம்?
காலப்பேய் அகப்பட்டதனைத்தையும்
அள்ளி வாயுண்டு போகிறது.
எஞ்சுவது எமக்கு நினைவுகள் மட்டுமே.
இருக்கவேண்டியன இல்லையெனவும்
போகவேண்டியன கண்முண்னெனவும்
நெடுநாளாய்.
சித்திரபுத்திரனின் கணக்கெங்கோ பிசகிறது.
கிட்டு
குட்டிச்சிறி
கூடவந்த தோழர்கள்
பெயரினை மட்டும் அறிந்தவர் பெருகியும்
நேரினில் தெரிந்தவர் அருகியும்
பூத்து விட்டது புதிய தலைமுறையொன்று
இது நியதியெனினும்
காத்தவராயன் இன்றும் எம்மோடிருக்கிறானே
வாயினிலே் கூத்தாய்
ஆரியப் பூமாலைக்கு அழிவில்லை என்பதாய்
கோயில் வீதியில் குதிக்கிறாளே இன்றும்
காக்கைவன்னியன் கற்பனைப் படைப்பென
எழுதியவனே ஒப்புக் கொடுத்த பின்னும்,
உயிருடன் தானே உலவுறான் எம்முடன்.
எம் காலத்து அதிசையங்கள்மட்டும்
"எல்லாம்கற்பனை" என்றாகி
போவரோ எனும் அச்சமெழுகிறது
அடி நெஞ்சில்.
கிட்டு ஆற்றலால் நிமிர்ந்த உயரமென்றானான்
மலை போல.
குட்டிச்சிறி
நம்பிக்கை சுமந்துவிரிந்தான்
கடல் போல.
மற்றத்தோழர்களென்ன குறைவா?
பற்றியெரிவோம் எல்லோரும் எனும் கட்டலைக்கு
பணிந்த ஒன்றுக்காகவே
எத்தனை வீரர்கள் அவர்கள்
வஞ்சனை செய்தது வல்லாதிக்கம் மட்டுமா?
நெஞ்சிலிவரின் நினைவகற்று வோமெனில்
நாமும் தான்.
கிட்டு.

தலைவனை நெஞ்சிற் பொத்தியவன் மட்டுமல்ல
நரம்போடும் குருதிக்கலங்கள்
ஒவ்வொன்றினுள்ளும்
கலந்து வைத்தவன்.
விடுதலைக்காக தலைவனை நேசித்து
பின்னர்
தலைவனுக்காக விடுதலையைப் பூசித்தவன்.
தோளிற் கைபோட்டால்
தோழமையில் ஆழம் தெரியும்
அக்கணங்களில்.
சிரசேறிய செருக்குடன் தான்
பகைவரெம் வாசல் வந்தனர்.
கிட்டு வழிமறித்த பின்னரே
ஆணவம் தவறென அறிந்தனர்.
வீரத்துக்குச் சான்றிருந்தது முன்னரும்
எம் கண்ணெதிரே நின்றதும்
கையெடுத்து மகிழ்ந்ததும்
கிட்டு என்ற வடிவுதானே.
கோபம் ஒரு குற்றமல்ல
உண்மை மனிதரின் உயிர்.
எனக்கு கோபமே வருவதில்லையென
எங்கேயும் ஒரு குரல் கேட்டால்
அவன் ஞானி.
அல்லது கசபோக்கிலி.
கிட்டு உண்மைமனிதனாகவே ஒளிர்ந்தான்
இறக்கும் இறுதி நொடிவரை.
குட்டிச்சிறியும்
ஒன்பது தோழரும் அவ்வாறே
மானுடவாழ்வு சாவுடன் முற்றுமெனின்
அது வாழ்வல்ல.
நெடுநாள்நினைவாய் நிலைக்கனும்.
கிட்டு எம் நினைவுடன்
கிட்டு எம் கனவுடன்
கிட்டு எம் காலத்தின் ஒவ்வொரு அசைவுடன்
இணைந்திருந்து போனான்.
இனியும் இருப்பான் எம்முடன்.
இருப்பார்கள் இனியும் அவர்கள் எம்முடன்.
ஊழிக்கடைவரை.

– புதுவை இரத்தினதுரை

# சுதந்திரப் பொங்கல்



இராண்டாயிரம் ஆண்டுப் பொங்கலடி
தோன்றட்டும் ஆயிரம் மங்கலங்கள்
மண்ணாற்றல் யாவுமே மேல்வரட்டும்
மாற்றலர் கெய்யிடர் போய்விடட்டும்

ஆடிய பச்சைக் கதிர்களெல்லாம்
அறுவடை முடிந்து அரிசியாகி
வாடிய வயிறை குளிரவைக்கும்
வளமான தைப்பொங்கல் நாளிதடி

முத்தான நெல்லின் மணிகளோடு
முந்திரிகை வற்றல் சேர்ந்தினிக்கும்
சத்தான பயறும் கலந்தவிந்த
சர்க்கரைப் பொங்கலாய்
வாழ்வினிக்கும்

பச்சை அரிசி பால் பொங்கிடட்டும்
பட்டினி துன்பங்கள் நீங்கிடட்டும்
அச்சங்கள் நீங்கிட ஆண்டு இதில்
ஆதார பொங்கலோ பொங்கிடட்டும்

ஓடிடும் காலங்கள் ஓடிடட்டும்
ஒன்றுமில்லா நிலை மாறிடட்டும்
தேடிய செல்வங்கள் சேர்ந்திடட்டும்
தமிழ்
தேசம் மகிழ்வினில் ஆடிடட்டும்

ஆண்டுக்கொருமறை வாற பொங்கல்
அடுத்த ஆண்டினில் வரும் பொழுது
மீண்டும் எம்மை நாங்கள் ஆளுகின்ற
மேன்மையுறு நாளாய் தோன்றிடட்டும்

வீட்டுக்கு வீடு நாம் பொங்கிடலாம்
வெற்றி விழாவாகப் பொங்கிடலாம்
நாட்டு விடுதலை கிட்டியதால்
நமக்கது சுதந்திரப் பொங்கலடி

நாவண்ணன்







# 5 மாணவர்களின் கொலைக்கான நீதி நிலை நாட்டப்பட வேண்டும்!

04.01.2023

திருகோணமலையில் 2006ம் ஆண்டு ஐந்து இளைஞர்கள் சுட்டுகொல்லப்பட்ட சம்பவம் குறித்து வடக்குகிழக்கு மக்களின் போராட்டத்திற்கான ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டாளர் ராஜ்குமார் ரஜீவ்காந் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் ஆற்றிய உரையில் அன்று இடம்பெற்ற சம்பவங்களை விபரித்ததுடன் மாணவர்களின் கொலைக்கான நீதி நிலை நாட்டப்பட வேண்டும், வைத்தியர் மனோகரன் அவர்களிடன் வழக்கை மீண்டும் இங்கே நடத்த வேண்டும் என கேட்டேன், நீண்ட நாட்களின் பின் அவரோடு பேசக்கிடைத்தது. பொறுப்புக் கூறலை அரசு தட்டிக்கழிப்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. என தெரிவித்துள்ளார்.




அவர் மேலும் தெரிவித்ததாவது

2006 ம் ஆண்டு ஜனவரி இரண்டாம் திகதி எனது நண்பர்கள் எந்த வித காரணமுமின்றி விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

18 வருடங்கள் ஒன்றாக இருந்தவர்கள் கொலை செய்யப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் எனக்கு மிகவும் நெருக்கமானவர்கள் நாங்கள்அரச கட்டுப்பாட்டு பகுதியிலிருந்தோம், யுத்தம் இடம் பெறும் பகுதியில் இல்லை.

அவர்கள் கொலை செய்யப்பட்டார்கள் அங்கு நடந்தவைகளிற்கான சாட்சி நான்.

பிரேத அறையில் பெருமளவு குருதியுடன் நான் உடல்களை பார்த்தது அதுவே முதல் தடவை.

நான் பல உறக்கமற்ற இரவுகளை எதிர்கொண்டேன் திருகோணமலை மக்களும்தான் இன்றும் அவர்களது உறவினர்கள் நீதிக்காக போராடிக்கொண்டிருக்கின்றார்கள்.

2006 ஜனவரி இரண்டாம் திகதி சரியாக மாலை 7.30 மணிக்கு இந்த சம்பவம் இடம்பெற்றது

படுகொலை செய்யப்பட்டவர்களில் ஒருவரான சிவானந்தாவை முதல் நாள் நான் கொழும்பில் சந்தித்தேன் நான் சீமா படிப்பதற்காக கொழும்பு வந்திருந்தேன் வெள்ளவத்தையில் நான் சிவானந்தாவை சந்தித்தேன் சிவானந்தா எனக்கு கூறியிருந்தார் இன்றிரவு நான் சிலவேளை திருகோணமலை செல்வேன் என தெரிவித்திருந்தார்.




அப்போது சிவானந்தா மொரட்டுவ பல்கலைகழகத்தில் குவானிட்டி சேர்வேயரிங் படித்துக்கொண்டிருந்தார். சிவானந்தாவை நான் அன்றிரவு சந்தித்தவேளை அவர் திருகோணமலை செல்வதாக இல்லையா என்றமுடிவை எடுக்கவுள்ளதாக தெரிவித்தார்.

முதலாம் திகதி இரவு நான் கொழும்பிலிருந்து புறப்பட்டேன் இரண்டாம் திகதி காலையில் நான் அங்கு சிவானந்தாவை ஒரு இடத்தில் கண்டேன்.

சிவானந்தாவை போல ஏனையவர்களில் மிகவும் நெருங்கிய நண்பர் ரஜீகர்- ரஜீகரின் அப்பாவின் பெயர் மனோகரன் அவர் ஒரு வைத்தியர் அவர்தான் இன்றுவரைக்கும், அவர் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் ஈடுபட்டுள்ளார், இலங்கை மனித உரிமை திணைக்களத்திலும் செயற்பட்டுள்ளார்.

ரஜீகரை நான் திருகோணமலை கடற்கரை வீதியருகே சந்தித்தேன் அப்போது நேரம் 6.45.

அதேபோல மிகநீண்டகாலமாக என்னுடன் நல்ல நட்பிலிருந்த ஏனையவர்கள் சிவானந்தா ரஜீகர் லொகான், ஹேமசந்திரா, சஜித்.இவர்கள் தான் ஐவர் .

இந்த சம்பவம் 7.35 மணிக்கு இடம்பெற்றது.

7.15 -7.20 வரை நான் அந்த இடத்தில் நின்றிருந்தேன்

அன்றைய நாள் வழமை போல காணப்பட்டது. திருகோணமலையின் பிரதான கடற்கரையில் பெருமளவு மக்கள் காணப்பட்டனர். கோணேஸ்வரர் கோவிலை அண்டியுள்ளது.

அந்த கடற்கரை தொடங்குகின்ற இடத்தில் ஒரு காந்தி சிலை இருக்கின்றது அந்த சிலையை சுற்றி ஒரு கட்டு உள்ளது அந்த கட்டில் தான் இவர்கள் அனைவரும் அமர்ந்திருந்தார்கள்.

அந்த நேரத்தில் இந்த சம்பவம் எப்படி நடந்தது என்றால் நீலநிற முச்சக்கர வண்டியில் வந்த ஒருவர் கைக்குண்டு தாக்குதலை மேற்கொண்டார். மக்கள் அனைவரும் சிதறி ஓடிவிட்டார்கள். அவர்களிற்கு சிறிய சிறிய காயம் ஏற்பட்டது.

இந்த வெடிச்சத்தத்தை நான் கேட்டேன் அப்போது நான் மாமா வீட்டிலிருந்தேன் அருகில் இருந்தது.

ஏதோ நடந்துவிட்டது என்பது தெரிந்தது.

வைத்தியர் மனோகரன் மகனை (தொடர்புகொள்ள முயன்றுள்ளார், தொடர்புகொள்ள முடியவில்லை.

ரஜீகரை தொலைபேசியில் தொடர்புகொள்ள முயன்றார் முடியாமல்போகவே அவர் கடற்கரையை நோக்கி போய் இருக்கின்றார்

கடற்கரைக்கு உரிய மின்விளக்குகள் அனைத்தும் அனைக்கப்பட்டு மின்கம்பியில் கடற்கரை வீரர்களால் தடை போடப்பட்டுயாரும் போகக்கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என கத்தும் சத்தம் வைத்தியர் மனோகரனிற்கு கேட்டுக்கொண்டிருந்தது.

அதன் பின்னர் அவர் அங்கு செல்ல முயற்சித்தும் இராணுவத்தினர் அவரை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

விளக்குகள் அனைத்தையும் அணைக்கப்பட்டு வீதிகள் தடை செய்யப்பட்டிருந்தன.

அவரின் முயற்சி பலனளிக்கவில்லை.

8மணிக்கு பிற்பாடு வைத்தியசாலையிலிருந்து ஐந்து பேரின் உடல் பிரேத அறைக்கு கொண்டுவரப்பட்டதாக செய்தி திருகோணமலை முழுவதும் பரவியது.

திருகோணமலை மக்கள் யாரும் வெளியே வரவில்லை மிகுந்த பயத்துடன் காணப்பட்டனர்.

அவ்வேளை நான் பகுதி நேர ஊடகவியலாளராக பணியாற்றிக்கொண்டிருந்தேன்- எனக்கு இவ்வாறான பிரச்சினையொன்று இடம்பெற்றுள்ளதாக செய்திகள் கிடைத்தன.

யார் எவர் என்று தெரியாமல் நாங்கள் அன்றிரவை ஒரு பதட்டமான சூழ்நிலையில் கழித்துக்கொண்டிருந்தோம்.

எனக்கு மனம் கேட்கவில்லை என்ன நடந்தாலும் பரவாயில்லை என நினைத்து நான் 4 காலைமணியளவில் வைத்தியசாலை நோக்கி சென்றேன்.

வைத்தியசாலைக்கு வெளியே ஐவரின் உறவினர்கள் கதறி அழுதவாறு இருப்பதை நான்பார்த்தேன்.

பின்னர் பிணவறைக்கு சென்று நான் பார்த்தவேளை அவர்கள் அனைவரும் அவ்வளவு காலம் பழகியவர்கள் அவர்களிற்கு தலையிலே நெற்றியிலே சூட்டு காயம் - மிகவும் அருகிலிருந்து சுட்ட காயங்கள் காணப்பட்டன.

அதன்பின்னர் சடலங்களை உறவினர்களிடம் கையளிப்பதில் சிரமம் காணப்பட்டது.

இவர்கள் விடுதலைப்புலிகள் என கையெழுத்திட்டால்தான் உடல்களை கையளிப்போம் என பொலிஸார் இாணுவத்தினர் வேண்டுகோள் விடுத்தனர்.

நாங்கள் யாரும் விடுதலைப்புலிகளை நேரே பார்த்ததில்லை திருகோணமலை என்பது முழுமையாக அரசகட்டுப்பாட்டில் காணப்பட்ட பகுதி - இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. சமாதான பேச்சுவார்த்தையின் பின்னர்தான் நாங்கள் விடுதலைப்புலிகளை சந்தித்தோம்.

அதுவரை எங்களிற்கு விடுதலைப்புலிகள் எப்படி இருப்பார்கள் என்பது கூட தெரியாது.

அதேபோல தான் இந்த ஐந்துபேரும் அவர்களிற்கும் விடுதலைப் புலிகளிற்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது.

அவர்கள் மிகசாதாரணமாக இந்துகல்லூரியில் படித்து படிப்பை முடித்து பல்கலைகழகம் சென்றவர்களும் செல்ல காத்திருந் தவர்களும் ஏனைய படிப்பை தொடர்ந்தவர்களும்தான்.

நான் அங்கு படித்த காலத்தில் அரசியல் பேசியிருக்கின்றேன் மக்களுடைய பிரச்சினைகளை பேசியிருக்கின்றேன் அவர்கள் மிகவும் சாதாரணமானவர்கள் என்ற விடயத்தை நான் இந்த இடத்திலே கூற விரும்புகின்றேன்.

பின்னர் நாங்கள் அனைவரும் சேர்ந்து முழுமையான எதிர்ப்பை தெரிவித்திருந்தோம், எக்காரணம் கொண்டும் இப்படியான பொய்யான கையெழுத்துக்களை அவர்கள் விடுதலைப்புலிகள் என்ற கையெழுத்துக்களை

வைக்கமாட்டோம் என அனைவரும் அந்த இடத்தில் சண் டையிட்டோம்.

பின்னர் அரசாங்கத்திற்கு நன்கு தெரிந்துவிட்டது இது அவர்கள் செய்த மாபெரும் பிழையென்று அதன் காரணமாக அன்று திருகோணமலையிலிருந்து இராணுவத்தினர் முற்றுமுழுதாக அகற்றப்பட்டனர்.













அன்றிரவு இராணுவத்தினர் இருந்தனர் எனவே இவர்களிற்கு இறுதிக்கிரியை எங்கள் கல்லூரியின் மைதானத்தில் மாபெரும் விதத்தில் நடத்துவதற்காக ஒழுங்கு செய்திருந்தோம்.

திருகோணமலை முழுவதும் சென்று இவ்வாறான நிகழ்வு இடம்பெறப்போகின்றது என்பதை ஒலிபெருக்கியில் தெரிவிக் கவேண்டும். பயத்தில் யாரும் முன்வரவில்லை. நான்தான் ஒரு முச்சக்கர வண்டியில் சென்று திருகோணமலை முழுவதும் இந்த விடயத்தை கூறியிருந்தேன். இறுதி சடங்கிற்கு உரிய ஏற்பாடுகளையும் இந்துக்கல்லூரியின் மாணவதலைவர் என்ற வகையில் நான் செய்திருந்தேன்.

எனது மனதை பாதித்த வாழ்க்கையில் மறக்க முடியாத விடயம் இது.

இன்றுவரை இதற்கான நீதி கிடைக்கவில்லை என்பதுதான் மிகவும் வருத்தமான விடயம்.

இந்த சம்பவத்தின் பின்னர் கொல்லப்பட்டவர்களின் உற வினர்கள் வழக்கு தாக்கல் செய்தனர். நீதியை கோரி நின் றார்கள் அனைவருக்கும் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

அவர்கள் அனைவரும் தங்கள் வழக்குகளை கைவிட்டு வெளிநாடு செல்லவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

திருகோணமலையில் இருவர் உயிர் தப்பியிருந்தார்கள் மேலும் பார்த்தவர்களிற்கு தெரியும் இதனை செய்தது இராணுவம் தான் என்று.

எந்த காரணமும் இல்லாமல் இவர்களை கொலை செய் வார்களா என ஊடக நண்பர் ஒருவர் கேட்டார்.

தென்பகுதியில் சிங்கள மக்களிற்கு இருக்க கூடிய பாரிய பிரச் சினை வடக்கு பகுதியில் கொலைகளை ஏதோ ஒரு வகையில் நீங்கள் நியாயப்படுத்துவது.

இது மிகவும் தவறான விடயம்.

அல்லது இந்த கொலை தொடர்பில் பேசுபவர்கள் விடுதலைப் புலிகள் என சாயம் பூச முயல்கின்றனர். பல நியாயங்கள் எங்களிற்கு கிடைக்கவேண்டியுள்ளது அதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

நான் வடக்குகிழக்கில் பிறந்து வளர்ந்தவன் என்ற வகையில் எனது 15 வயது முதல் உணரக்கூடியதாகயிருந்தது. நான் கொழும்பு பல்கலைகழகத்திற்கு வந்தபோதும் கூட என்னை விடுதலைப்புலி என்றே அழைத்திருக்கின்றார்கள் விடுதலைப் புலியே என்றே கையாண்டார்கள் தமிழ் மக்கள் அனை வரையும் விடுதலைப்புலிகள் என்றே கையாண்டார்கள்.

இப்படித்தான் இராணுவத்தினர் தமிழ் மக்களை கையாண் டார்கள் என்பதை நீங்கள் பலர் வெளியில் கொண்டு செல்லவேண்டிய தருணமிது.

நீங்கள் ஒவ்வொருவரும் சொல்லவேண்டிய தருணம் இது வைத்தியர் மனோகரனின் படுகொலைக்கு தாக்குபிடிக்க முடியாமல் இறுதியில் இலங்கை அரசாங்கம் வெளிநாடுகளை திருப்திப்படுத்துவதற்காக 12 விசேட அதிரடிப்படையினரை கைதுசெய்தனர் - வெளிநாட்டுக்கு ஒரு நாடகமாடினார்கள்.

பின்னர் அந்த வழக்கை இழுத்து இழுத்து அவர்களை பிணையில் விடுதலை செய்த பின்னர் அவர்களிற்கு எதிராக போதிய சாட்சியமில்லை என தெரிவித்து விடுதலை செய்தனர்.

ஆனால் இன்னமும் 33 பேர் தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் வாடுகின்றனர்.

மிகமோசமான படுகொலைகளில் ஈடுபடடவர்கள் இந்த நாட் டிலே சுதந்திரமாக நடமாடுகின்றனர்.

இதில் சம்பந்தப்பட்ட முதலாவது பதிலளிக்கவேண்டியவர் மகிந்த ராஜபக்ச கோட்டபாய ராஜபக்ச இராணுவதளபதி, வசந்த கரணாகொட, கொட்டகதெனிய இவர்களே பொறுப்புக் கூறவேண்டியவர்கள்.

பொறுப்புக்கூறலை தவிர்த்து விட்டு தமிழ் மக்களுடன் எந்தவிதமான இணக்கப்பாட்டையும் தென்னிலங்கை அடையமுடியாது.












# கேணல் கிட்டு மரணத்தின் பின்பும் ஒரு வாழ்வு!

**சூரியப் புதல்வர்**





அப்பொழுது மன்னாரில் பரப்புக்கடந்தான் காட்டில் இருந்தும் பல தோழர்கள் விடுதலைக்காக உழைத்தார்கள். ஆற்றில் குளித்தும், காட்டுப் புதர்களிடை மறைந்து நின்று வெயிலில் காய்ந்தும், உணவுக்கு ஒன்றுமில்லாத போது குரங்குகளைச் சுட்டும், பாம்புகளைப் பிடித்தும், காட்டில் கிடைக்கும் காய்கனிகளைப் பறித்தும் சாப்பிட்டுப் பசி தீர்த்தார்கள். புதிய களை எப்போதும் அவர்களுக்குள் இருந்தது. இதயத்துக்குள் மெல்லியதாக ஒரு சோகத்தின் நெருடல் எப்போதும் இருந்தது. ஊருக்குள் வாழும் தம் இனிய உறவுகளின் எண்ண சில வேளை நிரம்பி வழியும் போது துடித்துப் போவார்கள். அம்மா நேற்றும் வழியில் தன் போல் ஒருவனைக் கண்டு “மகனே!” என்று அழைத்து ஏமாந்திருக்கிறாள் என்ற கதையைச் சொல்லி சிரிக்கவா செய்திருப்பார்கள். அழுதிருக்கிறார்கள்.

காட்டுப் புஸ்பங்கள் பனிநீரில் குளித்து சூரியன் முகம் பார்த்து மலரும். நிலவொளியில் பச்சைக் காடு பொத்திவைத்த ரகசியமாய் ஒளிரும். அங்கு ஆனந்தமயமான ஒரு பிழிவு குடிகொண்டிருக்கும்.

எங்கள் விடுதலை வீரர்கள் இருப்பதனால்தான் இன்னும் அதற்கு மெருகு ஏறியது.

நிதி, விக்டர், ஜரால்ட், பீரிஸ், அன்சார் நிறைய இப்போதும் உயிரோடு இருக்கின்ற வீரர்களும் இருந்தனர்.

உயிரோட்டமான வாழ்வியலின் சொந்தக்காரர்கள். அவர்களின் சிரிப்பை, அவர்களின் ஒவ்வொரு அர்த்தமுள்ள செயல்களை, அவர்கள் பாடிய பாடல்களை நினைத்தால் ஆழ வலி ஏற்படும்.

அந்த வாழ்க்கையைப் பதிந்தேன். அப்போது கிட்டண்ணா அதனை இன்னும், சிறப்பாக எழுதுமாறு பணித்தார். மீண்டும் எழுதினேன். எனக்குள்ளே இன்னும் ஆழமாய்ப் புதைந்தேன். கையெழுத்துப் பிரதியிலிருந்த அக் குறுநாவலுக்கு பெயர் சூட்டும்படி கிட்டண்ணாவைக் கேட்டேன்.

“என்ன பெயர் வைக்கலாம்?” என்று கேட்டுக்கொண்டே, “நீ இருட்டைக கிழித்தவர்களைப் பற்றித்தானே ஒழுதியிருக்கிறாய். எமக்கெல்லாம் ஒளியெனச் சுடர்ந்தவர்களைப் பற்றித்தானே சொல்லியிருக்கிறாய். விடுதலைக்காக எழுந்த வீரர்கள் எமது பூமியின் புதல்வர்கள் இல்லையா? அவர்களைச் “சூரியன்”கள் என்று சொல்லவருகிறேன், எனக்குச் சம்மதமா?” என்றார்.

“என்னண்ணா இதில் சந்தேகமிருக்கிறது. அவர்கள் அப்படிப்பட்டவர்கள்தான்” என்று பதிலளித்தேன்.

கதிராய் எழுந்து, மழையாய்ப் பொழிந்து, மக்கள் மனங்களை வென்று, இருள் எனும் அரக்கனை விரட்டி எங்கள் பூமி எழுந்திடச் செய்த வீரர்கள் சூரியப் புதல்வர்கள் தான்.

“சூரியப்புதல்வர்கள்” என்ற பெயரினையே வைப்போம் என்று கூறி முத்தார்.

பெயர் சூட்டுகின்ற அந்த உரையாடல் சாதாரணமானதாக இருக்கவில்லை. ஆழமானதாகவே இருந்தது.

அவ்வாறு எல்லாம் பேசிய எங்களின் அண்ணன் அவரே ஒரு சூரியனாகச் சுடர்ந்த கதையை, அவரது வாழ்கையை எனக்குள் மட்டும் சொல்லிக்கொள்வதற்கில்லை. எல்லோருடனும் பதிர்ந்து கொள்ள வேண்டியது கடமை.

ஒப்பில்லாத தலைவரின் தளபதியாக, தம்பியாக அவர் நின்றார். மண்ணின் ஒளிக்கீற்றென அவர் சுடர்ந்தார்.

## நெருப்பு மனிதன்

கிட்டண்ணா மிக அருமையான, அழகிய, ஆளுமைமிக்க ஒரு சிறந்த மனிதனாக வளர்ந்து வந்தார். அத்தகைய ஒருவரின் நேர்தரிசனம் சாதாரணமானதல்ல. அவர்களோடு வாழ்ந்தோம் என்பதே மிகப் பெருமையான விடயம் கூட. அவர் வழிப்பார்வையில் துயர்கள் கலைந்தன. தீயன கருகின. அன்பு மலர்ந்தது. எப்போதும் நெருப்பாக இருக்கின்ற ஓடையின் ரகசியமாய், அன்பெனும் ஆறாய் ஊற்றெடுத்துச் செல்லவல்ல வாழ்க்கை எப்படி வாய்த்தது?

தீயதை, கொடுமையை, போலியை, பொய்மையை, ஆணவத்தை சுட்டெரிக்க நெருப்பு வேண்டும். நெருப்பு உயிரின் சூடு. அது சக்தியின் வடிவம். அது கனல வேண்டும். அந்த நெருப்பில் நாமும் குளிக்கவேண்டும். குளித்தார், குளிப்பித்தார்.

கிட்டண்ணா நெருப்பாகவே நின்றார். அந்தக் கோலம் அழகியது. எங்கள் வீதியில் ஆக்கிரமிப்பாளன் எப்படித் திரியலாம்? எதிர்த்தார்.

எங்கள் வீதிகளை எப்படி அவர்கள் சுட்டெரிக்க முடியும்? கேட்டார்.

மக்கள் எல்லோரையும் கூட்டி நின்று போராடினார்.

நீதியும், சத்தியும், தியாகமும் அர்ப்பணிப்பும் கொண்டவராக அவர் நின்றார்.

## புலம்பெயர் மண்ணில்

புலம்பெயர் மண்ணில் வாழும் தமிழீழ மக்களையும் சந்திப்பதற்கென வந்தார். அவர்கள் முகம் தொலைந்தவர்களாகப் போவதை வெறுத்தார். அதற்காக கடுமையாக உழைத்தார். எமது மண்ணில்தான் சுதந்திரமான, பௌரவமான நல்வாழ்வு உண்டு என்பதை வலியுறுத்தினார்.

இன்றும் அவர் பேசிய வார்த்தைகள் சத்திய வார்த்தைகளாக இருப்பதை நினைக்கும் போது தாங்கமுடியாத துயர் வழியும்.





குளிர் காலத்தில் பனிப்பிடித்து வீதிகள் சறுக்கு நிலையில் இருக்கும். எனினும் ஒற்றைக் காலோடு நடந்து மக்களைச் சந்திப்பதற்காகச் சென்று கொண்டிருந்தார். அந்தவேளை எல்லாம் எந்த மனிதனையும் நெருடும் அக்காட்சி, தனக்காகவா? எங்களுக்காக... எங்களுக்காக என்பதை உணருகின்ற ஒவ்வொரு இதயத்திலும் வலி அதிகமாகும். புலம் பெயர் மண்ணில் வாழும் மக்கள் வீடு திரும்பி சுதந்திர நல்வாழ்வு



வாழவேண்டும் என்றும் துடித்தார். இரவும் பகலும் அடியாய் அடிக்கும் எம் இளைஞர்களையும் தியாகத்தின் வடிவினராகக் கண்டார். இயலாத தன் தாய்க்காக, தன் தந்தைக்காக, தன் இனிய குடும்பத்துக்காக உருகும் மெழுகுவர்த்திகளாகவே கண்டார்.

எல்லோர் மீதிலும் அக்கறையும் அன்பும் கொண்டிருந்தார். மீறி, பாதை விலகிப் போவோர்களை நெறிப்படுத்த வேண்டும் என விரும்பினார். அதற்காகவும் உழைத்தார். இந்த வகையில் மக்களைச் செழுமைப்படுத்த, மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்ட பல செயற்திட்டங்களுக்கு செயலுருவம் கொடுக்கும் முகமாக அவற்றை அவரே முன்னின்று நெறிப்படுத்தினார். இவற்றை பலர் அறிந்திருப்பார்கள். இந்த வகையில் எரிமலை, களத்தில், உலகத்தமிழர் போன்ற சஞ்சிகை, பத்திரிகைகளில் அவரின் ஆளுமை செறிந்திருந்தது.

## எரிமலை சஞ்சிகையும் அவரின் அக்கறை கொண்ட பார்வையும்

ஒவ்வொரு மாதமும் எரிமலை தொடர்பாக உரையாடினார். அதன் குறைநிறைகளைப் பேசினார். இன்னும் நன்றாக எப்படிச் செய்யலாம் எனக் கேட்பார். போனமாதம் எரிமலையின் வடிவமைப்பு திறமாக இருந்தது. தேங்காய் கட்டைகளை ஏற்றி வருகினற் ஒருவரை பின் அம்டைப்படமாகப் பிரசுரித்திருந்தோம். அவர் களைத்து விழுந்து வீடுபோகிறார். போனதும் மனைவி தேனீர் தயாரித்துக் கொடுத்துவிட்டு “ஊரிலை எல்லோரும் மாவீரர்வளைவு கட்டப் போயிற்றினம். உடல் களைத்தாலும் மனம் களைக்கவில்லை” என்று அவர் எழுந்து போகிறார். இவ்வாறு கீழே எழுதியிருந்தோம். அவருக்கு அது பிடித்திருந்தது. நன்று என்று கூறினார். சந்தோஷப்பட்டார். கிட்டண்ணா மிக நன்று என்று சொல்கிற வகையில் வெளிவந்த எரிமலை பலவற்றின் வடிவமைப்பு, உள்ளடக்கம் என்பன அவரைக் கவர்ந்திருந்தது. எரிமலையில் தொடர் கட்டுரைகள் வருவதை அவர் அறவே விரும்பவில்லை. இயந்திர வாழ்வியக்கத்தின் மத்தியில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு அவை வசதியீனத்தையும் அசெகரியத்தையும் கொடுத்து சலிப்பை ஏற்படுத்திவிடக்கூடும் எனக் கூறினார். அதேபோல நீண்ட பக்கங்களைக் கொண்ட கட்டுரைகளையும் தவிர்க்கும்படி கேட்டார். நறுக்குத் தெறித்தாற்போல் சுருக்கமாய், தெளிவாய் விடயங்கள் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

பின் அட்டையில் அண்ணர் சற்று துணிச்சலான காரியம் ஒன்றினை மேற்கொண்டுவரப் பணித்தார்.

அதாவது நவீன ஓவியங்களைப் பிரசுரிப்பது.

எமது மக்களிடம் ஓவியம் பற்றிய பார்வை இல்லாது போகிறது. ஓவியங்கள் அருமையானவை. அவை கண்களால் பார்த்து ரசித்து கருத்தேற்றும் சக்தி வாய்ந்தவை. அதனை எமது மக்களிடத்து பரிச்சயம் ஆக்கவேண்டும் என்று ஆதங்கப்பட்டார். அந்தவகையில்தான் நாம் ஓவியங்களைப் பிரசுரித்து வருகிறோம். இன்று தமிழில் பெயர் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஓவியர்கள் வளர்ந்திருக்கிறார்கள். வளர்ந்து வருகிறார்கள். அவரது நம்பிக்கை சாகவில்லை. கிட்டண்ணாவும் ஒரு ஓவியராக மளிர்ந்தார் என்பது வாசகர்கள் அறிந்ததே.

எரிமலை எப்போதும் புதிய மாற்றங்களோடு வருவதை விரும்பினார். அதன்படி அவர் நெறிப்படுத்தவும் தவறவில்லை. எரிமலை சஞ்சிகையினுடைய வேலைத் திட்டங்களை அவர் ஆழமாகவே வரையறுத்திருந்தார்.

புலம்பெயர் மண்ணின் அவலங்களை சுட்டெரிக்கின்ற தன்மையை எரிமலை கொண்டிருக்கவேண்டும் என விரும்பினார். தாய் மண்ணின் மீது புதிய காதல் கொடிவிட்டு இறங்கும் செயலினை அது ஆற்றவேண்டும் என ஆதங்கப்பட்டார். எங்கெங்கு காணினும் சக்தியின் பிரவாக ஊற்றை தோற்றுவிக்க வேண்டும் என்று துடித்தார்.

இரத்தமும் மண்ணும் ஒட்டிய சத்திய வாழ்வின் தரிசனமாக விளங்கும் இலக்கியத்தை எமது புலம்பெயர் மக்கள் நுகர வேண்டும் என ஆவல்கொண்டார். மண்ணில் இருந்து எழும் எழுத்துக்களை தரிசனமாக்குதல் என்ற அடிப்படையில் எரிமலையை வழிநடாத்தினார்.

போராட்ட வாழ்வியலின் துடிப்பை, மண்ணின் உயிர் மூச்சை, அதன் ஆத்மார்த்த உச்சரிப்பை வெளிக்கொணர்ந்து எம்மையும் எழவைக்கும் நோக்குக் கொண்ட அந்த இலக்கியத்தை அவர் உயிராய் நேசித்தார். அதைப் பரப்பும் வகை செய்தார். இலக்கியம் இயல்பாக, சமூக அநீதிகளுக்கும், அடக்குமுறைகளுக்கும் எதிரான போராட்டத்திற்கு இட்டுச் செல்லும் என்ற பெரும் உண்மையை உணர்ந்து அதன்படி எரிமலையை இயக்கினார். தேசத்தின் நினைவுகளை கிளர்ந்துகின்ற விடயங்களை அடிக்கடி பிரசுரிக்கவேண்டும். அதனால் தாயமண்ணின் மீது என்றும் வற்றாத அன்பின் ஊற்று எம் இளைஞர்களின் உள்ளத்தில் இருந்து பாயும் என எண்ணினார்.

முகம் தொலைந்த ஒரு சமூகத்தினராய் நாம் ஆவதை விரும்பாத ஒரு தந்தையாகவே அவர் இருந்தார் என்பது பலருக்குத் தெரியாமல் போகலாம்.



## அவர் ஒரு புதுக்கவிதைப் பிரியர்

புதுக்கவிதைகளிலே மிகுந்த ஆர்வமும் காதலும் கொண்டவர். போராட்டக் காலத்திலேயே அதிகமான புதுக்கவிதைகள் எழுந் தன. வீச்சும், ஆழுமும், கருத்துச் செறிவும் மிக்க இந்தக் கவி தைகளை அவர் விரும்பிப் படித்தார். தனிமையில் இருக்கும் போது உரத்து வாசிப்பார். அந்தக் கவிதையாகத் தான் வாழ வேண்டும் என்று கூறுவார். ஒரு கவிதையை யாத்த கவிஞனை விட அவர் மேலானவராக நின்றதை நாம் அங்கு காண்கின் றோம்.

## தேசியத் தலைவர் மீது அளவுகடந்த நேசம் கொண்டிருந்தார்

அட்டைப்படம் தொடர்பாக கதைத்துக் கொண்டிருக்கையிலே தலைவர் குறித்து பேசிக்கொண்டிருந்தார். தலைவரின் படத் தையும் பிரசுரிப்போம் எனச் சொன்னார்.

இந்தமுறையுமா? அதோடு அடிக்கடி தலைவரின் படத்தைப் போடுவதா? எனக் கேட்டபோது.

அவர் எங்கள் தேசியத் தலைவர். அத்தகைய தலைவரை நாங்கள் போற்றும் வண்ணமாகத்தான் இதைச் செய்கிறோம். இன்றைய இந்த விழிப்பு நிலைக்கு, சுதந்திர வேட்கைத் துடிப் பிற்கு வழிகோலிய, வழிகாட்டிக்கொண்டிருக்கின்ற காவியத் தலைவர் அவர்தான். நீ தலைவரைப் பற்றி ஒவ்வொரு எரி மலையிலும் கூடிய பட்சம் ஏதாவது விடயமாவது பிரசுரிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். அப்போது எனக்கு கிட்டண்ணா தலைவரைக் குறித்துப் பேசிய விடயம் ஆழமாகப் புரிந்திருக்கவில்லை. பின்னர் ஒரு தடவை அறிந்தேன். எங் களின் தேசியத் தலைமையை மாற்றுவது குறித்து மேற்குலக அரசியல் சக்திகள் சில அக்கறை கொண்டு வந்தன என்று. ஆனால் இந்த விடயத்தில், எதிர்பாராத வகையில் நெற்றிப் பரப்பின் முன் உள்ள இந்தியா சதிநடவடிக்கைகள் மூலம் இறங்க முயன்றதை பின்னால் அறிந்தோம்.

இவ்வாறு ஒவ்வொரு நடவடிக்கையையும் ஆழமாகவும் தீர்க்க தரிசனத்துடனும் அவர் ஆற்றினார் என்பதற்கு மேற்கூறிய சம்பவத்தினை ஒரு உதாரணமாகவே பார்க்கலாம். இவ்வாறு நிறையவே அவரது ஆளுமையின் தெறிப்பு அனைத்திலும் வியாபித்திருந்தது.

## கலைவண்ணம் கண்டார்

போராட்டத்தினை உண்மையாகச் சொல்லவேண்டும். அதன் வலிமையை, சத்தியத்தை வெளிக்கொணர்ந்து காட்ட வேண்டும் எந்த விதமான ஒழிப்பு மறைப்புகளுக்கும் அவர் இடம் கொடுக்கவில்லை. அத்தகைய திறந்த புத்தகமாக விளங்க அவர் உழைத்தார்.

எத்தனையோ தடவைகள் பேச்சுக்கள் வாங்கியிருக்கிறோம்; தண்டிக்கப்பட்டிருக்கிறோம். இத்தனைக்கும் அப்பால் உள்ள அந்த நேயத்தை, அவரது விரிந்த பார்வையை, சுயத்தை மீறி நின்று பார்க்கின்ற அந்தப் பார்வையை, ஞானவான்களுக் குரியதான அத்தகைய பண்பை அவரிடம் கண்டோம். நினைத்து பிரம்பைக் கையாண்ட அந்தப் பண்பு இன்று நெஞ் சைப் பிளக்கின்றது. எங்கும் விழுதுவிட்டு இறங்குகின்ற செயலுக்குரியவராக அவர் இருந்தார். அனைத்திலும் கலை மிளிரப்பண்ணினார். எழுத்தில், இயக்கத்தில், சொல்லில், செயலில் கலையின் உயிர்ப்பு, ஆழம் இருந்தது.

எரிமலை சஞ்சிகை பற்றிய உரையாடலாகவும், வேறு பல விடயங்களை அலசிக்கொண்டதாகவும் இருந்த ஒரு நாள் “மதங்கள் சரியான பாதையைக் காட்டவில்லை” என்ற சீற்றத் தின் தொனி இருந்தது. “மதங்களிற்கும் ஆன்மீகத்திற்கும் இடையே சரியான கோடுபிரிக்கவேண்டும்” என்பது பற்றி ஆதங் கப்பட்டார். நாடு சென்றதும் இந்தியாவிலுள்ள ஆன்மீகவாதி களையும் ஈழத்து ஆன்மீகவாதிகளையும் சந்திக்கவைத்து ஒரு கலந்துரையாடலை நிகழ்த்த எண்ணியிருந்தார். அதை தனது முதல் வேலையாக செய்வதாகக் கூறினார்.

ஆத்மார்த்தப் பண்புகளின் அடிப்படையில் மனித வாழ்வின் இயக்கத்தையும், அப்பண்பு மிக்க கலை இலக்கியங்களையும் அவர் நேசித்தார். இனி வருகின்ற இலக்கியப் போக்குக் குறித் தும் அது ஆற்றவேண்டிய பணிகள் குறித்தும் அவர் ஆழ மாகவே சிந்தித்தார்.

விழுந்தவனைத் தூக்கிவிடுகின்றவனை, ஏழைகளின் இன் னல்களைக்கண்டு இவற்றுக்காய் உழைப்பவனை, விடு தலைக்காய் தனை உருக்கி சுடரென நிற்பவர்களை, வழி இருட்டில் நின்று தவிப்பவனைக் காப்பவனை, மண்ணில் போர்க்கோலம் கொண்டு நிற்கும் அந்தக் காவிய நாயகர்களை இந்தப் புதிய யுகத்தின் அதி உயர் மானுடர்களாகக் கண்டார். விடுதலைப் போராட்டத்தில் புதைந்து கிடக்கின்ற ஆத்மார்த்தப் போக்கைச் சொல்லமுடியாமல் தவிக்கின்ற உளத்தின் தவிப் பாய், சதா தேடலாய் விரிந்த அவரது வாழ்வு நாம் அனைவரும் படிக்கவேண்டிய புதிய இலக்கியமாகும்.

மனோவலிமை மிகக், தீர்க்கதரிசனம் மிக்க, திடம்மிக்க எமது தேசியத்தின் உயிர்நாதமென என்றும் விளங்கும் அவரின் வார்த்தையிலேயே “மரணத்துக்குப் பின்னும் வாழ்வு உண்டு” என்போம். விடுதலையின் உச்ச பரிமாணங்களைத் தொட்ட அத்தகைய வாழ்வு சாகுமா? மாறாய் எங்கும், எம்முள்ளும் உயிர்க்கும்.

-சுபா — ஜனவரி 1995






AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install used &
new Walk in Cooler, Walk in Freezer
Kapil: 647.515.8643
kapil.afr@gmail.com


New
RANGANAS
JEWELRY
நியூ ரங்கனாஸ் நகைமாடம்
NEW RANGANAS JEWEL HOUSE
SINCE 1996
கடைா வரலாற்றில் எங்கும் கண்டிடாத சேவை
சிங்கப்பூர், டுபாய் நகைகள்
மிகவும் மலிவான விலையில்
Singapore, Dubai Jewellery
for Lowest Price
1% முதல் தங்க நகை அடைகு சேவை
Markham & Steeles
(Yellow Building)
திருமணத்துக்கான தாலிக்கொடி
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள கனடாவில்
நம்பிங்கை நாணயம் கைராசி
ஒரே இடம் நியூ ரங்கனாஸ்
Tel: 647.702.2159
647.947.2864
New RANGANAS JEWELLERY
647-947-2864
6055 Steeles Ave., E. Unit C102, Scarborough ON M1X 0A7
www.newranganasjewelhouse.com kprranga@hotmail.com


MORTGAGE
SUBRA MORTGAGES INC.
Residential/Commercial/Industrial
& Investment Properies
1st, 2nd & 3rd Mortgages
Purchase Refinance
Renewal Switches
Equity Line of Credit
Pre-Approvals
Self-Employed
Multi Rental Properties
New Immigrants
Mortgage In Any Situations
WE DEAL WITH ALL BANKS
LOAN
LINE OF CREDIT
MORTGAGE ALLIANCE
Independently Owned & Operated
Lic. No: M15001465, Brokerage No: 10530
Corp Off: 2005 Sheppard Ave E, Suite 200
North York, ON M2J 5B4
NESAN
416-908-5656
www.subra.com or www.nesan.ca
email:mortgage@subram.com
Office: 1585 Markham Rd, Unit 406, Scarborough ON M1B 2W1
Off: 416-660-5656/Fax: 647-351-3099/ Toll: 1-844-878-2721




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# முல்லை முள்ளியவளைப் படுகொலை 16.01.1985



முள்ளியவளைக் கிராமம் முல்லை, மருத நிலங்கள் சூழ்ந்த வளங்கொழிக்கும் பிரதேச மாகவும் பாரம்பரிய கலை, பண்பாடு என்பன சிறப்பாகவுள்ள பிரதேசமாகவும் வவுனியா — முல்லைத்தீவு நெடுஞ்சாலையில் அமைந்துள் ளது முல்லைத்தீவில் நிலைகொண்டிருந்த அரச படைகள் 16.01.1985 அன்று தைத்திரு நாளின் மறுதினமான கால்நடைகளுக்கு மக்கள் நன்றி செலுத்துகின்ற (மாட்டுப் பொங்கல்) தினத்தன்று அதிகாலை 4.00 மணியளவில் முள்ளியவளைக் கிராமத்தைச் சுற்றிவளைத்தன.

முள்ளியவளைப் பிரதேச மக்கள் வழமை போலவே அதிகாலைப் பொழுதில் தமது காலைக்கடன்களில் ஈடுபட்டிருந்தனர். அப் போது தான் தமது பிரதேசம் இராணுவத்தின் சுற்றிவளைப்பிற்கு உட்பட்டிருப்பதை உணர்ந் தார்கள். சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் முள்ளியவளைப் பிரதேசத் தில் ஊடுருவி அங்கிருந்து ஏழு மாதக் கர்ப் பிணிப் பெண் மூன்று பிள்ளைகளின் தாயார் ஆகிய இரண்டு பெண்கள் உட்பட பதினேழு பேரைக் கைது செய்ததுடன, இவர்களின் வாழ்விடங்கள் பலவற்றையும் தீக்கிரையாக் கிச் சென்றனர். சிறிது நேரத்தில் (அரை மணி) சரமாரியான சூட்டுச் சத்தங்கள் கேட்டதை உற வினர்கள் அவதானித்தனர். சிறிது நேரத்தில் (அரை மணி) சரமாரியான சூட்டுச் சத்தங்கள் கேட்டதை உறவினர்கள் அவதானித்தனர். பிடித்துச் செல்லப்பட்டவர்களின் உறாவினர் கள் தவிர்ந்த ஏனையோருக்கு பதினேழு பேரும் உயிரிழந்து விட்டார்கள் எனும் செய்தி பரவத்தொடங்கியது.

சிறிது நேரத்தில் இராணுவ வாகனங்கள் முல்லைத்தீவை நோக்கி நகர்ந்தன. உற வினர்கள் தமது உறவுகளை ஒவ்வொரு வாகனங்களாகப் பார்த்துக்கொண்டிருந் தனர். ஒரு வாகனத்தில் மட்டும் சைக்கிள்கள், பொருட்கள் ஏற்றப்பட்டு இராணுவத்தினர் சென்றதைக் கண்ட உறவினரால் அதற்குள் உயிரிழந்தவர்கள் உடலங்கள் இருப்பதை அறியமுடியாமற் போனது.

அன்றையபொழுது மறைந்து மறுநாளும் தமது உறவினர்கள் வீடு திரும்பாத நிலையில் ஊரிலிருந் சமாதான நீதவான் திரு.தியாக ராசா என்பவருடன் முல்லைத்தீவு இராணுவ முகாமிற்குச் சென்றிருந்த போது அங்கு இறந் தவர்களின் உடல்கள் வீசப்பட்டிருந்தன. அங் கே வீசப்பட்டிருந்த உடல்கள், உடைகள் அற்றும், கைகள், கால்கள், தலைகள் என்பன துண்டிக்கப்பட்டும், உடல்களில் காயங்கள் பல ஏற்படுத்திக் கொலை செய்யப்பட்டும் இருந் ததைக் காணக்கூடியதாகவிருந்தது. அவற் றுள் கொலை செய்யப்பட்டிருந்த கர்ப்பணிப் பெண்ணின் இரண்டு கால்களும் துண்டிக் கப்பட்ட நிலையில் குழந்தை சுமந்த வயிற்றுப் பகுதி எரிக்கப்பட்டு சிசு பரிதாபமான முறையில் கொலை செய்யப்பட்டுக் கிடந்ததையும் காண முடிந்தது.

மற்றைய பெண்ணின் உடல் சிகரட் சூட்டுக் காயங்களுடன், அடையாளம் தெரியாத வகை யில் துன்புறுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட் டிருந்ததையும் கண்ணுற்று அனைவரும் அதிர்ச்சிக்குள்ளானார்கள். உறவினர்கள் அவ் உடல்களை இராணுவத்தினரிடமிருந்து தமக்கு தருமாறு கேட்ட வேளை கொல்லப்பட் டவர்கள் பயங்கரவாதிகளென கையொப்பமிட் டுத் தந்தால் மட்டுமே உடல்களை தருவோம் எனக்கூறி இராணுவம் மிரட்டியபோது மக்கள் அதனை ஏற்க மறுத்தனர். இதனால் இராணு வத்தினர் உடல்களை மக்களிடம் ஒப்படைக் காது தாமே அவ் உடல்களுக்குத் தீயிட்டனர்.

***இச்சம்பவத்தில் தனது கணவரையிழந்த தவரத்தினம் திலகவதி சம்பவம் பற்றிக் கூறியதாவது:***

“அதிகாலை 4.30 மணியளவில் வீடுகளுக்கு வந்த இராணுவத்தினர் சில பெண்களோடு எனது கணவர், மகன் உட்பட பதினேழு பேரைக் கைது செய்ததுடன், சிலரது வீடுகளை எரித்து சொத்துக்களையும் சூறையாடினர். பின் கைது செய்தவர்களை அருகிலிருந்த காடு நோக்கிக் கொண்டு சென்றனர். பின் பல சூட் டுச் சத்தங்கள் கேட்டது. அதன்பின் இரா ணுவத்தினரின் வாகனங்கள் முல்லைத்தீவு நோக்கிச் சென்றன. அதில் கொல்லப்பட்டவர் களின் உடல்களையும் படுகாயமடைந்தவர் களின் உடல்களையும் அதன்மேல் சைக் கிள்கள் மற்றும் பொருட்களையும் ஏற்றி எடுத் துச் சென்றனர்.

அடுத்தநாள் சமாதான நீதவானுடன் முல் லைத்தீவு சென்று பார்த்தபோது எல்லோரும் படுகொலை செய்யப்பட்டு உடலில் ஒரு துணி இல்லாத சடலங்களாகக் கிடந்தது. அவர்களது உடலை எடுத்துச் செல்லக்கேட்டபோது அவர் களைக் கொட்டி (புலிகள்) என்று கையெழுத் திட்டாலே கொண்டு போகமுடியும் என்றனர். அவர்கள் எல்லோரும் பொதுமக்கள் தவறாக கையெழுத்திட்டு உடல்களை பெற விரும் பாததால், அங்கு விட்டுவிட்டு வந்தோம்.”

***16.01.1985 அன்று முள்ளியவளைப் படு கொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. நாகரெட்ணம் ஸ்ரீஸ்கந்தராசா
02. குமாரசாமி விஜயகுமாரி (வீட்டுப் பணி)
03. பிலிப்பையா அன்ரன்யோகராசா (வயது 17 — கடற்தொழில்)
04. தம்பையா விவேகானந்தம் (மாணவன்)
05. மார்க்கண்டு தெட்சணாமூர்த்தி (வயது 19 — கடற்தொழில்)
06. செல்லத்துரை நவரட்ணம் (விவசாயம்)
07. செல்லத்துரை குமாரசாமி (விவசாயம்)
08. சுப்பன் சின்னன்
09. சின்னன் அன்னலட்சுமி (வீட்டுப் பணி)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெற முடியவில்லை.

# வவுனியா காத்தார் சின்னக்குளப் படுகொலை 17.01.1989

வவுனியா மாவட்டத்தில் வவுனியா பிரதேசசெயலர் பிரிவில் எல் லைப்புறக் கிராமமாகக் காத்தார் சின்னக்குளம் அமைந்துள் ளது. இங்கு வாழுகின்ற மக்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர். இக்கிராமத்திற்கு அருகிற் குடியமர்த்தப்பட்ட சிங்கள மக்களால் நீண்ட காலமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் நாள்தேறும் பல இன்னல்களை அனு பவித்து வந்தார்கள்.

இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்த பின்னர் 17.01.1989 அன்று காலை 9:00 மணியளவில் இந்திய இராணுவத்தினர் கிராமத்துக்குள் திடீரென நுழைந்ததை உணராத மக்கள் தமது வழமையான செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அவ் இந்திய இராணுவத்தினர் மக்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் காலை உணவு எண்டுகொண்டிருந் தவர்கள், விவசாய அறுவடையில் ஈடுபட்டிருந்தவர்கள், கார்ப் பிணித்தாய், சிறுவர்கள் என இச்சம்பவத்தில் பதின்நான்கிற்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டார்கள். பலர் காயமடைந் தனர். பல வீடுகள் எரியூட்டப்பட்டன.

***17.01.1989 அன்று வவுனியா காத்தார் சின்னக்குளப் படு கொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. இராசைய மேகவர்ணன் (44)
02. இராமசாமி மருதமுத்து (-)
03. இராசலிங்கம் முத்தையா (75)
04. குப்பன் சின்னையா (75)
05. கறுப்பழகு சரஸ்வதி (32)
06. தர்மலிங்கம் சுந்தரலிங்கம் (14)
07. மாணிக்கம் செல்லம்மா (60)
08. மீனா சுப்பையா
09. அனுமந்து சுப்பிரமணியம்
10. அழகன் வீரையா
11. பொன்னுச்சாமி கறுப்பையா (36)
12. பெருமாள் மீனா (67)
13. பெருமாள் சின்னதம்பி (22)
14. சுப்பிரமணியம் (54)
15. சுப்பையா சின்னத்தம்பி (-)

காயமடைந்தவர்களின் விபரம்:

1. பஞ்சலிங்கம் நந்தினி
2. பஞசலிங்கம் தவமணி
3. சின்னமுத்து ஆறுமுகம்

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



காத்தார் சின்னக்குளப் படுகொலை 17 சனவரி 1989



# கிளிநொச்சி தொடருந்து நிலையப் படுகொலை – 25.01.1986




கிளிநொச்சி மாவட்டத்தின் மையமாக விளங்குவது கிளிநொச்சி நகரமாகும். இம்மாவட்ட மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், பொருட்களைக் கொள்வனவு செய்வதற் காகவும் நகருக்கு வருவதனால், கிளிநொச்சி நகரம் ஒரு முதன்மையான இடமாக இருந்தது. பாடசாலை, சந்தை, தொட ருந்து நிலையம், வைத்தியசாலை மற்றும் கச்சேரி என்பன நகரத்திலே அமைந்திருந்தன.

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள விடு தியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் நகருக்கு வரும் பொதுமக்களை விசாரித்தல், கைது செய்தல், அச்சுறுத்துதல் எனப் பல வழி களிலும் பொதுமக்களைத் துன்பப்படுத்திக் கொண்டிருந் தார்கள்.

1986 ஜனவரி இருபத்தைந்தாம் நாள் நண்பகல் 12.00 மணியளவில் கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து வந்த இராணுவத் தினர் கிளிநொச்சி தொடருந்து நிலையத்திற்கு அருகில் தெற்குப் புறமாக நின்ற பாலை மரங்களுள் ஒளிந்திருந் தார்கள்.

அதேநேரம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிகளை ஏற்றிவந்த தொடருந்து கிளிநொச்சி தொடருந்து நிலையத்தில் வந்து தரித்து நின்றது. பயணிகள் தொடருந்தில் ஏறிக்கொண்டிருந்த சமயம் மறைந்திருந்த படையினர் திடீரென பட பயணிகள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண் டனர். மக்கள் செய்வதறியாது அங்குமிங்கும் ஓடினார்கள். ஏனையோர் தொடருந்து நிலையத்திற்குள்ளும், தொடருந்தின் இரு புறமும் படுத்துக் கொண்டார்கள். இச் சம பவத்தில் நான்கு பெண்கள், இரண்டு சிறுவர்கள் உட்பட மொத்தம் பன்னிரண்டு பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந் தார்கள்.



இச்சம்பவத்தில் காயமடைந்ததுடன், மனைவி யையும் மகனையும் இழந்த சின்னையன் நல்லையா என்பவர் சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில்:

நான் விவசாயம் செய்து வருகின்றேன். எனக்கு நான்கு பிள்ளைகள். இராணுவத்தின் பிரச்சினையால் இடம்பெயர்ந்து அக்கராயன் எட்டாம் கட்டையில் ஒரு தேவாலயத்திற் போய் இருந்தோம். அதன்பின்னர் கிடைத்த ஒரு வீட்டில் வசித்து வந்தோம். எனது மனைவி ஆசிரியையாக இருந்ததால் கல்வித் திணைக்களத்திலிருந்து அநுராதபுரம் வேலைமாற்றல் கடிதம் வந்தது தைப்பொங்கல் முடிந்த பின்னர், 1986 ஆம் ஆண்டு தை மாதம் இருபத்தைந்தாம் திகதி திங்கட்கிழமை பேருந்து ஒன்றும் கிடைக்காததால், தொடருந்தில் செல்ல அங்கு வந் தோம்.

அதேநேரம் அங்கு பல இடங்களிலிருந்தும் வந்த மக்களும் நின்றிருந்தார்கள். சரியாக பகல் 12.00 மணியிருக்கும் வாங் குகளில் நாங்கள் இருக்கும்போது சந்தைக்குப் பக்கத்தில் வந்த ஒன்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் திருவேல் என்பவரை யும் அவரின் தகப்பனான கோழி வியாபாரியையும் சுட்டுவிட்டு தொடருந்துநிலைய வீதியால் வந்தார்கள். அந்த நேரம் நாங்கள் தொடருந்து நிலையத்தில் பயணிகள் ஏறும் இடத்தில் நின்றிருந்தோம். இராணுவத்தினர் அனைவரும் தோள்களில் துப்பாக்கியை கொழுவியிருந்தார்கள். நாங்கள் அனைவரும் பிரயாணம் செய்வதற்காக வந்தவர்கள் என்று பெரிதாகச் சொன் னோம். அப்போது அவர்கள் விரலைக் காட்டி உங்கள் எல்லோரையும் கொல்வோம் என்று சொல்லி முடிக்கு முன னரே எம்மை நோக்கிப் திடீரென சரமாரியாகச் சுட்டார்கள். அந்த இடம் ஒரே வெளியாக இருந்ததால், நாங்கள் எங்கே செல் வதென்று தெரியாமல் தொடருந்து நிலையத்தில் பொருட்கள் வைக்கும் அறைக்குள் ஓடி ஒளிந்துகொண்டோம். எல்லோரும் அதிலேயே காயப்பட்டார்கள்.

அதன் பின்னர் என்ன நடந்ததென்று எதுவும் தெரியாது. ஒரு மணித்தியாலத்தில் பின்னர் 1.30 மணியிருக்கும் சரியான தாகமாக இருந்தது. தண்ணீர் தண்ணீர் என்று கத்தினேன். அந்த நேரம் எனக்கு மேல் இரண்டு பேர் இறந்து கிடந்தார்கள். அதனால் கை மற்றும் கால்களை எடுக்க இயலாது இருந்தது. எல்லா இரத்தமும் ஓடியதால் காதுகள் எல்லாம் அடைத்திருந் தது. திரும்பவும் தண்ணீர் தண்ணீர் எனக் கத்தியபோது எனது ஐந்து வயது மகன் சுவர்க்கரையாக இருந்து எழும்பினார். அவருக்குக் கையில் துப்பாக்கிச் சன்னம் பட்டு கை சிதைந்து போயிருந்தது. மற்றைய பக்கம் திரும்பிப் பார்த்தபோது அந்த மூலைக்குள் என்னுடைய மூன்றாவது மகன் இறந்த ஒரு பெண்ணின் மேல் தொங்கிக்கொண்டிருந்தார். எனது மனைவி எனக்கு நேராக விழுந்து கிடந்தார். ஏனைய மக்கள் ஆங் காங்கே விழுந்து கிடந்தார்கள். ஆனால் எத்தனை பேர் இறந்தார்கள் என்று தெரியாது. இன்னொரு பக்கத்தில் சாந்தபுரத்தைச் சேர்ந்த ஒருவர் காலிற் காயம் பட்டுக் கத்திக் கொண்டிருந்தார். அப்போது என்னுடைய மகன்தான் பானைக் குள்ளிருந்த தண்ணீரை எடுத்துத் தர அதைக் குடித்தேன். அதன் பின்னர் அப்படியே மயங்கிவிட்டேன். அதற்குப் பின்னர் என்ன நடந்ததென்று தெரியாது.

பின்னர் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் முழித்துப் பார்த் தேன். அதன் பின்பு தான் என்னிடம் வந்த தாதிமார் நடந்தவற் றைச் சொல்லித்தான் எனது மனைவியும் பிள்ளையும் இறந்தது பற்றிக் கேள்விப்பட்டேன். இறந்த எனது மனைவி மற்றும் ஒரு மகனையும் என்னுடனேயே கொண்டு வந்திருந்தார்கள். ஆனால், இருவரும் இறந்ததால் உடனடியாக கிளிநொச்சிக்குக் கொண்டு போய் விட்டார்கள். எனது உடம்பெல்லாம் காயம்பட் டதனால் நான் தப்பமாட்டேன் எனப் பலரும் சொன்னார்கள். ஏதோ தெய்வாதீனமாக உயிர் தப்பிவிட்டேன். என்னால் அவர் களின் மரணச் சடங்கிற்கூடக் கலந்துகொள்ள முடியாத நிலை யில் அவர்களின் உடலை எனது மைத்துனர் தான் முறைப்படி அடக்கம் செய்தார்.

இயங்க முடியாத நிலையில் இருந்தேன். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு அனுப் பினார்கள். அங்கும் கையும் காலும் கழற்ற வேண்டும் என்றே சொன்னார்கள். பின்பு அதற்குச் சம்மதிக்காததால், நீண்ட நாட் களிற்குப் பின்பு உடல் தேறினேன். இப்பவும் என்னால் ஒரு தண்ணீர் வாளியைக் கூடத் தூக்கமுடியாத நிலையில் கஸ்ரப் படுகின்றேன். அந்தச் சம்பவத்திற்குப் பின்பு என் மகன்மார் தான் என்னைப் பார்க்கிறார்கள். முன்புபோல் வயல் வேலை கள் மற்றும் தோட்ட வேலைகளைச் செய்யவோ முடி யாத நிலையில் இருக்கிறேன். ஒவ்வொரு முறையும் வேதனைப படும் போதும் எமதினத்தின் விதியை நினைத்தே கவலைப் படுவேன்.

இச்சம்பவத்தில் காயமடைந்த சாந்தபுரத்தைச் சேர்ந்த அரு ணாச்சலம் ஆறுமுகம் சம்பவம் பற்றிக் கூறுகையில்:

என்னுடைய சொந்த ஊரான கண்டிக்குப் போய் 25.01.1986 ம் திகதி திரும்பி வந்து கிளிநொச்சி தொடருந்து நிலையத்தில் இறங்கி நின்றேன். அந்த நேரம் இராணுவத்தினர் தொடருந் தில் போவதற்கு நின்ற பொதுமக்கள் மீது திடீரெனச் சுட்டார்கள். தொடருந்து நிலையத்திற்குப் பின்புறமுள்ள கிணற்றடியில் நின்ற இரு இராணுவத்தினரே சுட்டார்கள். அப்போது எனக்கு சன்னங்கள் கையிலும் காலிலும் பட்டவுடன் நான் கீழே விழுந்து விட்டேன். எழும்ப முயற்சி செய்தபோது என்னால் முடியவில்லை. அப்போது தான் உணர்ந்தேன் எனது இரண்டு கையும் காலும் முறிந்து விட்டதென்று . கண்விழித்துப் பார்த்த போது வைத்தியசாலையிலிருப்பதைப் புரிந்துகொண்டேன். எனது காயத்திற்குச் சிகிச்சை செய்யப்பட்டிருந்தது. அடுத்த நாள் விடியற்காலை தான் பூரணமாக நினைவு திரும்பியது. அதன் பின் ஏன் இராணுவத்தினர் எம்மீது சுட்டார்கள் என வினாவிய போது துப்பாக்கிச் சூடு நடத்திய படைச் சிப்பாய்க்கு மூளை சுகமில்லை என்று அப்போது கிளிநொச்சியில் இராணுவத் தளபதியாக இருந்த கொப்பெக்கடுவ கூறியிருந்ததாகக் கூறினார் கள். ஆனால் இரண்டிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் எம்மீது தாக்குதல் நடத்திவிட்டு இவ்வாறு கூறியது தமிழர்களை அழிக்க வேண்டும் என்று அவர்கள் திட்டமிட்டுச் செயற்படுவதை உறுதிப்படுத்துகின்றது.

அரசாங்கம் இச்சம்பவம் தொடர்பாகப் பின்வருமாறு தெரி வித்தது.

“மனநோயாளியான படைச்சிப்பாய் சுட்டதில் கிளிநொச்சி தொட ருந்து நிலையத்தில் பொதுமக்கள் பலியானார்கள். இதற்காக அரசாங்கம் மன்னிப்புக் கோருகின்றது.” என்று கூறியதைத் தவிர அரசாங்கம் மேற்கொண்டு எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

25.01.1986 அன்று கிளிநொச்சி தொடருந்து நிலையப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:

01. சோமசேகரம் ஜெயசீலன் (வயது 16 – மாணவன்)
02. தவராசா சின்னமணி (வயது 40 – வீட்டுப்பணி)
03. தவராசா சுகந்தினி (வயது 11 – சிறுமி)
04. துரைசாமி கதிர்காமு (வயது 18 – நீர்ப்பாசனத் தொழிலாளி)
05. பாண்டியன் சிவகுரு (வயது 26 – வியாபாரம்)
06. குலசேகரம் தங்கம்மா (வயது 64)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# மன்னார் வட்டக்கண்டல் படுகொலை - 30.01.1985

மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கட்டுக்கரைக்குளக் கரையோரமாக விவசாய நிலப்பரப் புடன் வட்டக்கண்டல் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத் தவர்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டுள் ளனர்.



1985ஆம் ஆண்டு தை மாதம் முப்பதாம் திகதி வட்டக்கண்டல் கிராமத்தில் வசித்து வந்த அப்பாவித்தமிழ் மக்கள் மீது சிறீலங்கா இராணுவத்தின் தரைப்படையும், விமானப்படை யினரும் இணைந்து தாக்கினார்கள். 1985ஆம் ஆண்டு தை மாதம் முப்பதாம் திகதி அதிகாலை 5.00 மணியளவில் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இருநூறிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மதவாச்சி வீதி வழியாக வந்து கட்டுக் கரைக் குளக்கரை வழியாக வட்டக்கண்டல் கிராமத்தில் நிலைகொண்டனர்.

பின்னர் காலை 6.30 மணிக்கு துப்பாக்கி பிரயோகம் செய்த வண்ணம் வட்டக்கண்டல் கிராமத்திலுள்ள வீடுகளுக்குள் புகுந்து எதிர்ப்பட்டவர்களையெல்லாம் சுட்டும் கூரிய ஆயதங் களாலும் தாக்கினர். அவ்வேளையில் விமானப்படையின் உலங்குவானூர்த்தி மக்கள் குடியிருப்புக்களைத் தாக்கியது. பின்னர் வட்டக்கண்டல் அ.த.க. பாடசாலைக்குள் பல இராணுவத்தினர் புகுந்து அங்கு கல்விச்செயற்பாட்டில் ஈடுபட்




டுக்கொண்டிருந்த அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள், மாணவர் கள் உட்பட பதினெட்டுப் பேரைச் சுட்டுக்கொன்றனர்.

இச்சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் ஏனைய இராணுவத்தினர் வயல்களில் வேலை செய்து கொண்டிருந் தவர்களையும், வீதிகளில் நடமாடியவர்களையும், ஆண்கள் பெண்கள் என்ற பேதமின்றிச் சித்திரவதைக்கு உள்ளாக்கிச் சுட்டார்கள். பின்னர் வீடுகளினுள் புகுந்து தனித்திருந்த பெண் களைப் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தினார்கள் இரா ணுவத்தினர் ஆறு மணித்தியாலத்திற்கு மேலாக மக்கள் மீது நடாத்திய தாக்குதல் பிற்பகல் 2மணிவரை தொடர்ந்தது பின் சடலங்களில் சிலவற்றை பொதுமக்களைக் கொண்டு பொது மக்களின் வாகனங்களில் ஏற்றிக்கொண்டு தள்ளாடி இராணுவ முகாமிற்குச் சென்றனர். இராணுவம் கிராமத்தினை விட்டுச் சென்றதன் பின்னர் அயற்கிராமத்தவர்கள் இறந்தவர்களின் உடல்களை தேடியெடுத்து அடக்கம் செய்ததுடன், காயப்பட் டவர்களை வைத்தியசாலைக்கும் எடுத்துச்சென்றனர். இராணுவத்தின் திட்டமிட்ட பொதுமக்கள் மீதான தாக் குதலினால் ஐம்பத்திரண்டு பொதுமக்கள் உயிரிழந்தார்கள். நாற்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

***சம்பவத்தை நேரில் கண்ட மன்னார் வட்டக்கண்டலைச் சேர்நத் ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை தெரிவிக் கையில்:***

“1985ஆம் ஆண்டு தை மாதம் முப்பதாம் திகதியன்று காலை



மன்னார் வட்டக்கண்டல் படுகொலை - 30.01.1985

6.00 மணிதொடங்கி இராணுவத்தினரின் துப்பாக்கிச் சத்தம் கேட்டபடியிருந்தது. எங்களுடைய வீடு பிரதான வீதியிலிருந்து சற்றுத் தொலைவிலிருந்தது ஓடிவந்த மக்கள் என்ன காரண மெனத் தெரியாது இராணுவத்தினர் சுட்டுக்கொண்டு வருகிறார் கள் எனக் கூறியவாறு எங்கள் வீதி வழியாக ஓடினார்கள். பின்னர் அவர்களுடன் சேர்ந்து நாங்களும் ஓடினோம். இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் பாடசாலை அதிபரும் இரண்டு ஆசிரியர்கள் மற்றும் வீதியாற் சென்றுகொண்டிருந்த இளைஞர்கள் சிலரும் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்திற் பங்குகொண்ட இராணுவத்தினர் அனைவரும் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து யு – 14 என்று சொல்லப்படும் மன்னார் – மதவாச்சி வீதியால் கட்டுக்கரைக்கு வந்து பெரிய உடைப்பு அணைக்கட்டைக் கடந்து வண்டக்கண்டற் கிராமத் திற்கு வந்து இந்த அட்டூழியங்களைப் புரிந்தனர். இச்சம்பவத்தின் போது மொத்தமாக நாற்பத்தெட்டு அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள். இவர்கள் அனைவரினதும் மரணப் புத்தகங்களில் மரணத்திற்கான காரணம் இராணுவத்தால் சுடப்பட்டு இறப்பு என்றே பதியப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.”

***30.01.1985 அன்று வட்டக்கண்டல் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. பொன்னர் பொன்னப்பன - ராசா (வயது 30 – மீன்பிடி)
02. சந்தான் தொம்மைமியேஸ் (வயது 28 – விவசாயம்)
03. சவிரியான் அல்போன்ஸ்பறுலா (வயது 25 – விவசாயம்)
04. மடையப்பன் பாண்டியப்பன் (வயது 24 – கமம்)
05. முத்தண்ணதேவர் நடராசா (வயது 39)
06. முருகேசு தம்பிப்பிள்ளை (வயது 55)
07. இராசு செல்வராசா (வயது 30 – சாரதி)
08. கன்னிக்கவுண்டர் சுந்தரலிங்கம் (வயது 23 – விவசாயம்)
09. கறுப்பையா ஜெயரத்தினம் (வயது 25)
10. பிறஞ்சி கைத்தான் (வயது 27 – கமம்)
11. பிறஞ்சி சாமிநாதன (வயது 37 – கமம்)
12. திருமால் ராமச்சந்திரன் (வயது 26)
13. மனுவல் பீற்றர் சாள்ஸ் (வயது 45)
14. அலெக்சாண்டர் பர்ணாந்து (வயது 72)
15. அருணாசலம் சுந்தரமூர்த்தி (வயது 45)
16. செபமாலை பெனான்டோ (வயது 21 – வியாபாரம்)
17. செல்லையா இராமசாமி (வயது 35 – விவசாயம்)
18. வெள்ளைச்சாமி முத்துராசா (வயது 20 – விவசாயம்)
19. செல்லையா இராமசாமி (வயது 30)
20. வெங்கடாச்சலம் தேவராஜ் (வயது 34 – கமம்)
21. வெள்ளைச்சாமி முத்துராசா (வயது 35)
22. ஞானப்பிரகாசம் செபமாலை (வயது 22 – கமம்)
23. சந்தியோகு அந்தோனி (வயது 40 – கமம்)
24. சுப்பன் பழனி (வயது 42)
25. சுப்பிரமணியம் சண்முகநாதன் (வயது 33 – தொழிலாளி)
26. சின்னையா சேருவராஜன் (வயது 33 – தொழிலாளி)
27. சிறிகோரி ரெட்ணதுரை (வயது 32)
28. ராமன் தங்கராசா (வயது 56)
29. ராமசாமி அற்புதராசா (வயது 19)
30. இராமன் தங்கராசா (வயது 35 – விவசாயம்)
31. இராமச்சந்திரன் தெய்வேந்திரன் (வயது 18 – விவசாயம்)
32. இராமசாமி செல்வராசா (வயது 27 – விவசாயம்)
33. முத்துச்சாமி சத்தியசீலன் (வயது 42 – விவசாயம்)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# கொக்கட்டிச்சோலைப் படுகொலை 28.01.1987







இலங்கையின் கிழக்குப் பகுதியில் மட்டக் களப்பு மாவட்டம் அமைந்துள்ளது. இங்கு இயற்கைவளம் நிறைந்த பகுதியாக கொக்கட் டிச்சோலை அமைந்துள்ளது. அத்துடன் பெயர் பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ் வரர் ஆலயம் அமைந்துள்ளது. இங்குள்ள மக்களின் பிரதான தொழில் விவசாயம், மீன்பிடி அத்துடன், இறால் வளர்ப்பு என பனவாகும்.

இக்கிராமத்தின் மீது 28.01.1987 இல் சிறீலங்கா இராணுவத்தின் பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. கொண்ட வெட்டுவான், களுவாஞ்சிக்குடி, வெல்லா வெளி, கல்லடி ஆகிய இடங்களிலிருந்து கவசவாகனங்களுடன் முன்னேறிய இராணு வத்திற் குண்டுவீச்சு விமானங்களும் உலங் குவானூர்திகளும் மேலதிக உதவித் தாக் குதல்களை வழங்க கொக்கட்டிச்சோலை கிராமத்தினுள் நுழைந்த படையினர் அம்மக் களை மிகமோசமாகத் தாக்கிச் சித்திரவதை செய்ததுடன், படுகொலைகளையும் செய்தனர். இதில் குறிப்பாக அமெரிகக் நிதி உதவி, கண் காணிப்புடன் மகிழடித்தீவு இறால் பண்ணை இயங்கி வந்தது. இங்கு பெருமளவு ஏழை மக்கள் வேலை செய்து வந்தனர். அங்கு வேலை செய்த நூற்றுமுப்பத்தைந்து பொது மக்களை வெட்டியும் சுட்டும் படுகொலை செய்து இறால் பண்ணைக்குள்ளேயே போட்ட தால் இறால் பண்ணை மனித உடல்களை கொண்ட இரத்தப் பண்ணைகளாக காட் சியழித்தது. அத்துடன் கொக்கட்டிச்சோலை அரிசியாலையில் தஞ்சமடைந்திருந்த இருபத் துநான்கு பேரும் சுட்டுப் படுகொலை செய் யப்பட்டனர்.

இதில் 12 வயது நிரம்பிய 7 சிறுவர்களும் உள்ளடங்குவார்கள். இதில் குறிப்பாக பன் னிரண்டு வயது தொடக்கம் நாற்பது வயதிற் குட்பட்ட இருநூறிற்கு மேற்பட்டவர்கள் அடை யாளங் காணப்பட்டு சித்திரவதைகளின் பின் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்யப்பட் டனர். அத்துடன் பலர் காயப்படுத்தப்பட்டனர்.

மேலும் அம்பிலாந்துறை என்ற கிராமத்தில் நாற்பத்தைந்து பொதுமக்களை கொன்ற இராணுவத்தினர் அவர்களின் உடல்களை தீயிட்டுக் கொளுத்திய சம்பவம் உட்பட பல தொடர் படுகொலைச் சம்பவங்கள் 28,29,30 .01.1987 ஆகிய மூன்று நாட்களிற்குள்ளும் கொக்கட்டிச்சோலையிலும் அதன் அயல் கிராமங்களிலும் நடந்தேறியது.

***28.01.1987 அன்று கொக்கட்டிச்சோலைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. இ. உதயகுமார்
02. இ.கமலாதேவி
03. இ.கணேசமூர்த்தி
04. இ.தங்கம்மா
05. இ.தங்கவேல்
06. இ.மேகலிங்கம்
07. இ.வேலாப்பொடி
08. இ.சிவபாதம்
09. இராசரெத்தினம் தம்பிராசா
10. டி.ராஜினி
11. ந.இன்பராசா
12. ந.குழந்தைவேல்
13. ந.யோகேஸ்வரி
14. ந.கோபாலப்பிள்ளை
15. ந.சுப்பிரமணியம்
16. ந.சுவாஜினி
17. நா.விநோதகுமாரி
18. கு.ரூபவதனி
19. க.யுகாமினி
20. க.உலகநாதன்
21. க.நாகராசா
22. கு.நிசாந்தன்
23. கு.நறுமலாதேவி
24. க.நல்லம்மா
25. க.கந்தையா
26. அ.சத்தியானந்தம்
27. க.கந்தப்பெருமாள்
28. க.கஜேந்திரன்
29. க.கிருஸ்ணபிள்ளை
30. க.பாலச்சந்திரன்
31. க.புவனேஸ்வரி
32. க.பரமேஸ்வரி
33. க.மலர்விழி
34. க.கோபாலப்பிள்ளை
35. க.தெய்வநாயகம்
36. க.சோமசுந்தரம்
37. க.சௌந்தரராசா
38. க.சௌந்தரராஜன்
39. க.ஞானமுத்து
40. கு.சந்திரசேகரம்
41. கு.சுகந்தன்
42. க.சுப்பிரமணியம்
43. கு.சாந்தலிங்கம்
44. கு.சுதாகரன்
45. க.சுவேஜினி
46. க.சின்னத்தம்பி
47. கு.சிவமணி
48. கு.விகாந்தன்
49. க.ரவீந்திரன்
50. கதிர்காமத்தம்பி தயானந்தம்
51. கி.கந்தசாமி
52. கி.கந்தவனம்
53. கி.குமாரதாசன்
54. கி.பாலிப்பொடி
55. கி.பாலசுந்தரம்
56. கி.பவான்
57. கி.பொன்னுத்துரை
58. கி.றோமிகரன்
59. கி.சின்னமுத்து
60. கி.சிவஞானசிவம்
61. ப.கங்கா
62. பு.வேணுகரன்
63. ப.சண்முகம்
64. ப.சண்முகராசா
65. பா.நடராசா
66. பா.அம்பிகைபாலன்
67. பா.சுதாகரன்
68. த.இளங்கோ
69. த.இராசேந்திரன்
70. த.கனகசிங்கம்
71. த.முருகேசு
72. த.சந்திரசேகரம்
73. த.சசிகரன்
74. மு.நடேசன்
75. ம.பாலசுப்பிரமணியம்
76. மு.சத்தியசீலன்
77. ம.சிதம்பரநாதன்
78. மு.வசந்தராசா
79. மா.நல்லரத்தினம்
80. மா.கணபதிப்பிள்ளை
81. மா.பரஞ்சோதி
82. மா.மகேஸ்வரி
83. மா.ஜெயந்திமலர்
84. மா.செல்லத்தம்பி
85. அ.குணமணி
86. அ.பாக்கியராசா
87. அ.பிரேமசசிகலா
88. அ.பிரேமலதா
89. அ.தர்சனா
90. அ.கோமணதாஸ்
91. அ.ரேவதி
92. அ.சந்திரப்பிள்ளை
93. யோ.சீதேவிப்பிள்ளை
94. கே.நடராசா
95. கே.அமிர்தலிங்கம்
96. கே.சௌந்தரராசா
97. கோ.நாராயணப்பிள்ளை
98. கோ.அமிர்தராசா
99. செ.பவானி
100. சோ.இளந்திரையன்
101. சோ.கபிலன்
102. சோ.மாணிக்கப்பொடி
103. சோ.விஜயலிங்கம்
104. வே.இராசையா
105. வே.நல்லதம்பி
106. வே.அரியநாயகம்
107. வே.விசுமாப்பொடி
108. வே.வள்ளியம்மை
109. வேலாச்சி இராசையா
110. ஞ.நடேசம்
111. ஞா.குருகுலசிங்கம்
112. சு.இராஜேஸ்வரி
113. சு.குணதுங்கா
114. ச.தியாகராசா
115. ச.மகேஸ்வரன்
116. ச.சந்தோசம்
117. ச.சுதாகரன்
118. சு.சிவனேசராசா
119. சு.ஏகாம்பரம்
120. சி.புவனேஸ்வரி
121. சீ.புவனேசசிங்கம்
122. சி.தில்லைநாயகம்
123. சி.மயில்வாகனம்
124. சி.மயிலுப்பொடி
125. சி.மகேந்திரமூர்த்தி
126. சி.யோகநாதன்
127. சி.வேலாப்பொடி
128. சி.லவன்
129. வ.ஜீவரத்தினம்
130. வ.குழந்தைவேல்
131. வ.முத்துத்தம்பி
132. வ.யோகேஸ்வரன்
133. வ.விஜயசிங்கம்

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# புதுக்குடியிருப்புச் சந்தி படுகொலை – 30.01.1991




முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவிலிருந்து ஏறக்குறைய இருபது கி.மீ. தூரத்தில் புதுக்குடியிருப்புச் சந்தி அமைந்துள்ளது. இச்சந்தியில் ஒட்டுசுட்டான் முள்ளியவளை, முல்லைத்தீவு, பரந்தன் சந்திகள் சந்திக்கின்றன. புதுக்குடியிருப்பு ஒரு நகரப்பகுதியாகும்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் 1980களின் பின்னர் நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து இடம்பெயர்ந்த மக்கள் வாழ்ந்து வந்தார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் முல்லைநகர், மணலாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுகேணி, தென்னமரவடி போன்ற கிராமங்களிலிருந்து சிங்கள இராணுவ நடவடிக்கைகள் மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக இடம் பெயர்ந்தவர்கள். 1991 ஆம் ஆண்டில் ஆயிரத்து ஐந்நூறிற்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் புதுக்குடியிருப்புக்கு அருகிலுள்ள சுப்பிரமணிய வித்தியாசாலையில் இருந்தனர்.

1991.01.30 அன்று மாலை 5:30 மணியளவில் சிறீலங்கா சிங்கள விமானப்படையின் இரண்டு "மொம்பர்" குண்டுவீச்சு விமானங்கள் மூன்று தடவைகள் புதுக்குடியிருப்புச் சந்திப் பகுதியில் குண்டு வீசித்தாக்கின. குண்டுகளில் பெரும்பாலானவை சந்திப் பகுதியிலும், அதன் அண்டிய பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன.

குண்டுவீச்சினால் சந்தியெங்கும் ஒரே புகைமண்டலம். குண்டுவீச்சு நடந்துமுடிந்த அதேசமயம் அப்பகுதிக்கு விரைந்த, மக்களும், மனிதநேய அமைப்புக்களும் இணைந்து ஐம்பதிற்கும் மேற்பட்ட காயப்பட்ட பொதுமக்களை புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அனுப்பினர். இறந்து இருபது பேரினது உடல்கள் மீட்கப்பட்டன. எங்கும் ஒரே அழுகுரல்கள் இரவாகிக் கொண்டிருந்தமையால் இறந்தவர்களை உடனடியாக மீட்கமுடியவில்லை. காயமடைந்தவர்களில் ஆபத்தான நிலையிலிருந்தவர்கள் அன்றிரவே யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். அவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் மூவர் கொண்டு செல்லும் வழியிலேயே பரிதாபகரமாக உயிரிழ்ந்தார்கள்.

அடுத்தநாள் காலை மீண்டு மக்களும், மனிதநேய அமைப்புக்களும் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் தேடுதல் மேற்கொண்ட போது, மேலும் ஐந்து பேரினது இறந்த உடல்கள் மீட்கப்பட்டன. இந்த தாக்குதலால் மொத்தம் இருபத்தெட்டுப் பொதுமக்கள் உயிரிழந்தும், ஐம்பதிற்கும் மேலானோர் காயமடைந்தும் இருந்தனர். சிங்கள விமானப் படையினரது பொதுமக்கள் மீதான தாக்குதலால் புதுக்குடியிருப்பு நகப்பகுதி ஒரு மாதத்திற்கும் மேலாக சோகமயமாகவே காணப்பட்டது.

இறந்தவர்களில் இடம்பெயர்ந்து அடைக்கலம் தேவடிவந்த எட்டுப் பொதுமக்களும் அடங்குவர். இத்தாக்குதலில் உயிர்காக்கப் காப்பகழிக்குள் பாய்ந்த நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்ணின் பிள்ளை பிறந்ததிலிருந்து நரம்பு பாதிக்கப்பட்டவராக நடக்க முடியாதவராகத் தற்போதும் இருக்கின்றார்.

திருமலையிலிருந்து இடம்பெயர்ந்து வசித்து வந்த வி. சித்திரா தேவி தெரிவிக்கையில்...

"திருமலை சொந்த இடம். இடம்பெயர்வு காரணமாக புதக்குடியிருப்பு கிராமக்கோடு முகாமில் வசித்து வந்தோம். 1991.01. 30 அன்று மாலை 5:30 மணியளவில் வந்த விமானப்படை பொம்பர் விமானங்கள் பல குண்டுகளைப் போட்டன. இதன் போது நகர்ப்பகுதியும் சந்தையும் சில கடைகளும் நாசமாகின. எங்கும் ஒரே புகை மண்டலம். நான் எமது ஊரைச் சேர்ந்த அசோக் என்பரைத் தேடிச் சென்றபோது அவர் நடத்தி வந்த சைக்கிள் கடையில் அவர் பிணமாகக் கிடக்கக் கண்டேன். இதில் அதிகமானோர் இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்டவர்களாவார். இச்சம்பவத்தினால் அதிர்ச்சி அடைந்த எனது மகள் இன்று வரையும் வாய் பேசமுடியாதுள்ளார்."

30.01.1991 அன்று புதுக்குடியிருப்புச் சந்திப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:

1. இராசையா பத்மராசா (அரச ஊழியர் - 37)
2. கந்தையா ஜெகதீஸ்வரன் (மாணவர் - 14)
3. கந்தசாமி கவிதா (மாணவி - 14)
4. கதிர்காமச்சந்திரன் (கடற்றொழில் - 26)
5. கிருஸ்ணசாமி மகேந்திரராசா (மாணவர் - 20)
6. பாலசுப்பிரமணியம் கண்ணதாசன் (தனியார்தொழில் - 21)
7. பசுபதி அரிகரன் (மாணவர் - 14)
8. மயில்வாகனம் சிறீகந்தன் (தனியார்தொழில் -25)
9. முருகேசு சித்திரவேலு (கடற்றொழில் - 65)
10. ஜெயநாதன் சிவபாக்கியம் (தனியார்தொழில் - 36)
11. செல்லையா நாகமணி (60)
12. சுப்பிரமணியம் சிவானந்தம் (விவசாயம் - 59)
13. சின்னசாமி கந்தசாமி (தனியார்தொழில் - 46)
14. சின்னவன் கிருஸ்ணபிள்ளை (விவசாயம் -52)
15. சிவராஜசேகரன் கலைச்செல்வி (மாணவி – 19)
16. சிவராஜசேகரன் கலைச்செல்வன் (மாணவன் - 19)
17. வீரகசத்தி கிட்டினப்பிள்ளை (விவசாயம் - 70)
18. வீரசிங்கம் திலீப்குமார் (மாணவன் - 19)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# மானிப்பாய் படுகொலை 16.01.2006

யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதிக்கு வெள்ளை வானில் வந்த ஆயுதக்கும்பல் ஒன்றினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள் மூவர் சுட்டு கொல்லப்பட்டனர். மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு முன்பாக உள்ள செல்லமுத்து கனகசபாபதி வீதியில் அமைந்துள்ள நாகேந்திரம் போஜன் என்பவரின் இல்லத்தில் இந்தப் பயங்கரம் நிகழ்ந்திருக்கின்றது. நள்ளிரவு தாண்டி சற்று நேரத்தில் வெள்ளை வான் ஒன்றில் சிவில் உடையில் வந்த ஒன்பது பேர் அடங்கிய குழுஒன்று வீட்டில் உறக்கத்தில் இருந்தவர்களை குரல்கொடுத்து எழுப்பியிருக்கின்றது. தங்களை இராணுவத்தினர் என்று தெரிவித்து வீட்டை சோதனையிடப் போவதாகக் கூறிய அக்குழுவினர் வீட்டிலிருந்த அனைவரையும் வெளியே வருமாறு அழைத்தனர். பீதியடைந்த குடும்பத்தினர் வெளியே வந்தபோது அவர்கள் மீது சராமரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

தந்தை, தாய், மகன், மகள்கள் இருவர், மருமகன் என ஏழு பேர் அவ்வீட்டில் இருந்தனர். ஆயுதபாணிகள் முதலில் மகள் ஒருவரையும் பின்னர் தாய் மற்றும் ஏனையோரையும் நோக்கிச் சுட்டுள்ளனர். இந்த வெறியாட்டம் முடிந்த சிறிது நேரத்தில் இனந்தெரியாத அக்குழுவினர் வானில்ஏறித் தப்பிச்சென்றுவிட்டனர். உயிரிழந்த முத்தமகள் ரேணுகாவின் கணவரான தியாகேஸ்வரன் காயம் ஏதுமின்றி தப்பினர். சம்பவம் நடந்த வீட்டு உரிமையாளரான நாகேந்திரம் போஜன் இலங்கை காங்கேசன்துறை சாரண ஆணையாளராக நீண்ட காலம் வேசையாற்றியவர். அத்துடன் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி படைப்பிரிவு வடபிராந்திய ஆணையாளராகவும் பணியாற்றியவர் என்று குறிப்பிடத்தக்கதாகும்.

16.01.2006 அன்று இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர் விபரம்:

01. போஜன் அர்த்தநாரீஸ்வரி (51)
02. தியாகேஸ்வரன் ரேணுகா (30)
03. போஜன் சண்முகா (24)

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் விபரம்

01. நாகேந்திரம் போஜன் (55)
02. நாகேந்திரம் உல்லாசனன் (26)





# தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் கடத்திப் படுகொலை – 16.01.2006

2006 ஜனவரி 29 ஆம், 30ஆம் நாட்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 10 பணியாளர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பொலநறுவ மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தப் பிரதேசத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்டனர். அவ்வேளையில் அவர்கள் மட்டக்களப்பு அலுவலகத்திலிருந்து கிளிநொச்சியிலுள்ள அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்தார்கள். ஒரு சில நாட்களின் பின்னர் இரு பெண்கள் விடுதலை செய்யப்பட்டனர். இன்னொரு பெண்ணான எஸ் டோசினி என்பவரும் கடத்தல் காரர்களால் விடுதலை செய்யப்பட்டார். ஏனைய ஏழு பணியாளர் களும் இற்றைவரை காணாமலே போயுள்ளனர்.

இவர்களை விடுதலை செய்யுமாறு 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாள் சர்வதேச மன்னிப்புச் சபை ஓர் அவசர வேண்டுகோளை விடுவித்திருந்தது. இந்தப் படுகொலையானது இந்தியாவினுடைய நீதிபதி ஒருவர் தலைமை தாங்கிய சர்வதேச நிபுணத்துவம் வாய்ந்த விசாரணைக் குழுவின் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட வேண்டுமென சிறீலங்கா அரசாங்கத்தால் செய்யப்பட்ட பல படுகொலைச் சம்பவங்களில் இதுவும் ஒன்றாகும். இந்த நிபுணத்துவக் குழுவானது 2008 ஆம் ஆண்டு இந்த படுகொலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணைகளில் அதிருப்தி அடைந்தவர்களாக இக்குழுவை விட்டு முற்றாகவே வெளியேறியுள்ளனர்.

***தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் கடத்திக் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. காசிநாதர் கணேசலிங்கம் (53)
02. தங்கராசா கதிர்காமர் (43)
03. தனுஸ்கோடி பிறேமினி (25)
04. தர்மராஜ் வசந்தராஜன் (24)
05. சண்முகாநதன் கஜேந்திரன் (24)
06. கைலாசபிள்ளை ரவீந்திரன் (26)
07. அருள்நேசராசா சதீஸ்கரன் (23)




# மன்னார் மடுப் படுகொலை – 29.01.2008



மன்னார் மாவட்டத்தில் மடுப் பிரதேச செயலர் பிரிவில் மடு என்னும் கிரமாம் அமைந்துள்ளது இங்கு இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகவும் புனித யாத்திரையித் தளமாகவும் விளங்குகிற மடுத்தேவாலயம் அமைந்துள்ளது.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் இனமத வேறுபாடின்றி மக்கள் வந்து தரிசிக்கின்ற ஒரு புனித தலமாகவே மடுத்திருப்பதி விளங்குகிறது .இப்பகுதியில் வசிப்பவர்கள் அனைவருமே கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்கள் என்பதுடன் இவர்கள் மடுத்திருப்பதிக்கு தொண்டு செய்வதிலே பெரிதும் அக்கறை கொண்டவர்களாக, மிகவும் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர் .

இங்கு வசிக்கின்றவர்களில் அதிகமானோர், 1990 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடம் எனக் கருதி மடுத்திருப்பதியில் தஞ்சம் புகுந்தவர்கள்.

2007 நவம்பர் 13 ஆம் நாள் மடுத்தேவாலய வளாகம் மீது சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைவீச்சில் 05 வயதுச் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டதுடன் வயோதிபப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார். இதன் காரணமாக மக்கள், அச்சமடைந்து பெரியமடு கூராய் கள்ளியடி, இலுப்பக்கடவை, ஜெயபுரம் போன்ற இடங்களுக்கு சென்ற பின்னர் அங்கு 50குடும்பங்கள் அளவிலேயே வசித்துவந்தனர்.

தற்போது மன்னார் மாவட்டத்தில் தவீரமாக்கப்பட்டுள்ள யுத்தம் காரணமாக திருப்பதி வளாகத்திலுள்ள சிறார்கள். 5 கிலோ மிற்றர் தொலைவிலுள்ள தட்சணாமருதமடுவில் இயங்கிவந்த மன்சின்னப்பாண்டிவிரிச்சான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலே கல்விகற்று வந்தனர். இவர்கள் மடுவிலிருந்து புறப்படுகின்ற பயணிகள் பேருந்திலேயே சென்று வருவார்கள். இங்கு பாடாசலை மாணவர்களுக்கு தனியாக பொதுமக்களுக்குத் தனியாக என பேருந்து இல்லாமையால் அனைவரும் குறிப்பிட்ட நேரத்திற்கு வருகின்ற பேருந்திலேயே பயணிப்



பார்கள்.

அவ்வாறே 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29ம் நாளும் வழமை போல் பேரூந்தில் சென்ற சிறுவர்கள் பிற்பகல் பாடசாலை முடிந்ததும் இலுப்பைக் கடவையிலிருந்து மடு நோக்கிச் சென்று கொண்டிருந்த அதே பேரூந்தில் ஆனந்தமாக வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். பேரூந்து மடுவை அண்மித்ததும் சரியாக 2.30 மணியளவில் சிறீலங்கா ஆழ ஊடுருவும் அணியினரால் இப் பேரூந்தின் மீது கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 09 பாடசாலைச் சிறார்கள், 01 ஆசிரியர், 01 பாடசாலைச் சிற்றூழியர், 01 மருத்துவ உதவியாளர், 01 பேரூந்தின் ஓட்டுனர், 01 பேருந்தின் நடத்துனர், 01 மடுத்தேவாலய உழவூர்தி ஓட்டுனர் என 15 பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். 13 மாணவர்கள் உள்ளடங்கலாக 21 பேர் படுகாயமடைந்தனர்.

இத் தாக்குதல் நடைபெற்ற சில நிமிடங்களில் தள்ளாடி முகாமிலுள்ள இராணுவத்தினர் அப் பகுதி நோக்கி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனால் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே அப் பகுதி மக்கள் படுகாயமடைந்தவர்களை பள்ளமடு வைத்தியசாலையில் அனுமதித்தனர். பின் அங் கிருந்து உடனடியாக முழங்காவில் வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டனர். அங்கு மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தவர் களை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைத் தனர். இவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் மூன்று மாணவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர்.

பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டவர்களில் ஜெனிஸ்ரன் பீரிஸ் என்ற சிறுவன் பெப்ரவரி 03ம் நாள் உயிரிழந்தார். மேலும் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட பாடசாலை அதிபர் பெப்ரவரி 05ம் நாள் மரணமானார். இதனைத் தொடர்ந்து இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது.

29.01.2008 அன்று இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின்

பெயர் விபரம்

01. அன்ரன் கொண்ஸ்ரன்ரயின் புறுனோ கொண்ஸ்ரன்ரயின் – 13 (மாணவன்)
02. அன்ரன் கொண்ஸ்ரன்ரயின் பிறிற்ரோ கொண்ஸ்ரன்ரயின் – 15 (மாணவன்)
03. செல்வசிங்கம் யூட்கொஸ்ரன் – 15 (மாணவன்)
04. செல்வசிங்கம் யூட்கொலிண்டன் – 12 (மாணவன்)
05. ரஞ்சன் ராஜசூரியர் தர்சிக்கா சாமினி 15 மாணவி
06. சூசையப்பு சாம்சன் சொய்சா – 13 (மாணவன்)
07. சுாந்தன் பெனாட் றோஜ் – 16 (மாணவன்)
08. ஆந்தோனி பீரிஸ் ஜெனிஸ்ரன் பீரிஸ் – 12 (மாணவன்)
09. பிரான்சிஸ் சேவியர் ஆன்ஸ் பசிலியோ – 11 (மாணவன்)
10. பத்பராசா பேனாட் ஜெனார்த்தனன் – 12 (மாணவன்)
11. இமானுவேல் குணசிங்கம் அன்ரன் டெஸ்மன் – 16 (மாணவன்)

# மன்னார் மடுப் படுகொலை – 29.01.2008



12. ஞானப் பிரகாசம் ஜோன் மில்டன் - 16 (மாணவன்)
13. அன்ரனி சதீசன் - 11 (மாணவன்)
14. செபமாலை மேரியோசப்பின் - 31 (ஆசிரியர்)
15. ரஞ்சன் ராஜசூரியர் பிரான்சிஸ்கா மங்களேஸ்வரி - 37 (பாடசாலை ஊழியர்)
16. கிருபைராசா ஜெராட் ஞானகரன் - 29 (பேரூந்து ஓட்டுனர்)
17. சூசையப்பு லெம்பேட் ஸ்ரான்லி சுரேஸ் லெம்பேட் - 23 (நடத்துனர்)
18. க.சண்முகசுந்தரம் - 61 (ஓட்டுனர்)
19. திருமதி. லேம்பேட் - 51 (அதிபர்)
20. விமலநாதன் றீத்தம்மா - 33 (தாதி)

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களின் பெயர் விபரம்:

1. கிருசாந்த் - 08 (மாணவன்)
2. ற.பியுலின் - 09 (மாணவன்)
3. ஜெனோஸ்டிகா – 12 (மாணவி)
4. தர்சனா – 13 (மாணவி)
5. டியுலஸ் - 15 (மாணவன்)
6. ரஞ்சன் ராஜசூரியர் யுடக்சியா றூப்ளின் - 11 (மாணவி)
7. பிரான்சிஸ் சேவியர் மதுசாலினி – 16 (மாணவி)
8. அன்ரன் கொண்ஸ்ரன்ரயின் மேரிகொண்சீற்றா – 16 (மாணவி)
9. அனித்தா – 16 (மாணவி)
10. ற. தனுசிகா – 16 (மாணவி)
11. ரெசிற்றா – 38 (ஆசிரியர்)
12. துசிதா – 35 (ஆசிரியர்)
13. நிர்மலா றஞ்சினி – 36(ஆசிரியர்)
14. குணசீலி – 45 (ஆசிரியர்)
15. ஞானசூரியர் - 35 (அஞ்சல் ஊழியர்)
16. ஞானசூரியர் ஜசிந்தா – 34 (வீட்டுப்பணி)
17. அந்தோனி பீரிஸ் போனா பீரிஸ் - 22 (வீட்டுப்பணி)
18. பாக்கியநாதன் - 60
19. இன்னுமொருவர் (?)





# 38ஆம் ஆண்டு வீரவணக்கம்



கப்டன் பண்டிதர்
சின்னத்துரை ரவீந்திரன்
கம்பர்மலை, வல்வெட்டித்துறை
(25.12.1959-09.01.1985)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியான கப்டன் பண்டிதர் 1985ஆம் ஆண்டு தை 09ஆம் திகதி அச்சுவேலியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை சிங்களப்படைகள் முற்றுகையிட்ட போது இடம்பெற்ற மோதலில் வீரச்சாவடைந்தார்.

பண்டிதர் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினராக இருந்தார். அதுமாத்திரமன்றி தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆயுதப் பராமரிப்புக்கும் நிதிவளங்களுக்கும் பொறுப்பாளராக இருந்தார். வல்வெட்டித்துறைக்கு அருகேயுள்ள கம்பர்மலையை பிறப்பிடமாக கொண்டவர். அவர் வீரச்சாவடைகின்றபோது வயது இருபத்தி நான்கேயாகும்.

1977ஆம் ஆண்டு அமைப்பில் இணைந்து விடுதலைப் புலிகளின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். கடமையுணர்வு, கடும் உழைப்பு, இலட்சியப் பற்று ஆகிய சீரிய பண்புகள் நிறைந்த கப்டன் பண்டிதர் சகபோராளிகளின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமாக விளங்கினார். தமிழீழத் தேசியத் தலைவரின் நேசம்மிக்க தளபதியாக விளங்கிய பண்டிதர் விடுதலைப் புலிகள் அமைப்பின் நிர்வாகப் பொறுப்புக்களை சுமந்ததோடு மட்டுமல்லாது பல வெற்றிகரமான தாக்குதல்களிலும் கலந்துகொண்டார்.

தமிழீழ விடுதலைக்காய் இன்னுயிரை நீத்த இவ் வீரவேங்கையுடன் வீரச்சாவு அடைந்த எனைய போராளிகளின் நினைவோடு எம் பணி தொடர்வோம்.





14 ஆம் ஆண்டு
வீரவணக்கம்
முத்துக்குமார்
நினைவு நாள் 29.01.2009
கோகுலகிருஷ்ணன்
21.02.2009
சிவப்பிரகாசம்
21.02.2009
ரவி
02.02.2009
தமிழ்வேந்தன்
18.02.2009
இரவிச்சந்திரன்
07.02.2009
இராஜா
07.02.2009
அமரேசன்
08.02.2009
முருகதாஸ்
12.02.2009
அப்துல் ரவூப்
1995
சீனிவாசன்
01.03.2009
எழில்வளவன்
05.03.2009
ஆனந்த்
15.03.2009
இராசசேகர்
17.03.2009
பாலசுந்தரம்
22.03.2009
மாரிமுத்து
22.03.2009
சிவானந்தன்
17.04.2009
சுப்பிரமணி
23.04.2009
ஸ்டீபன் ஜெகதீசன்

# பிச்சை எடுக்கப் பேச்சுவார்த்தை?

07.01.2023

2023 ஆம் ஆண்டிலாவது உலக நாடுகளிடம் கையேந்தாத நிலைக்கு இலங்கை வளர்ச்சியடைய வேண்டும் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித் அவர்கள் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். ஆனால் நாடு இந்த ஆண்டு மட்டுமல்ல இனி வரும் ஆண்டுகளிலும் பிச்சை எடுக்காமல் தப்பிப்பிழைக்க முடியாது என்பதே மெய் நிலை ஆகும்.

பன்னாட்டு நாணய நிதியம் தரும் சிறிய உதவி கடனைத் தீர்க்கப் போதாது. அது 2.8 பில்லியன்கள் மட்டும்தான். ஆனால் நாட்டின் மொத்த கடன் தொகை 50 பில்லியன்களைவிட அதிகம். எனவே கடன்வாங்கி கடனை அடைக்க முடியாது. பன்னாட்டு நாணய நிதியத்திடம் இலங்கை அரசாங்கங்கள் கடன் வாங்குவது இதுதான் முதல் தடவையுமல்ல. இதற்கு முன் பதினாறு தடவைகள் கடன் வாங்கியிருக்கின்றன. அதில் ஏழு தடவைகள் பன்னாட்டு நாணய நிதியத்தோடு பொருந்திக்கொண்ட உடன்படிக்கைகளை இலங்கை அரசாங்கம் முழுமையாக அமல்படுத்தவில்லை. இந்நிலையில் கடனை வாங்கிக் கடனை அடைப்பது என்பதற்கும் அப்பால், கடனே இல்லாத ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. கடன் இல்லாத ஒரு நாட்டை அல்லது பிச்சை எடுக்காத ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவது என்றால் ஒரே ஒரு வழிதான் உண்டு. அது இனப்பிரச்சினை தீர்ப்பதுதான். இனப்பிரச்சினைதான் நாட்டை கடனாளியாக்கியது. கடன் வாங்கி, கடன் வாங்கி யுத்தம் செய்தார்கள். வாங்கிய கடனில் வெடிமருந்து வாங்கி கடனைக் கரியாக்கினார்கள், தமது சொந்த மக்களையே கொன்று குவித்தார்கள். இப்பொழுது மீள முடியாத கடனில் நாடு சிக்கிவிட்டது.



இவ்வாறாக கடன்வாங்கி அல்லது பிச்சையெடுத்து யுத்தம் செய்த ஒரு நாடு இப்பொழுது பிச்சை எடுப்பதற்காக சமாதானம் செய்கிறது என்பதுதான் நூதனமான ஒரு மாற்றம். ஆனால் பிச்சையெடுத்துச் செய்த யுத்தம் உண்மையானது. பிச்சை எடுப்பதற்காக செய்யும் சமாதானம் உண்மையானதா என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் உண்டு.

உண்மையாகவோ அல்லது பொய்யாகவோ பேச்சுவார்த்தைகள் நடக்கப்போகின்றன. கடந்த 75 ஆண்டுகளாக இவ்வாறு பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. இப்பேச்சுவார்த்தைகளில் சிங்களத்தலைவர்கள் மாறியிருக்கிறார்கள். தமிழ்த்தலைவர்களும் மாறியிக்கிறார்கள். இதில் ஒப்பீட்டளவில் நீண்ட காலம் மாறாமல் இருந்த ஒரே தலைவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்தான். அவர் ஐந்து சிங்களத் தலைவர்களோடு பேசியிருக்கிறார். இப்பொழுது கடந்த 13 ஆண்டுகளாக சம்பந்தர் பேசி வருகிறார்.

கடந்த 75 ஆண்டுகால அனுபவத்தின்படி பேசுவதற்கு புதிதாக விடயங்கள் கிடையாது. ஒரே ஒரு விடயத்தில் துணிச்சலான முடிவை எடுத்தால் சரி. நாட்டின் ஒற்றையாட்சிக் கட்டமைப்பை உடைத்து ஒரு கூட்டாட்சிக் கட்டமைப்பை உருவாக்கத் தயாராக இருந்தால் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறும். ஆனால் இலங்கைத்தீவின் துயரம் எதுவென்றால், சிங்களமக்கள் மத்தியில் அதிகம் பிழையாக விளங்கிக் கொள்ளப்பட்ட ஒரு வார்த்தை சமஸ்ரி என்பதுதான். உலகின் மிகச்செழிப்பான ஜனநாயக நாடுகளில் நாட்டை ஒரு தேசமாக கட்டியெழுப்பும் சமஸ்ரிக் கட்டமைப்பானது இலங்கைத்தீவில் நாட்டை பிரிக்கக் கூடியது என்று கருதப்படுகிறது.

கடந்த 75 ஆண்டு காலப்பகுதிக்குள் நிகழ்ந்த பிரதான தீர்வு முயற்சிகளை பின்வருமாறு தொகுக்கலாம். 1957-இல் பிராந்திய சபைகள், 1965 இல் மாவட்ட சபைகள். அதன்பின் 1980 இல் தென்னகோன் அறிக்கை, 1981ல் மாவட்ட அபிவிருத்தி சபைகள், 1983இல் மாவட்ட மட்ட அதிகார பரவலாக்கம், 1986 இல் இரண்டு தமிழ் மாகாணங்கள் என்ற யோசனை,1987இல் இந்திய-இலங்கை உடன்படிக்கை, 1992இல் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கை, 1995இல் சந்திரிகாவின் பிராந்தியங்களின் ஒன்றியம் அதன்பின், 2002இல் ஒஸ்லோ பிரகடனம், 2003இல் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை, 2005இல் சுனாமிக்கு பின்னரான பொதுக் கட்டமைப்பு, 2009க்குப் பின் மகிந்தவின் 13பிளஸ், 2015இலிருந்து 2018 வரையிலுமான ரணில்-சம்பந்தன் கூட்டின் எக்கிய ராஜ்ய.




இதில் 1965இல் திருமதி சிறிமாவோவின் அணிக்குள்ளிருந்த என்.எம். பெரேரா சமஸ்ரிப் பண்புடைய ஒரு தீர்வு யோசனையை முன்வைக்கத் தயாராகக் காணப்பட்டார் என்றும் ஆனால் தமிழ்த் தரப்பு அதனை சமயோசிதமாகக் கையாளவில்லை என்றும் ஒரு விமர்சனம் உண்டு. அம்முயற்சி கருவிலேயே கைவிடப்பட்டது.

மேற்கண்ட தீர்வு முயற்சிகளையும் தீர்வுத் திட்டங்களையும் யார் குழப்பினார்கள் ஏன் குழப்பினார்கள்? என்பவற்றைத் தொகுத்துப் பார்த்தால் தெளிவாகத் தெரிவது என்ன?

ஆயுதப் போராட்டத்திற்கு முன்னும் பின்னுமான மிதவாத அரசியலில் நிகழ்ந்த பெரும்பாலான பேச்சுவார்த்தைகளில் சமஸ்ரிப் பண்புடைய அல்லது ஒற்றையாட்சி கட்டமைப்புக்கு வெளியே வருவது போன்ற தோற்றத்தைக் கொண்டிருக்கும் தீர்வு யோசனைகளை ஒன்றில் சிங்களத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை, அல்லது கருவிலேயே கைவிட்டிருக்கிறார்கள், அல்லது முதலில் ஏற்றுக்கொண்டு பின்னர் குழப்பியிருக்கிறார்கள். அதேசமயம் தமிழ்த் தலைவர்கள் ஒற்றையாட்சிப் பண்புடைய தீர்வு முன்மொழிவுகளை பெரும்பாலும் நிராகரித்திருக்கிறார்கள். அல்லது முதலில் நம்பிக்கை வைத்து பின்னர் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள்.

ஆயுதப்போராட்ட காலகட்டத்தில்தான் ஒப்பீட்டளவில் உயர்வான தீர்வு யோசனைகள் முன்வைக்கப்பட்டன. அதற்குக் காரணம் நாட்டின் அரசியல் வலுச் சமநிலையை மாற்றக்கூடிய சக்தி ஆயுதப் போராட்டத்திற்கு இருந்தது. 2009க்குப்பின் ஒரு சிங்கள தொலைக்காட்சி திருமதி.சந்திரிக்காவை மேற்கண்ட போது “நீங்கள் முன்பு வழங்க தயாராக இருந்த பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற தீர்வு இப்பொழுது பொருத்தமானதா?” என்ற தொனிப்பட ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு அவர் “இல்லை. இப்பொழுது அதற்குத் தேவை இல்லை. ஏனென்றால் இப்பொழுது ஆயுதப்போராட்டம் இல்லை.” என்ற பொருள்பட பதில் கூறியுள்ளார். அதுதான் உண்மை. நாட்டின் அரசியல்



வலுச் சமநிலையை மாற்றக்கூடிய சக்தி இப்பொழுது தமிழ் அரசியலுக்கு இல்லை. அதனால்தான், பிரிக்கப்பட முடியாத, பிளவுபடாத நாட்டுக்குள் சமஸ்ரி என்று கூற வேண்டியிருக்கிறது. ஆனால் சமஸ்ரிக்கு சிங்களத் தலைவர்கள் தயாரா?

2012ஆம் ஆண்டு எஸ்.ஜே.வி செல்வநாயகத்தின் பேத்தி ஒரு நேர்காணலுக்காக சர்வோதயம் அமைப்பின் தலைவர் ஆரியரட்ணாவை சந்தித்தபோது அவர் சமஸ்ரி பற்றிக் கூறியதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். தன்னுடைய சிறுவயதில் 1950கள் 60களிலேயே சமஸ்ரி என்பது ஒரு பிரிவினைக் கோரிக்கையாக வியாக்கியானம் செய்யப்பட்டது என்று ஆரியரட்ணா கூறியிருக்கிறார். ஆனால் ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்கு பின்னரும் நிலைமை அப்படித்தான் உள்ளது.

எனவே ஒரு சமஸ்ரித் தீர்வை நோக்கி சிங்கள மக்களின் கூட்டு உளவியலை தயார்படுத்தும் பொறுப்பை ரணில் ஏற்றுக் கொள்வாரா? அதற்குத் தேவையான அரசியல் திடசித்தம் அவரிடம் உண்டா? அதற்குத் தேவையான மக்கள் ஆணை அவருக்குண்டா?

அவர் தனது அரசியல் எதிரிகளின் பலத்தில் தங்கியிருக்கிறார். அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் அவர் ராஜபக்சகளின் வேட்பாளராக களமிறங்கக்கூடிய வாய்ப்புகள் தெரிகின்றன. எனவே ராஜபக்சக்களை மீறி ஒரு தீர்வை அவர் தர மாட்டார். ராஜபக்சக்கள் 13பிளஸ்தான் தங்களால் தரக்கூடிய தீர்வு என்று ஏற்கனவே சொல்லிவிட்டார்கள். சஜித் பிரேமதாசவும் 13ஐ முழுமையாக அமல்படுத்துவதே தமது தீர்வு என்று கூறுகிறார். இப்படிப்பார்த்தால் 13ஆவது திருத்தத்தைத் தாண்டிச் செல்வதற்கு மகிந்தவும் தயாரில்லை சஜித்தும் தயாரில்லை. பதின்மூன்றாவது திருத்தத்தை தொடர்ந்து வலியுறுத்துவதன்மூலம் சிங்களத் தலைவர்கள் இந்தியாவையும் தமது நிகழ்ச்சிநிரலின் பங்காளிகளாக்கலாமா என்று யோசிக்கக்கூடும்.

கடந்த சில வாரங்களாக ரணில் விக்கிரமசிங்க இந்தியாவை அதிகம் நெருங்கி செல்கிறார். அவர் பதவியேற்ற காலத்தில் இருந்ததைவிடவும் இப்பொழுது அவருக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு ஒப்பீட்டளவில் சுமூகமாகி வருகிறது. பலாலி விமான நிலையத்தை மறுபடியும் திறந்துவிட்டார், காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்கும் இடையே ஒரு பயணிகள் போக்குவரத்து சேவையும் விரைவில் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அடுத்த சுதந்திர தின விழாக் கொண்டாட்டங்களில் ஒரு பகுதி யாழ்ப்பாணத்திலும் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதில் இந்திய நிதி உதவியோடு கட்டப்பட்ட யாழ் கலாச்சார மையத்தை ஒரு இந்திய தலைவர் வந்து திறந்து வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதலில் இந்தியப் பிரதமர் மோடி வருவார் என்று கூறப்பட்டது. பின்னர் இந்திய ஜனாதிபதி வருவார் என்று கூறப்பட்டது. இப்பொழுது வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. யார் வந்தாலும் அது ஒரு கோலாகலமான விழாவாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். அவ்வாறு கலாச்சார மையத்தை கையளிக்கும் விழாவை இலங்கையின் சுதந்திரதின விழாவின் ஒரு பகுதியாக ஒழுங்கமைப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கான இந்தியாவின் உதவிகள் எவையும் இலங்கைத்தீவின் சுதந்திரத்துக்கு வெளியே இல்லை என்ற செய்தி இந்தியாவுக்கும் தரப்படும், தமிழ் மக்களுக்கும் தரப்படும். இவ்வாறாக, கடந்த சில வாரங்களாக ரணில் விக்கிரமசிங்க இந்தியாவை நோக்கி முன்னெடுக்கும் நகர்வுகளைத் தொகுத்துப்பார்த்தால், அவர் பேச்சுவார்த்தைகளிலும் இந்தியாவின் ஒத்துழைப்பை மறைமுகமாகப் பெற முயற்சிக்கலாம் என்று தெரிகிறது.

13-வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த போகிறோம் என்று அரசாங்கம் கூறுமாக இருந்தால் அது இந்தியாவுக்கும் விருப்பமாகத்தான் இருக்கும். கடந்த வெள்ளிக்கிழமை ஆறாம் தேதி தமிழ்நாட்டில் ஒரு கருத்தரங்கு இடம்பெற்றது அதன் தலைப்பு 13வது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு தீர்வை ஈழத்தமிழர்களுக்கு வழங்க வேண்டும் என்று இந்திய ஒன்றிய அரசைக் கோரும் நோக்கிலானது. அதில் சுமந்திரனும் பங்குபற்றினார். எனவே நடக்கவிருக்கும் பேச்சுவார்த்தைகள் 13-வது திருத்தத்தை தாண்டாமல் இருப்பதற்கு ரணில் இந்தியாவிடமிருந்து உதவியை எதிர்பார்க்கக்கூடும். அவரைப் பொறுத்தவரை ஒருபுறம் பிச்சையெடுப்பதற்காகச் சமாதானம் செய்ய வேண்டியிருக்கிறது. இன்னொருபுறம் அவருடைய வயோதிப காலத்தில் அவருக்கு கிடைத்திருக்கும் சிம்மாசனத்தை சமாதானத்துக்காகத் தியாகம் செய்யவும் முடியாது. பிச்சையா? சமாதானமா? அரச போகமா?

நன்றி: நிலாந்தன்


JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Free Estimate!
Call today
$50 OFF
When you order more than $1000
Broken Glass...? (Door & window)
We will fix it within 24 hour.
Let us help with...
● Replacement (Door & Windows)
● Custom Door & Windows
● Front Door & Patio Door
● Garden Door
● Door & Windows Re-Caulking (Important)
● Painting Doors & Windows
● Basement Separate Entrance Door
● Home Painting
● Spotlights installation
● California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com

வள்ளம் புறப்பட்டது. இனம் புரியாத இன்பக்கிளர்ச்சி மேலோங்க வள்ளத்தினுள் இருந்த பெரியவர்கள் மௌனசாமிகள் ஆனார்கள்.

எல்லோர் மனதிலும் எங்கட இடத்துக்கு எங்கட வீட்டுக்குப் போறம் என்ற எணர்வுக் கொந்தளிப்பு. அந்த இன்பத்தை முழுமையாக அனுபவிப்பதற்காக மௌனமாக இருந்தார்கள். குழந்தைகளுக்கு மட்டும் ஒரே கொண்டாட்டம்.

வள்ளம் பெகுதூரம் சென்றுவிட்டது. சிறிது சிறிதாக இந்திய நிலப்பரப்பு மறைந்து எங்கும் கடல் மயமாகக் காட்சியளித்தது.

வள்ளத்தில் இருந்தவர்கள் அனைவரும் 1990ஆம் ஆண்டு இலங்கையில் இருந்து வள்ளங்கள் மூலம் இந்தியா வந்தவர்கள். இவ்வளவு காலமாக அவர்கள் அகதிமுகாமில் பட்ட அவலம் சொல்லும் தரமன்று.

நடராசா ஒரு விவசாயி, கீரை, வெங்காயம், மரவெள்ளி என்று காலத்திற் கேற்ப பயிர்களைச் செய்து, அந்த ஊரில் விரல்விட்டு எண்ணக்கூடிய பெரியவர்களுள் ஒருவனாய் வாழ்ந்தவன்.

ஒருநாள்,

"ஆமிக்காறங்கள் ஒவ்வொரு இடமா பிடிச்சுக்கொண்டு வாறாங்களாம். அதுக்குள்ள காடையரும் வாறாங்களாம். பிஞ்சுக் குழந்தையளக்கூட வெட்டுறாங்களாம்." என்றபடி பீதியுற்ற மக்களுள் தனது இளம்மனைவி பார்வதியுடனும், விக்னேஸ், கதிர் என்று முறையே ஐந்து, மூன்று வயதுடைய மகன்களுடனும் இந்தியா சென்றவன்.

தேனுகா அகதி முகாமிலேயே பிறந்தாள். பிள்ளைப் பேற்றின் போது அவர்கள் பட்டபாடு நாய்படாப்பாடு. அன்றே பார்வதியின் மனதில் விதை விழுந்துவிட்டது. "செத்தாலும் பரவாயில்லை, எங்கட நிலத்தில் சாகவேணும்" அந்த விதை நாளாக நாளாக பெருவிருட்சமாகி கிளை பரப்பியது. நடராசாவை ஒவ்வொரு நாளும் குடையத்தொடங்கினாள்.

குழந்தைகள் வீட்டைப்பற்றி விசாரிக்கும் போது பழைய வசந்தங்களைச் சொல்லிச் சொல்லியே பூரித்தாள். எனவே ஆசை ஆர்வம் குழந்தைகளையும் தொற்றிக் கொண்டது. "அப்பா எங்கட வீட்ட போவம்" என ஆக்கினைப்படுதினர். அதன் விளைவு இன்றைய கடல் பயணம்.

பொங்கி நுரை தள்ளும் கடலலைகளும் எங்கட வீட்டை போறம் என்ற வீம்புமாகக் குழந்தைகளின் உற்சாகத்திற்கு அளவேயில்லை.

"அப்பா!

அண்ணாவைப் பாருங்கோ எங்கட வேப்பமர ஊஞ்சலில் தான் தான் முதல் ஆடுவாராம். அப்பா நானெல்லே முதல்..." என மழலை கொஞ்சக் கூறினாள் ஐந்து வயதான தேனுகா.

"இல்லை நீ சின்னப்பிள்ளை விழுந்திடுவாய் நான் ஆடிப்போட்டு பிறகு உன்னையும் தூக்கி வைச்சு ஆடுவன் என்றான் சின்னவன் கதிர்.




## "செத்தாலும் பரவாயில்லை, எங்கட நிலத்தில் சாகவேணும்"

அப்பொழுதே அவர்களுக்குள் யுத்தம் ஆரம்பித்துவிட்டது. பின்னர் பார்வதி தலையிட்டு அவர்களை அடக்கினாள். அவர்களை அடக்கினாளே ஒழிய அவளின் மனக்கற்பனைகளை அடக்க முடியவில்லை.

சிவராத்திரிப் பொழுதில் அவளின் சகோதரிகளோடு சேர்ந்து, நாலு கயிறு போட்டு நடுவே மரப்பலகை வைத்துக்கட்டிய ஊஞ்சலில் கழித்த பொழுதுகள் பசுமையாய் நிழலாடியது.

பார்வதியின் கற்பனை இவ்வாறிருக்க நடராசாவின் கற்பனை வேறுவிதமாய் இருந்தது. "வீட்டை போய் இரண்டு நாளில் வீடெல்லாம் சீர்ப்படுத்திப்போட்டு நிலத்தைக் கொத்தவேணும். "ஆடி விதை தேடி விதை" எண்டு சொல்லுவினம் இந்த முறை நெல்லு விதைக்க வேணும். வயிறாற குத்தரிசிச்சோறு சாப்பிடவேணும். உங்க உந்தப் பச்சையரிசிச்சோற்றை பதின்மூண்டு வருசமா சாப்பிட்டு மூலவியாதி வந்ததுதான் மிச்சம். வேறொண்டுமில்லை.

இருள் கவியத் தொடங்கியது. வள்ளம் கரை ஒதுங்கியது. "உங்கட இடம் வந்திட்டுது எல்லாரும் இறங்குங்கோ நேவிக்காரன் வரமுதல் நாங்கள் போகவேணும்" வள்ள ஓட்டி துரிதப்படுத்தினான்.

தூங்கிய மகளையும் சாமான்களையும் தூக்கியபடி நடராசா கீழே இறங்கினான். அவன் உடல் புல்லரித்தது. "ஊருக்குள்ள போய் விசாரியுங்கோ நாங்கள் வாறம்" என்றபடி குடும்பங்களையும் இறக்கிவிட்ட நிம்மதியில் வள்ளக்காரன் சென்றுவிட்டான்.

சிறிது தூரத்தே குடிமனைகள் தென்பட்டன. இவர்களைக் கண்டதும் கூட்டம் கூடிவிட்டது.

இவர்கள் நிலைமையை நன்றாக அறிந்த ஊர்ப்பெரியவர், "சரி சரி நீங்கள் எங்கட வீட்டை வாங்கோ ஏதாவது, சாப்பிட்டுவிட்டு படுங்கோ எல்லாம்விடியப் பார்ப்பம்" என்றபடி கூட்டத்தைக் கலைத்தார்.

அவர் எவ்வளவுதான் கேட்டும் அந்த இடத்தின் பெயரைக் கூறாது விடியட்டும் என்றுவிட்டார். இவற்றிற்கெல்லாம் பழக்கப்பட்டுப்போன பெரியவர்.

விடிந்ததும் கொஞ்சம் கொஞ்சமாக விசாரித்ததில் அந்த இடம் நெடுந்தீவு என்று புரிந்தது. அவர்களுக்கோ பேரதிர்ச்சி.

ஊர்ப்பெரியவர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார். இது ஒரு வழமையான நிகழ்வென்பதையும் பருத்தித்துறைக்குக்கொண்டு போறம் என்றுவிட்டு இந்திய மீனவர்கள், ஏதாவது ஒரு தீவில் இறக்கிவிட்டுச் செல்வதையும் தெரிவித்தார்.

பின்னர் அவர்களுக்கான உணவுகள் வழங்கப்பட்டது. நடராசா உண்ண மறுத்து விட்டான். அவனது இடத்தை விசாரித்துவிட்டு மாவிட்டபுரத்தில் வீடுகளே இல்லை என்று கூறிய பெரியவரின் வார்த்தைகள் அவனுக்கு பேரிடியாய் விழுந்தன.

"பெளித்திண்ணையில் வேப்பமர நிழவில் ஓலைப்பாய் விரிச்சு படுக்கவேணும்" என்ற அவனது கற்பனை காற்றாகிப் போனது.

விவசாய எண்ணமெல்லாம் கைவிட்டு போய் ஒரு குடிசை போடுவம் என்ற நிலைப்பாட்டில் புறப்பட்டான்.

ஊர்ப்பெரியவர் வழிசொல்லி ஒரு ஆளையும் யாழ்ப்பாணம் வரை துணைக்கனுப்பினார். குறிகட்டவான் வரை வள்ளத்திலும் பின் பஸ்ஸிலும் செல்லுமாறு கூறினார். நன்றிப்பெருக்கோடு அவருக்குப் பயணம் சொல்லிப் புறப்பட்டனர். "என்ன இருந்தாலும் இது எங்கட சனமெல்லே" என்ற உணர்வு அவனுள் பரவிநின்றது.

மதியம் அளவில் யாழ்ப்பாணத்திலிருந்து தெல்லிப்பளை நோக்கி பஸ் புறப்பட்டது. கொண்டெக்ரரிடம் இடத்தைக் கூறினான். அந்த இடத்திற்கு பஸ் போகாது என்றார் நடத்துநர்.

"பரவாயில்லை எங்க மட்டும் போகுமோ அங்க மட்டும் போங்கோ" என்றான் நடராசா. அவனுக்கு இவரது பேச்சு விநோதமாய்ப்பட்டது.

"பஸ்போகாட்டா நடந்தெண்டாலும் போவம். இந்தப் பதின்மூண்டு வருசத்தில் வழியும் பறந்து போகுமே" ஒரு தடவை கண்மூடி தனது ஊரை சிந்தித்தான். சிந்தனையின் பசுமை முகத்திலும் தெம்பை வரவழைத்தது.

"அண்ணை கனவு கண்டது காணும் இறங்குங்கோ. இதுக்கு மேல போகேலாது கனநேரம் நிண்டா ஆமியும் விசாரிப்பான். நாங்கள் வாறம். அவரை மணித்தியாலத்தில சாப்பிட்டிட்டு எடுப்பம் அதுக்கிடையில் யோசியுங்கோ. இல்லாட்டி நாளைக்குத்தான் பஸ்".

நடராசாவிற்கு தலை சுற்றுவது போலிருந்தது. இது எந்த இடம், எந்தக்காடு, எதுவுமே புரியவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தான். வானளாவி நினற் அரசமரம் தன்னைப்பறைசாற்றியது. இது ஐயனார் கோவில் எவ்வளவு பசுமையான இடம் இப்போது...

பொயின்றிற்குள் நின்ற ஆமியைத் தனது இடத்திற்குப் போக அனுமதி கேட்டான். அவன் கோபமாக மறுத்தான். இனியும் பேசினால் சுட்டுவிடுவான் போலிருந்தது.

களைத்துப்போய் பஸ்ஸினுள் ஏறி அமர்ந்தார். குழந்தைகள் கரைச்சல் கொடுத்தன.

"அப்பா எங்க எங்கட வயல்" என சின்னவனும்,

"இது எந்தக் காடு" என மூத்தவனும்,

"எங்கட வீட்டபோவம்" எனக் கடைக்குட்டியும் சிணுங்கினர். தனது இயலாமையை மறைக்க குழந்தைகள் மீது சீறி விழுந்தான்.

அருகே வந்த நடத்துநர், "நீங்கள் எங்க இருந்து வாறியள்" என்றார். இப்போது அவர் குரலில் பரிதாபம் கலந்திருந்தது.

"இந்தியாவில் இருந்து பதின்மூன்று வருசத்துக்குப் பிறகு" என்றான், நடராசா.

"இஞ்சத்தை வீடெல்லாம் எப்பவோ அழிஞ்சுபோட்டுது. வழியெல்லாம் பற்றைக்காடுகள் சனசஞ்சாரமே இல்லை. பண்ட் தாண்டிப் போகேலாது."

அந்த வசனத்தைக் கேட்டதும் நடராசாவின் முகத்தில் கண்ணீர் கொப்பளிக்கத் தொடங்கியது.

"இப்ப நாங்கள் எங்க போறது" பார்வதி விக்கலுடன் கேட்டாள். அவனால் பார்வதி பின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவே முடியவில்லை.

"நீங்கள் ஒண்டு செய்யுங்கோ யாழ்ப்பாணத்தில இருந்து நேரா முகமாலை போய் கிளிநொச்சி போங்கோ, அங்க எங்கட "பொடியளிட்ட" சொன்னியயெண்டால் ஏதாவது வசதி செய்து தருவினம்." என்றார் நடத்துநர்.

பஸ் புறப்பட்டது. வீடெல்லாம் எப்பவோ அழிஞ்சிட்டுது பண்ட் தாண்டி யாரும் போகேலாது என்ற வசனம் மனதில் சாட்டையடியாய் வலித்தது.

குழந்தைகளை அணைத்துக் கொண்டான்.

நன்றி: ரஜிதா – தை 2004

விளம்பரம் என்பது
உங்கள் வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு

437.345.4203

# தமிழ் மரபுத் திங்கள்
## Tamil Heritage Month
ஜனவரி 2023



தாய் தேசத்தின் நினைவு சுமந்து நடப்போம்!
மண்மீட்பினை தம் இரத்தத்தோடும் கனவோடும் சுமந்து
சரித்திரமாகிய எம் வீரர் பணி தொடருவோம்!
இடரிலும் தளரிலும் சிக்கும் எம் வாழ்வை மீட்டு
நிலவு பொழியும் எம் முற்றத்தில் திளைப்போம்!
இந்தப் புத்தாண்டில், வரும் பொங்கல் திருநாளில்
புது வாழ்வுக்குள் காலடி எடுத்து வைக்க
வாழ்த்துகின்றோம்!

சங்கத்தமிழ்

# புத்தர் சிலையும் தமிழீழ மண்பறிப்பும்!

சிங்கள இனவாத அரசாங்கம் அன்று முதல் இன்று வரை புத்த மதம் என்கின்ற பேரின வாத தத்துவத்தில் தமிழர்களுக்கு எதிராக கட்டமைக்கப்பட்ட தமிழின ஆழிப்பை நடாத் திக்கொண்டு வருகிறது நிகழ் காலத்தின் தேவை கருதி மீள் வெளியீடாக புத்தர் சிலையும் தமிழீழ மண்பறிப்பும்.

"எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப் பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது".
-தமிழீழத் தேசிய தலைவர் மேதகு வே . பிரபாகரன்

சிறீலங்கா அரசியல் சாசனம் புத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்குகிறது. 1978ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த இன்றைய அரசியல் சாசனத்தின் சரத்து 9 புத்தமதத்தை ஆதிக்க நிலையில் வைத்துள்ளது. பிற மதங் களுக்கு யாதொரு உரிமையும் வழங்கப்பட வில்லை. இதன்காரணமாக "ஒற்றை மதச் சார்புள்ள நாடு என்று சிறீலங்கா வகைப்படுத் தப்படுகிறது. அதே சாசனத்தின் 10, 14(i)(e) சரத்துக்களுக்கு அமைவாகப் புத்த மதத்தின் முதன்மையைப் பேணும் பொறுப்பை அரசு மீது சரத்து 9 சுமத்துகிறது. சரத்து 10 கூறுவது யாதெனில் "ஒவ்வொரு தனி மனிதனுக்கும் கருத்துச் சுதந்திரம், மனச்சாட்சி மற்றும் மதச் சுதந்திரம் இருப்பதாகவும் தான் விரும்பிய மதத்தைக் கடைப்பிடிப்பதற்கும் தனது மத நம்பிக்கைக்கு அமைவாக தெரிவுசெய்வதற் கும் உரித்து உண்டு " சரத்து 14(i) (e) தனியாகவோ பிறருடன் ஒன்றிணைந்தோ, பகிரங்கமாகவோ அல்லது பிரத்தியேக மாகவோ மத அனுஸ்டானங்களைச் செய் வதற்கும் மதபோதனை செய்வதற்குமான உரித்துக்களை வழங்குகின்றது. பெயரளவில் 10, 14(i) (e) என்பன சரத்து 9 மீது கட்டுப் பாட்டை செலுத்துவது போன்ற தோற்றப்பாடு இருப்பினும் நடை முறை வித்தியாசமாகி இருக்கிறது.

சிறீலங்காவின் தேசிய மதம் புத்தமதம் என்பது எதுவிதத்திலும் மறுக்க முடியாத உண்மை. அண்மைக் காலத்தில் சிறீலங்கா அதியுயர் நீதிமன்றம் வழங்கிய இரு முக்கிய தீர்ப்புக்கள் "புத்த சாசனத்தின் மேலாதிக் கத்தையும் அதைப் பாதுகாக்கவேண்டிய அரசின் பொறுப் பையும்; வலியுறுத்துவதோடு பிற மதத் தினரின் குறிப்பாக கிறிஸ்தவ மதத்தினரின் "மதப் பிரசாரம்" செய்யும் உரித்தையும் மறுக் கின்றன. மேற்கூறிய சரத்துக்கள் 10, 14(i)(e) ஆகியவற்றில் பிரசாரம் செய்யும் உரித்து ((PROPAGATE) வழங்கப் படவில்லை என் பது குறிப்பிடத்தக்கது. பிரசாரம் செய்து மத மாற்றம் செய்யும் உரித்து கிறிஸ்தவ மதத் துடன் ஒன்றிணைந்ததாகவும் அதை மறுப்பது ஒரு பாரிய உரிமை மறுப்பு என்றும் வாதிட் படுகிறது. சிறீலங்கா அதியுயர் நீதிமன்றத்தின் நிலைப்பாடு என்னவென்றால் சரத்து 9 வழங் கும் உரித்திற்கு அமைவாக புத்தசாசனத்தைப் பாதுகாத்து ஆதரிப்பதோடு அரசு பிற மதங் களின் விரிவைத் தடுக்கும் விதத்தில் செயற் படவேண்டும் என்பதாகும். சிறுபான்மை இன, மத, மொழியினரின் உச்ச உரிமைப் பாதுகாவலனாக இந்தியாவின் உச்ச நீதி மன்றம் செயற்படும் இவ்வேளையில் சிறீ லங்கா அதியுயர் நீதிமன்றம் பெரும்பான் மையினரின் உரித்தைப் பாதுகாப்பதில் தீவிர மாகச் செயற்படுகின்றது. 1978ஆம் ஆண்டுச் சாதனத்தின் மிகவும் பிற்போக்கான சரத்துக் களில் சரத்து 9 முதலிடம் வகிக்கிறது. மேற் கூறிய சரத்து 9 வெளிப்படுத்தும் பௌத்த அடிப் படைவாதச் சிந்தனை மகா வம்ச காலத்தில் இருந்து தொடரும் நச்சுக் கருத்தாகும். சிங்கள - பௌத்தம் என்று வழங்கும் மதத் தீவிர வாதம் இத்தீவில் தோன்றுவதற்கும் இது காரணமாக அமைகிறது. இனப்பிரச்சினை பூதாகர வளர்ச்சி காண்பதற்கும் தீர்க்கப்பட முடியாத தூரம் அது சென்றுவிட்டதற்கும் புத்த துறவிகள் எல்லாவகைச் சமாதான முன் னெடுப்புக்களுக்கும் காட்டும் கடும் எதிர்ப்பு இந்நாட்டின் துன்ப நிகழ்ச்சியாகப் பார்க்கப் படுகின்றது. சுதந்திரத் திற்குப் பின்பு தோன்றிய வன்முறைகள் 1956இல் நிறைவேறிய தனிச் சிங்களச் சட்டத்துடன் ஆரம்பிக்கின்றன. தமிழுக்கு உரிய இடம் கொடுக்கும் நோக்கில் செய்யப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம் புத்த



பிக்குகளின் நேரடித் தலையீட்டினால் கை விடப்பட்டது. இந்த ஒப்பந்தம் இவ்வாறு ஒரு தலைப் பட்சமாக பிரதமர் பண்டார நாயக் காவால் கிழிக்கப்படாதிருந்தால் இன்றும் நாடு இரண்டுபடவேண்டிய அவசியம் இல்லை யென்று பார்வையாளர்கள் தெரிவிக்கின் றனர். தனிச் சிங்களச் சட்டமும் தமிழர் களுடன் செய்யப்படாதிருக்கும் அதிகாரப் பகிர்வும் நாட்டின் சீரழிவுக்குக் காரணமாக இருப்பதற்கு புத்த பிக்குகளே மூல காரண மாவர்.

1948 ற்கு பின் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத் தினால் கிழக்கு மாகணத்தில் 7000 சதுர கிலோமீற்றரையும் வடக்கில் 600 சதுர கிலோமீற்றரையும் அரசு ஆக்கிரமித்துள்ளது. காலத்திற்கு காலம் அரசு நடத்தும் 'எல்லை மீள் வரைவு (BOUNDARY DEMAR - CATION) சிங்களவர் குடியேறிய தமிழர் மண்ணை சிங்கள மாகாணங்களுடன் இணைக்கும் நோக்கை கொண்டது "மனி தர்கள் தமது வரலாற்றைத் தாமே உருவாக் குகின்றனர், ஆனால் தாம் விரும்பியவாறு அதைச் செய்ய அவர்களால் முடிவதில்லை, தங்களால் தெரிவுசெய்யப்பட்ட இலக்கில் அவர்களால் செய்ய முடிவதில்லை. கடந்த காலத்தில் இருந்து தொடரும் சூழலில் இருந்து தான் மனிதர்கள் தமது வரலாற்றை உருவாக் குகின்றார்கள் என்கிறார் கார்ல்மாக்ஸ் (EIGHTEENTH BRUMAIRE OF LOVIS BONAPARTE KARL MARX) மகாவம் சத்தின் கதாநாயகன் துட்டகெமுனு பல் லாயிரம் தமிழர்களைக் கொன்றொழித்தபின் தான் நடத்திய படுகொலைகள் பற்றிச் சிந்தித்து சோகத்தில் ஆழ்ந்தபோது அவனைத் தேற்று வதற்கு வானில் பறந்தவாறு சில தேரர்கள் வந்தடைகின்றனர். உயிர்க்கொலையை வெறுத் தொதுக்கும் புத்த மதத்தைச் சேர்ந்த இவர்கள் பாவமன்னிப்பு வழங்குகின்றார்கள். மகாவம்சம் கி.பி 6ஆம் நூற்றாண்டில் முற்றுப் பெற்ற மதநூல். 1956இல் எழுதப்பட்ட பௌத் தமத வரலாறு என்ற நூலின் ஆசிரியரான புத்த மதத்துறவி பிக்கு ராகுல மேற்கூறிய துட்ட கெமுனு தொடர்பான நிகழ்ச்சி பற்றி என்ன சொல்கிறார் தெரியுமா? "இளம் காமினியின் கொடியின்கீழ் முழுச் சிங்கள இனமும் அணி திரண்டது. சிங்களவர்கள் மத்தியில் தேசியம் அப்போது ஆரம்பித்தது. ஆரோக்கியமான இளம் இரத்தமுடைய புதிய இனம் புத்த மதத்தின் வழிநடத்தலில் உருவாகியது. மத அடிப்படையிலான அந்த அரசனின் தேசியம், கிட்டத்தட்ட ஒரு தீவிரவாதம் போன்று சிங்கள சமுதாயத்தைத் தட்டியெழுப்பியது. இந்தச் சூழ லில் ஒரு புத்த மதத்தைச் சேராதவன் மனித குலத்தைச் சேர்ந்தவனாக கணிப்பிடப்பட முடி யாது (A HISTORY OF BUDDHISM IN CEYLON. THE ANURADHAPURA PERIOD BY BHIKKU RAHULA M.D GUNASENA PUBLICATION . COLOMBO 1956) துட்டகெமுனு எல்லாளனுக்கு எதிராக நடத்திய போருடன் ஒப்பிட்டு வடமராட்சி ஒப்பிரேசன் லிபரேஷன் நடவடிக்கை பற்றிய நூலை சிறீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த கப்டன் திலக் சேனநாயக்கா எழுதியுள்ளார். கிட்டத்தட்ட ஆயிரம் வரையிலான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டுத் தெருக்களில் சடல மாக வீசப்பட்டனர். பெருந்தொகையான இளைஞர்கள் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு தெற்கிலுள்ள பூசாபோன்ற வதைமுகாம் களுக்கு அனுப்பப்பட்டனர். இத்தனை கொடு மைகளையும் கண்டு கொதித்தெழுந்த புலிகள் கரும்புலியாக மாறினர். ஒப்பரேசன் முன் னேறிப் பாய்ச்சல், இடிமுழக்கம், றிவிரெச, ஜெயசிக்குறுய் போன்ற நடவடிக்கைகளிலும் இந்த அதிகாரி பங்குபற்றியவர்.

2004ஆம் ஆண்டு வெளிவந்த இவருடைய நூலில் "சென்ற காலத்தில் துட்டகெமுனு நடத் திய ஒப்பிரேசன் விஜித்தபுர போர் நடவடிக் கைக்குப் பின்பு மிகவும் விஞ்ஞானபூர்வமாக நடத்தப்பட்ட போர் நடவடிக்கையாக ஒப்பி ரேசன் வடமராட்சி லிபிரேசனைக் குறிப் பிடலாம்" என்ற வியப்பான செய்தி காணப் படுகிறது. இந்த அதிகாரி கெமுனுவாட்ச் படை யணியைச் சேர்ந்தவர். (VADAMARADCHI LIBERATION OPERATION AND NORTHERN BATTLES BY CAPTAIN THILAK SENANAYAKE. 2004) வன்முறைக்கும் வன்முறையைத் தூண்டும் கோட்பாடுகளுக்கும் காத்திரமான மாற்றீடாக புத்தமதக் கோட்பாடுகள் இடம்பெறுகின்றன என்கிறார் பங்கஜ் மிஸ்ரா. (AN END TO SUFFERING THE BUDDHA IN THE WORLD BY PANKAJ MISHRA, 2005) முற்று முழுதாகச் சாந்தி சமாதானம் என்ப வற்றை முன்னெடுக்கும் புத்தமதக் கோட் பாடுகள் மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா போன்றோர் சிந்தனை மீது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக மிஸ்ரா சுட்டிக்காட் டுகிறார். இந்திய வரலாற்றின் மிகப்பெரிய இந்தியன் என்றும் கௌதம புத்தரை, ஜவகர் லால் நேரு வர்ணிக்கிறார். இத்தனை சிறப்பு மிக்க பரமஞானி சிறீலங்காவில் படும்பாட்டை நினைக்கும்போது துயரமாக இருக்கிறது. உயிர்க் கொலை செய்வோருக்கு மன்னிப்பு வழங்கும் தூண்டு கருவியாகவும், வன் முறையைத் தூண்டுபவர்களும், இனங் களுக்கிடையிலான அமைதிக்குத் தடைக் கல்லாகவும் இத்தீவின் புத்தபிக்குகள் ஆரம்ப காலந்தொட்டு இடம் பெறுகின்றனர். புத்தரின் போதனைகள் மிகவும் சுருக்கமானவை. ஆசைகள் துன்பத்திற்குக்காரணமாகின்றன. ஆசைகளைத் துறந்தவன் விடுதலை பெறு கிறான். நன்கு வேயப்படாதவீட்டுக் கூரை யிலுள்ள துவாரத்தினூடாக மழைநீர் உள் நுளைவதுபோல் ஐம்புலனை அடக்காத வரிடம் தீயசெயல்கள் குடிகொள்கின்றன. கோபம், பேராசை, தீய நடத்தை என்பவற் றைத் துறந்தவனே துறவி. கொல்லாமை அவ னுடைய மிகப்பெரிய நற்செயல்.கி.பி 563இல் பிறந்து தனது 80வது வயதில் இறந்த கௌ தமர் காலத்தால் அழியாத மதபோதனை களையும் வாழ்க்கை முறைகளையும் விட்டுச் சென்றார். பிக்குகள் என்போர் தமக்கென வாழாதவர்கள். உலகின் ஐந்து மிகப்பெரிய மதங்களில் ஒன்றாக பௌத்தமதம் கணிப்பிடப் படுகிறது. சிங்கள - பௌத்தம் என்று

ஒன்றுமே கிடையாது. ஆனால் அப்படி இருப்பதாக சிறீலங்கா மதவாதிகள் கூறுகின்றனர். 2200 வருடங்களுக்கு முன் சிறீலங்காவுக்கு இந்தியாவிலிருந்து பௌத்தமதம் கொண்டு வரப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. புத்த சங்கத்தின் பாரிய வீழ்ச்சி பற்றி சிங்கள பேரினவாதத்தின் குரலாக ஒலிக்கும் திவயின சிங்களப் பத்திரிகை தனது 26 பிப்பிரவரி, 1998 ஆம் திகதி இதழில் விரிவாகக் குறிப்பிடுகின்றது. பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியபின் பெண்களைக் கொலைசெய்யும் பிக்குகள் தொடக்கம், வழிப்பறியில் ஈடுபடுவோர் உள்ளடங்கலாக புத்த சின்னங்களைத் திருட்டுத்தனமாக விற்பனை செய்யும் புத்தபிக்குகள் வரையிலானோர் வரலாற்றை விலாவாரியாக எல்லாவல மெதானந்த என்பவர் எழுதியுள்ளார். இதுபற்றிக் குறிப்பிடும் ஜனவரி 22, 1999ஆம் நாள் ஐலண்ட் பத்திரிகை “பிக்கு தர்மத்திற்கு உட்படாத ஆயிரக்கணக்கான இது போன்ற சம்பவங்கள் பத்திரிகை வாயிலாக வெளி வருகின்றன என்று தெரிவித்துள்ளது. அரசியல் ஈடுபாடு புத்த சங்கத்தின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாய் அடையாளம் காணப்படுகிறது. பெரும் எண்ணிக்கையில் தமிழர்களைக் கொலைசெய்த துட்டகெமுனுவை” மதத்திற்காகக் கொலைசெய்வது பாவமில்லை என்று தேற்றிய புத்தபிக்குகள் புத்த மதத்தைச் சிதைத்த முதற் குற்றவாளிகளாகக் காணப்படுகின்றனர். பரிநிவாரணம் அடைய முன்பு “தனது தத்துவ போதனைகள் 500 வருடங்கள் மாத்திரம் நிலைக்கும் ” என்று புத்தர் கூறியதாக ஒரு பாரம்பரியச் செய்தி உண்டு. தேசிய சங்கக் கவுன்சில் (NATIONAL SANGHA COUNCIL) என்ற அமைப்பை உருவாக்கிய மதுலுவாவேசோபிததேரர் சிங்கள - பௌத்த மேலாதிக் கத்தை முன்னெடுப்பதோடு, இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இத்தீவில் இடமில்லை என்ற கருத்தை முன்வைத்தார். தனது உயிரை எடுப்பது புத்ததர்மம் ஆகாது என்று தெரிந்தும் ஜாதிகஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் ஒமல்லே சோபித தேரர் அண்மையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்துள்ளார். நான்கு புத்தமத பீடங்களின் தலைவர்கள் இவருடைய உயிரைக் காப்பாற்ற எடுத்த முயற்சிகள்தான் இன்றும் வேதனையானது. சிங்கள மக்களின் வரலாற்று நூலான மகாவம்சத்தை மொழி பெயர்த்த வில்ஹெம் கெய்கா (WILHEM GEIGER) பின்வருமாறு மகாவம்சம் பற்றிக் கூறுகிறார். “அதில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றது என்பதைவிட என்ன சொல்லப் படாமல் மறைக்கப்பட்டிருக்கின்றது என்பதை ஆராய்வதே மிகவும் சிரமமான பணி.” கெய்கர், எஸ்.தெரனியகல போன்றோரின் ஆய்வுகளின்படி கி.பி 500இல் வந்ததாகக் கூறப்படும் விஜயன் இலங்கையின் முதல் மனிதன் அல்ல. மகாவம்சம் மறைக்க முயலும் தென்னிந்திய மேகவிதிக் கலாசாரம் இலங்கையில் நன்கு பரவியிருந்தது என்பதை இரு ஆய்வாளர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். பலவிதமான புதைபடிவச் சான்றுகள் இதை வெளிப்படுத்துகின்றன. பலாங்கொடை மனிதன் பற்றிய ஆய்வுகளும் பொம்பரிப்பு பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள் சான்றுகளும் தென்னிந்தியத் தொடர்பைக் காட்டுகின்றன. பௌத்தமதம் தழுவிய தமிழர்கள் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பெருமளவில் வாழ்ந்திருக்கிறார்கள். இம்மதத்தின்வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றியிருக்கிறார்கள் என்ற உண்மையை மகாவம்சம் கூறாமல் விட்டிருக்கின்றது.

தென்னிந்திய வரலாறுகளின்படி அசோகச்சக்கரவர்த்தி காலத்தில்பௌத்தமதம் தென்னிந்தியாவில் பெருமளவில் பரவத்தொடங்கியது. அதன்பின் கி.மு 250இல் புத்த துறவிகள் குழுவொன்று மகிந்த தலைமையில் இலங்கை சென்றது. காவிரிப் பட்டினத்தில் இருந்து கடல் மார்க்கமாக இவர்கள் இலங்கை சென்றனர். காவிரிப் பட்டினத்தில் தங்கியிருந்தபோது ஏழு புத்தவிகாரைகளை மகிந்த அங்கு கட்டுவித்தான். கி.பி 2இல் எழுதப்பட்ட சிலப்பதிகாரம், மணி மேகலை ஆகியவற்றில் இதுபற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. தேவநம்பியதீசனின் மாமனாகிய அரித்தகர் தென்னிந்தியாவில் மகிந்த முன்னெடுத்த மதப் பணிகளுக்கு உதவினார். இவர் பெயரால் அரிதாபட்டி என்ற கிராமம் மதுரை மாவட்டத்தில் இன்னும் இருக்கிறது. இக்கிராமம் முன்னர் புத்தமதம் வளர்த்த மையமாக இருந்தது. கி.பி 12வரை தென்னிந்தியாவில் பௌத்தமதம் நிலை கொண்டிருந்தது. இரண்டாம் பராக்கிரமபாகு காலத்தில் கி.பி 1236 - 1268 தர்மகீர்த்தி என்ற பாண்டியநாட்டு தமிழ்ப் புத்ததுறவி இலங்கை வந்து அனைத்துலக பௌத்த மாநாடொன்றை நடத்தினார். மகாவம்சத்தின் தொடர்ச்சியான சூலவம்சம் என்ற நூலையும் தத்தவம்சம் எனும் இன்னுமோர் நூலையும் இவர் எழுதினார். பாளி மொழியில் இருந்த திரிபீடகத்திற்கு தமிழர்களாகிய புத்தகோச தர்மபாலாவும், புத்ததத்தவும் உரைக்குறிப்புக்கள் எழுதினர்.




சோழநாட்டைச் சேர்ந்த சங்கமித்திரா என்ற பெண் புத்ததுறவி கி.பி 4இல் இலங்கை சென்று அந்த நாட்டு அரசனை மகாயான பௌத்தத்திற்கு மதமாற்றம் செய்தார். இதன் காரணமாக மகாவிகாரை அழிக்கப்பட்டு மகாயன பௌத்தத்தின் பீடமாக அபயகிரி விகாரை தரம் உயர்த்தப்பட்டது. மகாவிகாரை - அபயகிரி பீடங்களுக்கு இடையில் முரண்பாடுகள் தோன்றியதோடு சிங்கள தமிழ்ச்சரவாகவும் மாறியது. என்றாலும் கி.பி 5ஆம் நூற்றாண்டு வரையான சோழநாட்டு புத்ததத்தா அனுராதபுரத்தின் மகாவிகாரைக் பௌத்த சிங்களப் பேரினவாதம் முன்னெடுக்கும் தர்ம தீபம் என்ற நச்சுக் கருத்து நாடு இரண்டுப்படுவதை ஊக்குவிக்கும் எனபது அரசியல் ஆய்வாளர்களின் முடிவு. புத்தரால் பௌத்தமதக் காவலாரக நியமிக்கப்பட்டவர்கள் சிங்கள இனத்தவர்களே. இலங்கை முழுவதும் புத்தர் அருளால் சிங்களவர்களுக்கு தரப்பட்ட புனித பூமி என்பன தர்ம தீபக் கோட்பாட்டின் முக்கிய அம்சங்களாகும் சிங்கள இனவாதத்தின் மூலப்பொருள் தர்ம தீபக் கோட்பாடு (THE DHRAMA DEEPA CONCEPT) குப் பொறுப்பாக இருந்தார்.

பின்வரும் தமிழ் நூல்களில் தமிழ்பௌத்தம் பற்றிய விரிவான தகவல்களைப் படிக்கலாம். மணிமேகலை, குண்டலகேசி, திருப்படிகம், வளையாபதி, வீரசோழியம், பிம்பிசாரகதை சிங்கள பௌத்தத்திலும் பார்க்கத் தமிழ் பௌத்தம் தொன்மை வாய்ந்தது. இதை மகாவம்சம் இருட்டடிப்புச் செய்துள்ளது. இலங்கையில் பௌத்தமதத் தோற்றம், வளர்ச்சி பற்றிய ஆய்வை மேற்கொள்வோர் சிங்கள மக்கள் பௌத்தர்களாக முன்பே இங்குள்ள தமிழர்கள் அதைத் தழுவி விட்டார்கள் என்பதைக் கண்டறிந்துள்ளனர். இதைக் கடும் பிரயத்தனம் எடுத்து மறைப்பதிலும் வடகிழக்கில் பரவலாகக் கிடைக்கும் பௌத்த சின்னங்களைத் தம்முடையவை என்று கூறும் பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் போக்கு இப்போது தீவிரமடைந்துள்ளது.

இலங்கையின் முதலாவது உள்ளூர் புதைபடிவ ஆய்வுத் திணைக்கள முதல்வரான பேராசிரியர் செனரத் பறனவிதான கந்தரோடை புத்தமத அழிபாடுகளைப் பார்த்தபின் “இவை தமிழ்ப் பௌத்தர்களுக்கு உரியவை என்று கூறினார். இந்த நிலைப்பாடு மாற்றப்பட்டு கந்தரோடை எச்சங்கள் தம்முடையவை என்று சிங்களவர்கள் கூறுகின்றனர். இதற்குச் சில தமிழர்களும் ஒத்தூதி வருகின்றனர். இந்துக்களின் வழிபாட்டு இடங்களை அழித்தல், அதே இடத்தில் புத்தர் சிலை போன்றவற்றை அமைத்தல் ஒரு நெடுங்காலத் தந்திரோபாயமாகக் கடைப் பிடிக்கப்படுகிறது. டிசெம்பர் 22, 1984ஆம் நாள் உடனடியாக வெளியேறும்படி மணலாறு மக்களுக்குச் சிங்கள இராணுவம் ஒலிபெருக்கி மூலம் கட்டளை இட்டது. 42கிராமங்களைச் சேர்ந்த 4000 தமிழ்க் குடும்பங்கள் இவ்வாறு வெளியேற்றப்பட்டனர்.

1987இன் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இப்பகுதிக்குக் கட்டளை அதிகாரியாக வந்த கேணல் டாட்டா தமது பழைய கிராமங்களைச் சென்று பார்வையிட அவர்களுக்கு அனுமதி அளித்தார். கொக்குளாய் அம்மன் ஆலயம் உடைக்கப்பட்டிருந்தது, அதே இடத்தில் புத்தர் கோயில் கட்டப்பட்டிருந்தது. திருக்கேதீஸ்




வரத்தை பறங்கியர் இடித்துத் தள்ளியபோது அடியார்கள் “ஆதிகோணநாயகர்” என்ற கோயிலைத் தம்பலகாமத்தில் கட்டினார்கள். சிங்களக் குடியேற்றம் தம்பலகாமத்தில் ஆரம்பிக்கப்பட்டபோது இக்கோயில் கவனிப்பாரின்றிச் சிதலமடைய விடப்பட்டுள்ளது. கந்தளாயில் புத்தகோயில்கள் எழுந்துள்ளன. அண்மைக் காலமாகத் தமிழர் பிரதேசங்களில் புத்தர் சிலைகளை நாட்டும் நடைமுறை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

தமிழ்-முஸ்லிம் மக்கள் பெரும்பான்




(ஈழத் தமிழரின் மரபு வழித் தாயகம்)
தமிழீழம்
தமிழீழத் தலைநகர் - திருகோணமலை
தமிழீழ மாவட்டங்கள்
01. யாழ்ப்பாணம்
02. கிளிநொச்சி
03. முல்லைத்தீவு
04. வவுனியா
05. மன்னார்
06. திருகோணமலை
07. மட்டக்களப்பு
08. அம்பாறை
தமிழீழ நிர்வாக வலயங்களும் நகரங்களும்
01. நல்லூர் - நல்லூர்
02. வரணி - கொடிகாமம்
03. கரைச்சி - கிளிநொச்சி
04. பூநகரி - பூநகரி
05. முல்லைத்தீவு - தண்ணீரூற்று
06. மாங்குளம் - மாங்குளம்
07. மாந்தை - உயிலங்குளம்
08. மடு - மடுறோட்
09. வவுனியா - ஓமந்தை
10. குச்சவெளி - திரியாய்
11. திருகோணமலை - திருகோணமலை
12. மூதூர் - கிளிவெட்டி
13. வாகரை - மாங்கேணி
14. வெல்லாவெளி - பேராறு
15. மட்டக்களப்பு - கரடியன் ஆறு
16. அக்கரைப்பற்று - பாலமுனை
17. பொத்துவில் - பொத்துவில்
18. அறுவாக்காடு - பொம்பரிப்பு
19. புத்தளம் - புத்தளம்
20. சிலாபம் - சிலாபம்
தமிழீழத் தேசியச் சின்னங்கள்
வட மண்டலம்
வன்னி மண்டலம்
மேல்மண்டலம்
நடு மண்டலம்
முத்து மண்டலம்
சிங்களநாடு
கிழக்கு மண்டலம்
தென் மண்டலம்
நெடுஞ்சாலை
சாலை
தெரு
வண்டிச்சாலை
கீழ்மட்டச்சாலை
நடைபாதை
தொடர்வண்டிப்பாதை
குளம்
நீர்த்தேக்கம்
சதுப்பு நிலம்
நீர்பானசனம்
கடல்ஆழக்கோடு
மண்டலஎல்லை
மருத்துவமனை
அஞ்சலகம்
காவல்நிலையம்
சுற்றுலாவிடுதி
வாடிவீடு
மலையுச்சி
பறவைகள் சரணாலயம்
கலங்கரை விளக்கம்
மாவீரர் துயிலுமில்லம்
கோட்டை
தலைநகர்
வானூர்தி நிலையம்
துறைமுகம்
மீன்பிடித்துறை
நினைவுத்தூபி
Liberation Tigers Of
TAMIL EELAM
வெளியீட்டுப் பிரிவு
அனைத்துலகத் தொடர்பகம்

மையாகவுள்ள பொத்துவில் பிராந்தியத்தில் ஏழுக்கும் மேற்பட்ட புத்தர் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. திருகோணமலை, மன்னார், ஓமந்தை போன்ற இடங்களிலும் புத்தர் சிலைகள் நாட்டப்பட்டுள்ளன. மன்னாரில் 16 ஏக்கர் நிலத்தை புத்தர்கோயில் அமைப்பதற்காகச் சிங்களப்படையினர் முட்கம்பி வேலிபோட்டு அடைத்துள்ளனர். பழமை வாய்ந்த ஓமந்தைப் பிள்ளையார் கோயில் வீதியில் புத்தர்சிலை அமைக்கப்பட்டு இராணுவத்தினரின் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. ஓமந்தைப் பிள்ளையார் கோயில் மூடப்பட்டுள்ளது. பூசைகள் நடை பெறுவதில்லை. திருகோணமலை நகர சபைக்குச் சொந்தமான மணிக்கூட்டுச் சந்தி முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் புத்தர்சிலை நாட்டப்பட்டுள்ளது. அதன் பாதுகாப்பிற்காகப் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். புத்தமதக் கோட்பாடுகள் பௌத்த - சிங்களப் பேரினவாதிகளால் சிதைக்கப்படுகின்றன. அதேபோல் புத்தர் சிலைக்கும் களங்கம் ஏற்படுத்தத் தொடங்கியுள்ளார்கள். புத்தமதம் ஆரம்பித்த எழுநூறு ஆண்டுகளுக்குப் பின்புதான் இந்தியாவில் புத்தர் சிலைகள் தோன்றின. கி.மு 6ஆம் நூற்றாண்டில் புத்தமதம் தோன்றியது. புத்தர் சிலைகள் கி.பி 2ஆம், 3ஆம் நூற்றாண்டுகளில்தான் உருவாக்கப்பட்டன. இந்த இடைவெளிக்காலத்தில் புத்தமதச் சின்னங்களான ஞானவிருட்சம் (அரசமரம்), தர்மச்சக்கரம் என்பன வழிபடப்பட்டன. மூவகை கலைப்பாரம் பரியங்களின் கூட்டாகப் புத்தர் சிலைகள் இடம்பெறுகின்றன. இன்றைய பாகிஸ்தானின் வட-மேற்குப் பகுதியில் அவை முதன் முதலாகத் தோன்றின. அப்போது கிரேக்க, ரோம கலைப் பாரம்பரியங்கள் வட இந்தியக் கலைவடிவங்கள் மீது ஆதிக்கம் செலுத்தின. கிரேக்க கடவுளர்களின் பாணியில் புத்தரின் தலைப்பகுதி செதுக்கப்பட்டது. சிலையின் ஆடைகள் ரோமர்களின் ஆடை அணியும் பாணியில் போர்த்தப்பட்டன. வட - மேற்கு இந்தியாவில் இடம்பெற்ற கலைப் பாரம் பரியத்தை கிரேக்கோ - கந்தாரா (GRAECO – GANDHARA) பாரம்பரியம் என்பார்கள். இந்தப் பாரம்பரியத்தில் புத்தர் சிலைகள் வடிவமைக்கப்பட்டன. புத்தர்சிலை உருவாக்கத்தில் சில மாறாத அம்சங்கள் இந்தியாவில் தோன்றின. முகம் முட்டை வடிவத்திலும், கண்கள் தாமரை மலரைப் போன்றும் இருக்கவேண்டும் என்றும் வயிறு வரையான நெஞ்சுப்பகுதி ஒடுங்கியும் தோள் விரிந்தும், கைகள் நீண்டும் இருப்பதை வலியுறுத்தும் சிற்ப விதிமுறைகள் பிறந்தன. முழு உடலும் ஒழுங்காக வழுவழுப்பாக இருக்க வேண்டும் என்று சிலைகளைப் பார்ப்போர் மனதில் சாந்தி ஏற்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. உலகின் தலைசிறந்த கலைவடிவங்களில் ஒன்றாகவும், பாரம்பரிய வழிபாட்டுச் சின்னமாகவும் இடம்பெறும் புத்தர் சிலை, இராணுவ மேலாதிக்கக் குறியீடாகவும், தமிழருடைய மண்பறிப்பதற்கு உதவும் கருவியாகவும் சிங்கள பேரினவாதத்தால் மாற்றப்பட்டுள்ளது. சிறிய புத்தர் சிலையையும் அதன் பக்கத்தில்அரச மரக்கன்றையும் தமிழர் மண்ணில் முதற்கண் நாட்டுவார்கள். படிப்படியாக இராணுவப் பாதுகாப்பு, பிக்குகள் பிரசன்னம் என்பனவோடு சிங்களக் குடியேற்றக் கிராமமாக அது மாற்றப்படுவதோடு அதற்குச் சிங்களப் பெயரும் சூட்டப்படும். இலங்கைத் தீவின் மொத்த நிலப்பரப்பு 65,525 சதுர கிலோமீற்றர். 1948க்குப்பின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினால் கிழக்கு மாகாணத்தில் 7000 சதுர கிலோமீற்றரையும் வடக்கில் 600 சதுர கிலோமீற்றரையும் அரசு ஆக்கிரமித்துள்ளது. காலத்திற்குக் காலம் அரசு நடத்தும் “எல்லை மீள் வரைவு” (BOUNDARY DEMARCATION) சிங்களவர் குடியேறிய தமிழர் மண்ணை சிங்கள மாகாணங்களுடன் இணைக்கும் நோக்கைக் கொண்டது. முஸ்லிம்களும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். அம்பாறை திகவாவியில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான 937 ஏக்கர் நிலத்தில் ஜெயவர்த்தனா அரசு சிங்களவர்களைக் குடியேற்றியது. திகவாவியில் புத்த சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டது குடியேற்றத்திற்குக் காரணமாகச் சொல்லப்படுகிறது. சிங்களக் குடியேற்றம் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் செறிந்து காணப்படுகின்றன. 1921இல் திருமலைச் சிங்களவர்களின் விகிதம் 4.5% இருந்தது. 1981இல் 33.6% ஆக உயர்ந்ததோடு இன்னும் உயர்ந்து கொண்டு போகிறது. பௌத்த சிங்களப் பேரினவாதம் முன்னெடுக்கும் “தர்மதீபம்” என்ற நச்சுக் கருத்து நாடு இரண்டுபடுவதை ஊக்குவிக்கும் என்பது அரசியல் ஆய்வாளர் முடிவு. புத்தரால் பௌத்தமதக் காவலராக நியமிக்கப்பட்டவர்கள் சிங்கள இனத்தவர்களே. இலங்கை முழுவதும் புத்தர் அருளால் சிங்









களவர்களுக்கு தரப்பட்ட புனிதபூமி என்பன தர்மதீபக் கோட்பாட்டின் முக்கிய அம்சங்களாகும். சிங்கள இனவாதத்தின் மூலப்பொருள் தர்மதீபக் கோட்பாடு (THE DHRAMA DEEPA CONCEPT) என்ற காரணத்தால் தமிழர்களுடைய இன, மொழி உள்ளிட்ட உரிமைகளையும் தாயகக் கோட்பாட்டையும் அவர்கள் ஏற்க மறுக்கின்றனர். இனம், மொழி, மதம், மண் ஆகிய நான்கின் மொத்த வடிவமாகப் புத்தர் சிலை விவகாரம் உருவெடுத்துள்ளது. மூடனும் முதலையும் கொண்டது விடா என்பார்கள். இந்த நாட்டின் இன்றைய வரலாற்றை விளக்க இது போதுமானது.

நன்றி: கலாநிதி க. சோமாஸ்கந்தன்
- விடுதலைப்புலிகள் -

# 2023
# பேச்சுவார்த்தைகளின் ஆண்டா? பேய்க்காட்டப்படும் ஆண்டா?

01.01.2023



புதிய ஆண்டு பேச்சுவார்த்தைகளோடு தொடங்குகின்றது. புத்தாண்டு பிறந்த கையோடு மூன்று அல்லது நாலு நாட்களுக்கு தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக மூன்று நாட்கள் என்பதே வெளியுலகத்தை கவர்வதற்கான ஒரு ஏற்பாடுதான். அரசாங்கம் பேச்சுவார்த்தைகளில் சீரியஸ் ஆக இருக்கிறது என்பதை காட்டுவதற்கான ஓர் உத்தி அது. அவ்வாறு காட்டவேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உண்டு. ஏனெனில் இப்பொழுது நடக்கும் பேச்சுவார்த்தைகள் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைத் தர வேண்டும் என்பதை விடவும், பொருளாதார நெருக்கடியில் இருந்து அரசாங்கத்தைப் பிணை எடுக்கக்கூடிய நாடுகளை கவர்வதற்கான ஒரு ஏற்பாடுதான்.

மோதலில் ஈடுபடும் தரப்புகள் அல்லது பிணக்கிற்கு உட்பட்ட தரப்புகள் எப்பொழுது பேச்சுவார்த்தைக்கு வரும் என்றால், அரசியல் வலுச்சமநிலை மாறும் போதுதான். அரசியல் வலுச்சமநிலையை போரின் மூலமும் மாற்றலாம். மக்கள் போராட்டங்களின் மூலமும் மாற்றலாம். தேர்தல் முடிவுகளின் மூலமும் மாற்றலாம். இலங்கைத்தீவின் வலுச்சமநிலை பொருளாதார நெருக்கடியின் விளைவாக தோன்றிய தன்னெழுச்சி போராட்டத்தின் மூலம் மாற்றப்பட்டு விட்டது. தன்னெழுச்சி போராட்டங்கள் சிங்கள பௌத்த கடுந்தேசிய வாதத்தை பதுங்க செய்துவிட்டன. சிங்கள பௌத்த கடுந்தேசியவாதமானது சிங்கள பௌத்த லிபரல் முகமூடியின் பின் மறைவெடுத்து நிற்கிறது. தாமரை மொட்டுக் கட்சி ஒற்றையானைக்கு பின் பதுங்கி நிற்கின்றது. இதனால் ஏற்பட்ட வலுச்சமநிலை மாற்றம்தான் ரணில் விக்கிரமசிங்கவின் பேச்சுவார்த்தைக்கான அழைப்புக்குக் காரணம்.




இதைத் தமிழ்த்தரப்பின் நோக்குநிலையில் இருந்து சொன்னால், பேச்சுவார்த்தைக்கான அரசியல் வலுச்சமநிலை இலங்கைத்தீவில் உருவாக காரணம் தமிழ்த்தரப்பின் போராட்டங்கள் அல்ல. தமிழ்த்தரப்பு பலமடைந்ததாலும் அல்ல. மாறாக சிங்களத்தரப்பு தனக்குள்தானே மோதி பலவீனம் அடைந்ததே காரணம். இவ்வாறு சிங்களத் தரப்பு பலவீனமடைந்ததால் இலங்கைத்தீவின் அரசியல் வலுச்சமநிலை மாற்றம் கண்டுள்ளது. இதை பயன்படுத்தி வெளிநாடுகள் இலங்கைத்தீவின் மீதான தமது பிடியை மேலும் இறுக்க முற்படும்பொழுது இத்தீவின் அரசியல், இராணுவ, பொருளாதார வலுச்சமநிலையில் மேலும் மாற்றம் வரலாம்.

உதய கம்மன்பில அதைத்தான் "பொருளாதார நெருக்கடியை பகடைக்காயாக கொண்டு நாட்டுக்கு எதிரான தீர்மானங்களை செயற்படுத்துவதாயின், 30 வருடகால யுத்தத்தை வெற்றிகொள்ளாமல் இருந்திருக்கலாம்"என்று கூறியிருக்கிறார்.

கஜேந்திரக்குமார் அதைத்தான் தமிழ் நோக்குநிலையில் இருந்து கூறியிருக்கிறார். அதாவது பொருளாதார நெருக்கடி காரணமாக சிங்களத்தரப்பு பலவீனம் அடைந்து விட்டது. அதனால் பேச்சுவார்த்தைக்கு இறங்கி வருகிறது. எனவே தமிழ்த் தரப்பு தனது பேரத்தை பலப்படுத்த வேண்டும் என்று.

ஆனால் இது தமிழ்த்தரப்பின் போராட்டத்தாலோ அல்லது அதிகரித்த பலத்தாலோ ஏற்பட்ட வலுச்சமநிலை மாற்றம் அல்ல. இந்த வலுச்சமநிலை மாற்றத்தில் அரசாங்கத்துக்கு உதவி புரியும் நாடுகளின் அழுத்தமும் ஓரளவுக்கு உண்டு. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான உதவிகளும் இனப்பிரச்சனைக்கான தீர்வும் ஒரே பொதிக்குள் வைக்கப்பட வேண்டும் என்று மேற்கு நாடுகள் வலியுறுத்துகின்றன. அதேசமயம் நடந்து முடிந்த ஜெனிவா கூட்டத்தொடரில் இந்தியாவின் நிலைப்பாடும் இதுவாக இருந்தது. எனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இனப்பிரச்சினைக்கான தீர்வை கண்டுபிடிக்க வேண்டும் என்ற அழுத்தம் அரசாங்கத்தின் மீது உண்டு. அதுவும் அரசாங்கம் பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன என்று ஒரு தோற்றத்தை கட்டியெழுப்பக் காரணம். எனவே இதில் தமிழ்த்தரப்பின் பேரபலம் என்பது முதலாவதாக சிங்களத்தரப்பின் வீழ்ச்சியாகவும், இரண்டாவதாக வெளிஉலகத்தின் அழுத்தமாகவும் காணப்படுகிறது.

அதனால் பேச்சுவார்த்தையை எதிர்பார்ப்போடு பார்க்கும் வெளியுலகத்திற்கு தமிழ்த்தரப்பு அதில் ஈடுபடும்-என்கேஜ்-Engage-பண்ணும் என்ற செய்தி கொடுக்கப்பட வேண்டும். இதன் பொருள் மேற்கு நாடுகள் ஒரு தீர்வை பெற்று தரும் என்பதல்ல. மாறாக, நவீன ராஜதந்திரவியல் எனப்படுவது என்கேஜ்மென்ட்தான். இந்த அடிப்படையில், ஒரு தரப்பாக சிந்தித்தால், ஒரு தேசமாக சிந்தித்தால், பேச்சுவார்த்தையில் என்கேஜ் பண்ண வேண்டும். தவிர தமிழ்த்தரப்பிடம் நாட்டில் சொந்த மாகப் பலம் எதுவும் கிடையாது. அந்த பலத்தின் காரணமாக வலுச்சமநிலை மாறவும் இல்லை. எனவே தன் பலம் எது வென்று கண்டு தமிழ்த்தரப்பு பேச்சில் ஈடுபட வேண்டும். அதன் பொருள் பேச்சுவார்த்தையை இதயபூர்வமாக நம்ப வேண்டும் என்பதல்ல. இதுவிடயத்தில் "என்கேஜ் அண்ட் எக்ஸ்போஸ்" அதாவது ஈடுபட்டு அதை அம்பலப்படுத்துவது என்ற ஒரு தந்திரத்தை தமிழ்த்தரப்பு கடைப்பிடிக்க வேண்டும்.

சிங்களபௌத்த பெருந்தேசியவாதத்தின் கடும்போக்குவாதிகள் லிபரல் முகமூடி அணிந்த ஒற்றை யானைக்கு பின் பதுங்குகிறார்கள். அவர்களுக்கு உலக அங்கீகாரத்தை பெறுவதற்கு அந்த ஒற்றை யானைய ஏற்பாடு செய்யும் பேச்சுவார்த்தை என்ற தோற்றமாயை தேவை. எனவே அதைப் பயன்படுத்தி பதுங்கியிருக்கும் சிங்களபௌத்த பெருந்தேசியவாதத்தின் கடும்போக்காளர்களை ஒரு தீர்வை நோக்கி வளைத்தெடுக்கலாம் என்று மேற்கு நாடுகள் நம்பக்கூடும்.

அந்த நம்பிக்கை தமிழ் மக்களின் சுமார் ஒரு நூற்றாண்டு கால அனுபவத்துக்கு பொருந்தி வரவில்லை என்பதனை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு தமிழ்த்தரப்புக்கு உண்டு. எனவே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு எதிர்த்தரப்பை அம்பலப்படுத்த வேண்டும். அதுதான் இப்பொழுது உயர்ந்திருக்கும் தமிழ் தரப்பின் பேரத்தை தொடர்ந்து உயர்வாக வைத்திருக்க உதவும்.

பன்னாட்டு நாணயநிதியத்தின் உதவிகள் எதிர்பார்த்த வேகத்தில் கிடைக்கவில்லை. மேலும் அந்த உதவிகள் கடனை அடைக்க போதுமானவை அல்ல. ஆனால் அந்த உதவிகள் கிடைத்தால் ஏனைய நாடுகளிடம் உதவி பெறத் தேவையான அங்கீகாரம் அரசாங்கத்திற்கு கிடைக்கக்கூடும். எனவே அந்த அங்கீகாரத்தை நோக்கி உழைக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உண்டு. இந்த அடிப்படையில் பார்த்தால் அரசாங்கம் மேற்குநாடுகளை சமாளிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

அதனால் ரணில் விக்கிரமசிங்க முன்பு 2015இல் இருந்து 2018வரையிலும் முன்னெடுத்த நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை ஒரு புதிய வடிவத்தில் முன்னெடுக்க முயற்சிப்பதாக தெரிகிறது. தென்னாபிரிக்கப் பாணியிலான நல்லிணக்கப் பொறிமுறை என்ற உரையாடல் அதைத்தான் குறிக்கிறது. ஆனால் நிலைமாறுகால நீதி என்பது இலங்கைத்தீவைப் பொறுத்த வரையிலும் ஓர் அழகிய பொய்யாகிவிட்டது. ரணிலோடு நிலைமாறுகால நீதியின் பங்காளியாகச் செய்யப்பட்ட கூட்டமைப்பின் பேச்சாளர் 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வவுனியாவில் வைத்துச் சொன்னார்..." 6 ஆண்டுகளாக ஒரு பரிசோதனையை முயற்சி செய்தோம். அதில் தோற்றுவிட்டோம்." என்று. அவ்வாறு ஏற்கனவே இந்த நாடு பரிசோதித்து தோல்வி கண்ட ஒரு விடயத்தை மீண்டும் ரணில் விக்கிரமசிங்க கையில் எடுக்கப் போகிறாரா ?

முன்னைய நிலைமாறுகால நீதிச் செய்முறைகளின்போது கூட்டமைப்பு அரசாங்கத்தோடு இணைந்து யாப்புருவாக்க முயற்சிகளில் ஈடுபட்டது. ஒரு புதிய யாப்புக்கான இடைக்கால வரைபு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அமர்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா கூறிய வார்த்தைகளை இங்கே தமிழ்த்தரப்பு மீட்டுப் பார்க்க வேண்டும். "சம்பந்தரின் காலத்திலேயே ஒரு தீர்வைக் காண வேண்டும். அவரைப் போல விட்டுக்கொடுக்கும் ஒரு தமிழ்த் தலைவர் இனி வரமாட்டார்" என்று டிலான் தெரிவித்திருந்தார். அது உண்மை. ஏனென்றால் அந்தளவுக்கு சம்பந்தர் விட்டுக் கொடுத்தார். பிளவுபடாத பிரிக்கப்பட முடியாத நாட்டுக்குள் தீர்வு என்று சம்பந்தர் காயத்திரி மந்திரம் போல திரும்பத்திரும்பச் சொன்னார். ஆனால் அது எதுவுமே மகிந்த அணியை சமாதானப்படுத்தவில்லை. அவர்கள் யாப்புருவாக்க முயற்சியை இடைக்கால வரைபோடு குழப்பினார்கள்.

இப்பொழுது மறுபடியும் சம்பந்தர் விட்டுக்கொடுக்கப் போகிறாரா இல்லையா என்பதனை தமிழ்மக்கள் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். டிலான் வழங்கிய பாராட்டு பத்திரத்தை விடவும் தமிழ் மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் சம்பந்தருக்கு வழங்கிய தண்டனை பெரியது.

எனவே கூட்டமைப்பு இம்முறை ஏனைய கட்சிகளோடு இணைந்து திட்டவட்டமாக சில முடிவுகளை எடுக்கவேண்டும். முதலாவதாக பேச்சுவார்த்தைக்கான கட்டமைப்பை மறுகட்டமைப்பை செய்ய வேண்டும் இப்பொழுது நடந்து கொண்டிருப்பது சர்வகட்சி மாநாடு. அது வெளித்தோற்றத்திற்கு எல்லாக் கட்சிகளின் கருத்துக்களையும் கேட்கும் ஒரு ஜனநாயக ஏற்பாடாக தோன்றலாம். ஆனால் கடந்த 75 ஆண்டுகால அனுபவம் என்னவென்றால், இனப் பிரச்சினைக்கான தீர்வு பொறுத்து எல்லா சர்வகட்சி மாநாடுகளும் ஏமாற்று வித்தைகளே. எனவே பேச்சுவார்த்தைகளை பிணக்குக்கு உட்பட்ட தரப்புகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளாக மாற்ற வேண்டும். அதன்படி தமிழ்த்தரப்பு சிங்களத் தரப்புடனும் முஸ்லிம் தரப்புடனும் பேச வேண்டும். அரசாங்கமே சிங்களத் தரப்பை பிரதிநிதித்துவப் படுத்த வேண்டும். எல்லா கட்சிகளையும் கூட்டிக்கொண்டு வந்து சர்வகட்சி மாநாடு என்று சொல்லி குழப்பியடிக்க முடியாது. சிங்களக் கட்சிகளை சமாளிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குரியது. அரசாங்கத்தோடு நிற்கும் தமிழ்க் கட்சிகளையும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அரசு தரப்பாகவே பார்க்க வேண்டும். இவ்வாறு பேச்சுவார்த்தைகளை மறு கட்டமைப்பு செய்ய வேண்டும்.

அடுத்த கட்டமாக மூன்றாவது தரப்பை உள்ளே கொண்டு வர வேண்டும். இந்தியாவும் உட்பட மேற்கு நாடுகளை இணைத் தலைமை நாடுகளாக உள்ளே இறக்க வேண்டும். அண்மையில் முன்னாள் சமாதான தூதுவரான எரிக் சொல் ஹெய்ம் கூறியிருக்கிறார்... மூன்றாவது தரப்பு தேவையில்லை என்று. அது அவருடைய தனிப்பட்ட அபிப்பிராயம். அதுவே தமிழ்த்தரப்பின் அபிப்பிராயமாக இருக்கத் தேவையில்லை.

இவ்வாறு பேச்சுவார்த்தைகளை மறுகட்டமைப்பு செய்துவிட்டு பேசத் தொடங்கலாம். ரணில் விக்கிரமசிங்க தயாரிக்கும் நாடகத்தில் பங்காளிகளாக இணைவதா அல்லது தமது மக்களுக்கு விசுவாசமாக இருப்பதா என்பதை தமிழ் கட்சிகள் தீர்மானிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. போன தடவை நிலைமாறுகால நீதியின் பங்காளிகளாக மாறப் போய் ஆறு ஆசனங்களை இழந்த கூட்டமைப்பு இனிமேலும் "பிளவுபடாத பிரிக்கப்பட முடியாத இலங்கைத் தீவுக்குள்" என்று உச்சாடனம் செய்யத் தேவையில்லை. டிலான் பெரேராக்களின் பாராட்டுப் பத்திரமா? அல்லது அல்லது தமது சொந்த மக்களின் தோல்வியா? என்பதனை தீர்மானிக்க வேண்டிய ஆண்டு இது.

நன்றி: நிலாந்தன்



# தமிழீழ உட்கட்டுமானம்

## STRUCTURES OF THAMILEELAM



சுயநிறைவான தன்னில்தானே தங்கிநிற்கும் பொருளாதார வாழ்வுடைய சமூகமாக எமது சமூகம் உருவாகவேண்டும் என்பதே, எனது விருப்பம்: மக்கள் தம்மைத்தாமே ஆளும் உரிமையுடைய சனநாயக ஆட்சி முறையையே நான் விரும்புகின்றேன். இந்தப் புதிய சமூகத்தில், உழைக்கும் மக்கள் மத்தியில் பொருளாதார சமத்துவம் நிலவ வேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. திரு. வே. பிரபாகரன் அவர்கள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வெளியீடு




## தமிழீழத்தின் பாரிய / நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள்

| 1.1. | கிளிநொச்சி மாவட்டம் | நீர் பாயும் பரப்பளவு [ஹெக்டேயர்] |
|---|---|---|
| 1. | புதுமுறிப்புக் குளம் | 399 |
| 2. | பிரமந்த ஆறு | 244 |
| 3. | கல்மடுக்குளம் | 1396 |
| 4. | இரணைமடுக்குளம் | 8451 |
| 5. | கனகாம்பிகைக்குளம் | 105 |
| 6. | அக்கராயன் குளம் | 1285 |
| 7. | வன்னேரிக்குளம் | 139 |
| 8. | கரியாலை நாகபடுவான் | 608 |

| 1.2. | மன்னார் மாவட்டம் | நீர் பாயும் பரப்பளவு [ஹெக்டேயர்] |
|---|---|---|
| 1. | அடம்பன் குளம் | 162 |
| 2. | வெலிமரதமடு குளம் | 304 |
| 3. | பெரியமடு குளம் | 304 |
| 4. | தச்சனா மருதமடு குளம் | 215 |
| 5. | ஜயன் குளம் | 9890 |
| 6. | முல்லைக்குளம் | 152 |
| 7. | பெரிய பண்டிவிசிச்சான்குளம் | 244 |
| 8. | குராய்க்குளம் | 215 |
| 9. | அகத்தி முறிப்பு குளம் | 1837 |
| 10. | வியாடிக்குளம் | 495 |

| 1.3. | முல்லைத்தீவு மாவட்டம் | நீர் பாயும் பரப்பளவு [ஹெக்டேயர்] |
|---|---|---|
| 1. | விசுவமடுக்குளம் | 121 |
| 2. | உடையார்கட்டு குளம் | 486 |
| 3. | மருதன் குளம் | 182 |
| 4. | மருதன் குளம் | 144 |
| 5. | கோட்டை கட்டின குளம் | 164 |
| 6. | அம்பல பெருமாள் குளம் | 252 |
| 7. | ஐயன் குளம் | 385 |
| 8. | முத்தையன்கட்டு குளம் | 2473 |
| 9. | கனுகேணி குளம் | 734 |
| 10. | மடவாலசிங்கம் குளம் | 162 |
| 11. | திரன கண்டல் குளம் | 121 |
| 12. | தின்னியன் குளம் | 304 |
| 13. | கல்விலன் குளம் | 162 |
| 14. | மல்லாவி குளம் | 132 |
| 15. | கோல்லனேனன் குளம் | 106 |
| 16. | தண்ணீர் முறிப்புக் குளம் | 957 |
| 17. | நித்திகைக்குளம் | 154 |
| 18. | வவுனிக்குளம் | 2791 |
| 19. | பனங்காமம் குளம் | 121 |

| 1.4. | வவுனியா மாவட்டம் | நீர் பாயும் பரப்பளவு [ஹெக்டேயர்] |
|---|---|---|
| 1. | கனகராயன் | 94 |
| 2. | கொம்புவந்த குளம் | 89 |
| 3. | மல்லிகைக்குளம் | 121 |
| 4. | கொக்கச்சான் குளம் | 87 |
| 5. | சேமமடுவ குளம் | 243 |
| 6. | நாம்பன் குளம் | 104 |
| 7. | கல்மடு குளம் | 162 |
| 8. | ஈரபொதிகை குளம் | 96 |
| 9. | மாமடுவ குளம் | 267 |
| 10. | மாகரம்பை குளம் | 87 |
| 11. | மூனயாமான் குளம் | 87 |
| 12. | வேலன் குளம் | 91 |
| 13. | பெரிய தம்பனைக் குளம் | 138 |
| 14. | பம்பைமடு குளம் | 105 |
| 15. | வவுனியாக்குளம் | 172 |
| 16. | மகாகாய்ச்சி கொட்டியாக்குளம் | 104 |
| 17. | மடுகந்தைக்குளம் | 162 |
| 18. | ராஜேந்திரன் குளம் | 119 |
| 19. | ஈறற் பெரிய குளம் | 204 |
| 20. | பாவற் குளம் | 1673 |
| 21. | அரிய மருதமடு குளம் | 92 |
| 22. | முகந்தன் குளம் | 312 |
| 23. | மருதமடு குளம் | 177 |

| 1.5. | மட்டக்களப்பு மாவட்டம் | நீர் பாயும் பரப்பளவு [ஹெக்டேயர்] |
|---|---|---|
| 1. | கட்டு முறிப்பு குளம் | 344 |
| 2. | மருதன்கேணி குளம் | 202 |
| 3. | கிரிஞ்சி ஓடை குளம் | 101 |
| 4. | ஆனை சுட்ட கட்டுக்குளம் | 126 |
| 5. | வாகசேரி குளம் | 3108 |
| 6. | வட்டு முனை குளம் | 324 |
| 7. | தரவை குளம் | 81 |
| 8. | கரடியன் குளம் | 144 |
| 9. | கித்துல் குளம் | 324 |
| 10. | றுகாம் குளம் | 3440 |
| 11. | உன்னிச்சை குளம் | 5163 |
| 12. | சிவகபாத் குளம் | 122 |
| 13. | கட்டுகமுனை குளம் | 3088 |
| 14. | மகிலடிதிரு குளம் | 81 |
| 15. | அடைச்சகல் குளம் | 109 |
| 16. | வெலிகந்தைக் குளம் | 138 |
| 17. | புலுக்குணாவ குளம் | 1709 |
| 18. | தம்பன் கேணிக் குளம் | 275 |
| 19. | பெரியபலுகாமம் குளம் | 86 |
| 20. | பெரிய கோவில் போரைக்குளம் | 139 |
| 21. | மகிலூர் பெரிய குளம் | 127 |

| 1.6. | திருகோணமலை மாவட்டம் | நீர் பாயும் பரப்பளவு [ஹெக்டேயர்] |
|---|---|---|
| 1. | மடவாச்சியா வேவ. | 116 |
| 2. | நீலாபனிக்கன் குளம் | 416 |
| 3. | ஏதண்ம முறிப்பு குளம் | 83 |
| 4. | கிவுலர் கடவேவ. | 105 |
| 5. | பெத்த வேவ. | 93 |
| 6. | பொலிகண்டி குளம் | 118 |
| 7. | மகாகல்லம்பத்து குளம் | 291 |
| 8. | மடுவ குளம் | 106 |
| 9. | பெரிய எலும்புரி | 83 |
| 10. | பெரிய குளம் | 126 |
| 11. | எத்தாவெண்டி வேவ. | 129 |
| 12. | மகாடிவுவல் வேவ. | 565 |
| 13. | மொறவெவ (முதலிக்குளம்) | 1635 |
| 14. | ஆண்டன்ன குளம் | 183 |
| 15. | கல்மெட்டியாவ | 260 |
| 16. | பரவிப்பாஞ்சான் குளம் | --? |
| 17. | குரங்குப் பாஞ்சான் குளம் | 202 |
| 18. | எல்லந்தக் குளம் | 143 |
| 19. | அல்லைக்குளம் | 87 |
| 20. | வான் எல. | 417 |
| 21. | வென்கேசன் வேன்ரேசன் குளம் | 521 |
| 22. | கந்தளாய் | 5049 |

| 1.7. | புத்தளம் மாவட்டம் | நீர் பாயும் பரப்பளவு [ஹெக்டேயர்] |
|---|---|---|
| 1. | பகரிய | 146 |
| 2. | தக்வோவ | 888 |
| 3. | மகன்தாவெவ | 139 |
| 4. | எழுவான் குளம் | 146 |
| 5. | இங்கினிமிட்டிய | 2643 |
| 6. | மகசு வெவ | 364 |
| 7. | உரியாவ குளம் | 116 |
| 8. | மீயாவ குளம் | 70 |
| 9. | பொத்துவிலு | 81 |
| 10. | கெட்டு கச்சிய | 347 |
| 11. | கறுக்குமனுவ | 81 |
| 12. | பெரிய கடவெல | 108 |
| 13. | மகாகும்புக்கடவல | 132 |
| 14. | நவடன் குளம் | 121 |
| 15. | சியாவஸ் குளம் | 219 |
| 16. | வத்துலு ஓயா | 194 |
| 17. | வெல்லாவெல | 36 |
| 18. | மரடன் சோல | 31 |
| 19. | கட்டுப் பொத்த | 198 |
| 20. | ஆனை வழுந்தவ | 81 |
| 21. | எரக்க வெல | 33 |

| 1.8. | அம்பாறை மாவட்டம் | நீர் பாயும் பரப்பளவு (ஹெக்டேயர்) |
|---|---|---|
| 1. | ரெம் பிட்டிய | 174 |
| 2. | பொற பெல | 81 |
| 3. | நவகிரி | 703 |
| 4. | விரகொட | 3743 |
| 5. | சட்டியந்தலாவ | 1128 |
| 6. | வலத்த பிட்டி | 283 |
| 7. | நமன் ஓயா | 951 |
| 8. | சேனனாயக்கா சமுத்திரம் | 43, 813 |
| 9. | அம்பலன் ஓயா | 929 |
| 10. | கஞ்சிகுடிச்சாறு | 688 |
| 11. | சாகமம் குளம் | 1364 |
| 12. | பள்ளவன் ஓயா | 1311 |
| 13. | பன்னலகம | 249 |
| 14. | வம்மிக்குளம் | --? |
| 15. | ரூபஸ் குளம் | 413 |
| 16. | ரோட்டி குளம் | 542 |
| 17. | சீமணைகுளம் | 81 |
| 18. | லக்கல குளம் | 263 |
| 19. | ரட்டில குளம் | 170 |
| 20. | நனுல குளம் | 103 |
| 21. | பனாம குளம் | 304 |

## தமிழீழத்திலுள்ள சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்

| | மாவட்டம் | குளங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | யாழ்ப்பாணம் | 918 |
| 2. | கிளிநொச்சி | 190 |
| 3. | மன்னார் | 327 |
| 4. | முல்லைத்தீவு | 132 |
| 5. | வவுனியா | 615 |
| 6. | திருகோணமலை | -- |
| 7. | மட்டக்களப்பு | -- |
| 8. | அம்பாறை | -- |
| 9. | புத்தளம் | – |

தொடரும்...






05.01.2008 அன்று மன்னார் மாவட்டம் பள்ளமடுப்பகுதியில் சிறீலங்கா படைகளின் ஆழஊடுருவும் படைப்பிரிவு நடாத்திய கிளைமோர்த் தாக்குதலில், படைய புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் கேணல் சாள்ஸ் லெப்டினன்ட் சுகந்தன் லெப்டினன்ட் காவலன் லெப்டினன்ட் வீரமாறன் ஆகிய போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.



**முக்கிய அறிவித்தல்**

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும்,
மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.
தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு

437.345.4203


30ஆம் ஆண்டு
வீரவணக்கம்
மேஜர் வேலன் (மலரவன்)
(சுந்தரலிங்கம் சுந்தரவேல்)
வியாபாரிமூலை, பருத்தித்துறை
கடற்புலி கப்டன் நாயகன்
(சிவலிங்கம் கேசவன்)
பொலிகண்டி, வல்வெட்டித்துறை
கேணல் கிட்டு
(சதாசிவம் கிருஷ்ணகுமார்)
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்
கடற்புலி கப்டன் ஜீவா
(நடராசா மார்க்ஜெயராஜ்)
கொய்யாத்தோட்ட ஒழுங்கை,
பாசையூர், யாழ்ப்பாணம்
கடற்புலி லெப். தூயவன்
(மகாலிங்கம் ஜெயலிங்கம்)
கண்டிவீதி, யாழ்ப்பாணம்
கடற்புலி குணசீலன்
(சேகரன்குருஸ் மைக்கல்ஜீவா)
2ம் குறுக்குத்தொரு,
உதயபுரம், மணியம்தோட்டம்
கடற்புலி லெப். நல்லவன்
(சிவஞானசுந்தரம் ரமேஸ்)
மணியந்தோட்டம், கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
லெப். கேணல் குட்டிசிறி
(இராசையா சிறிகணேசன்)
சுதமலை வடக்கு, யாழ்ப்பாணம்
கடற்புலி கப்டன் றொசான்
(அரத்தினசிங்கம் அருணராசா)
அரசடி வீதி,
நலலூர், யாழ்ப்பாணம்
இந்திய ஆக்கிரமிப்புச் சதிக்கு உள்ளாகி
தமிழர் கடலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட
வேங்கைகளின் 30ஆம் ஆண்டு
நினைவு வணக்க நாள் – 16.01.2023
கடற்புலி லெப். அமுதன்
(அலோசியஸ் ஜான்சன்)
2ம் குறுக்குத்தெரு, நாவாந்துறை
வடக்கு, யாழ்ப்பாணம்
சங்கத்தமிழ்